இனிய தமிழ் உரைக்கட்டுக்கள்.

பகுப்பு·3.

TB
031,6(8)
M30
149795

# நவீன தமிழ் வாசகப் புத்தகம்

(எட்டாம் வகுப்பிற்குரியது)

16

OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS
3 - OCT 1930

வித்வான்

வீ. ஆறுமுகஞ் சேர்வை

எழுதியது

1240
494 8186

பி. [illegible] சிதம்பர முதலியார் பிரதர்ஸ்,

[illegible]ஸ் & மதுரை

Rcs [illegible] [illegible]30 [விலை அணு 8

TB
031,6 (ஃ)
N30
149795

149795
சென்னை-600 008.

Printed at the
VIVEKANANDA PRESS
MADURA 1930.

TB
031.6(8)
N30

# முகவுரை

கல்விகற்கும்பிள்ளைகள் ஆரம்பக்கல்விகற்று எழுத்துக் களைக்கூட்டி வாக்கி[illegible]தொடர்களைப் படிக்கத்தெரிந்துகொண் டபின், அவர்களுக்கு ஒவ்வொரு வகுப்பிலும் கணக்கு இலக் கணம், கல்வியின்உயர்வு, நீர், கைத்தொழில், வியாபாரம், பயிர்த் தொழில், தேசசரித்திரம், பூகோளம், வானசாஸ்திரம், மருத்துவம், சுகாதாரம், பெரியார்சரித்திரம், பிராணிகளின் இயற்கைகள், மரம் செடி கொடி முதலிய தாவரங்களின் தன் மைகள், புறநாட்டு வர்த்தமானங்கள், சுயநாட்டியல்புகள், அரசாங்கமுறைகள், உத்தியோகமுறைகள், மனிதரின் இயற் கைள், தெய்வபழிபாடுகள், பெரியாரைப்போற்றுதல், பொது நன்மையான காரியங்கள் முதலியவற்றை படிப்படியாக வகுப்புக்கேற்ற அளவில் போதித்தல் வேண்டும்.

அவ்வாறுபோதித்துவந்தால் அவர்கள் எதையும்எளிதில் பற்றிக்கொள்ளத்தக்க இளம்பருவத்தில்தங்கள்வாழ்க்கைக்குத் துணையாகும் பலசெயல்களையும்தெரிந்து, குடும்பப்பொறுப் பைஏற்றுநடத்தும் பருவம்வந்தவுடன் அதனைஏற்றுத்தங்கள் தங்களுக்கேற்ற தொழில்களைச்செய்து பொருள்தேடித்; தங்

கள் வாழ்க்கையை நல்லவிதத்தில் நடத்துவார்கள். அவர்களால் நாட்டிற்கு மேன்மையுண்டாகும்.

ஆதலின், மேற்கூறியவைகளில் சிலவற்றைப் போதிக்கும் பாடங்கள், அவ்வகுப்பு மாணவர்களுக்கேற்ற அளவில் இதில் எழுதப்பட்டிருக்கின்றன. இப்பாடங்களை ஆசிரியர்கள் ஏட்டுப்படிப்பாகமட்டும் போதிக்காமல் பொருளுணர்ச்சியுண்டாகும்படி மாணவர்களுக்குப் போதிப்பார்களாயின் அவர்கள் பலவகையிலும் நலமடைவார்கள்.

வீ. ஆறுமுகஞ் சேர்வை

# பொருளடக்கம்


| எண் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1. | தொல்காப்பியர் | 7 |
| 2. | புத்தமதத்தை வளர்த்த அசோகன் | 12 |
| 3. | கொல்லாமை | 27 |
| 4. | தமிழ் வியாசம் | 34 |
| 5. | லைபரேரியும், அதன் அவசியமும் | 42 |
| 6. | விக்கிரமார்க்கன் | 48 |
| 7. | நெப்போலியன்—I | 54 |
| 8. | நெப்போலியன்—II | 64 |
| 9. | லாலா லஜபதிராய் | 70 |
| 10. | பருவங்கள் | 80 |
| 11. | பானகல் அரசர் | 87 |
| 12. | மார்ட்டின் லூதர் | 93 |
| 13. | தாயுமானவர் | 101 |
| 14. | எறும்புகள் | 108 |
| 15. | தமிழர் பெருமை | 124 |
| 16. | அறம் | 130 |
| | **செய்யுட் பாடங்கள்** | |
| 17. | நீதிநெறிவிளக்கம் | 137 |

# வசனபாடங்கள்

# நவீன தமிழ் வாசகப் புத்தகம்

## 1. தொல்காப்பியர்

'தொல்காப்பியர்' என்பவர், பண்டைக்காலத்திலிருந்த தமிழ்ப்புலவர்களில் ஒருவர். சுமார் இரண்டாயிரத்திருநூற்று முப்பது ஆண்டுகட்கு முன்னிருந்தவர்; 'தொல்காப்பியம்' என்னும் பெரிய இலக்கணநூலை இயற்றியவர். தமிழ்நாட்டின் ஒருபகுதி கடலில் மூழ்கியகாலத்திலிருந்த 'பாண்டியன்மா கீர்த்தி என்னும் 'தென்னவன்' காலமும், தொல்காப்பியர் காலமும் ஒன்றாகும்.

இத்தொல்காப்பியர், பண்டைக்காலத்துத் தமிழ்ப்பழங் குடிகளாகிய குறுக்கையர், ஏயர்கோ, காப்பியன், சேக்கிழான் முதலியவைகளுள், காப்பியக்குடியிலே பிறந்தவர்; காப்பியக் குடி மிகப்பழமையானதாதலின், அதற்கு, 'தொல்காப்பியக் குடி' என்று பெயராயிற்று; தொல்—பழமை; அந்தத் தொல் காப்பியக்குடியில் பிறந்த இவருக்கு, அக்காரணம்பற்றித் 'தொல்காப்பியர்' என்னும்பெயர் வழங்கலாயிற்று. இவரால் செய்யப்பட்ட இலக்கணநூலும், 'தொல்காப்பியம்' என இவர்பெயரைக்கொண்டே நிலைபெற்றது.

இத்தொல்காப்பியர், அகத்தியரிடம் தமிழ்க்கல்விகற்ற வர்; அகத்தியர், நெடுங்காலத்திற்குமுன் தமிழ்நாட்டில் பொதி கைமலையில்இருந்தவர்; இவர் தமிழ்மொழியை ஒழுங்குபடுத்தி

அதற்கு இலக்கணம்செய்தவர்; இவர்செய்த இலக்கணநூல், 'அகத்தியம்' என்பதாகும். இதில், 'சிற்றகத்தியம் பேரகத்தியமென இரண்டுண்டு. இவர்காலத்தில், மாபுராணம், பூதபுராணம், இசைநுணுக்கம்முதலிய தமிழ்நூல்கள்இருந்தன. இவர், பொதிகைமலையிலிருந்த காரணத்தால் பொதிகைமுனி, என்றபெயரையும், தமிழை ஒழுங்குபடுத்தியகாரணத்தால், 'தமிழ்முனி, என்றபெயரையும் பெற்றிருந்தார். இவருக்குத் தொல்காப்பியர்தவிர அதங்கோட்டாசான், துராலிங்கன், செம்பூட்சேய், வையாபிகன், வாய்ப்பியன், பனம்பாரன், கழாரம்பன், அவிநயன், காக்கைபாடினியன், நற்றத்தன், வாமநன் என்பவர்களும் மாணவர்களாயிருந்தார்கள். தொல்காப்பியர் உட்பட அகத்தியருடையமாணவர் பன்னிரண்டுபேர் ஆவர்.

'பாண்டியன் மாகீர்த்தி' என்னும்தென்னவன் முதற்சங்கமிருந்த தென்மதுரையிலிருந்து தமிழ்நாட்டை ஆண்டுவந்தகாலத்தில், ஒருசமயம் அந்நாட்டின் ஒருபகுதியும், தென்மதுரையும், முதற்சங்கமும் கடலில்மூழ்கிவிட்டன. பிறகு, அப்பாண்டியன், எஞ்சியிருந்த தமிழ்நாட்டோடு, பிறநாடுகளைக் கைப்பற்றிச் சேர்த்துத் தமிழ்நாட்டை விசாலப்படுத்திப் பொருநையாறு கடலோடுகலக்கின்ற இடத்திற்கு அருகில் 'அலைவாய்' என்ற தலைநகரைஉண்டாக்கி அதிலிருந்து அரசு செலுத்திவந்தான். அக்காலத்தில், தொல்காப்பியர், தம்முடைய ஆசிரியர்செய்த 'அகத்தியம்' என்னும் நூலையும், மாபுராணம், பூதபுராணம்முதலிய நூல்களையும படித்துணர்ந்து, அகத்தியத்திற்கு வழிநூலாகத் தொல்காப்பியத்தைச்செய்தனர்.

அவ்வாறுசெய்தபின், அதனைப் பாண்டியன்மாகீர்த்தியின் சபையில் அரங்கேற்றவிரும்பி, அச்சபையில் பாண்டியனுட

னிருந்து கேட்குமாறு, அகத்தியரின் மாணவர்களில் ஒருவராகிய அதங்கோட்டாசிரியரை வேண்டினர். அப்போது, அகத்தியர்க்குத் தொல்காப்பியர்மீது ஒருகாரணத்தால் வெறுப்பு ஏற்பட்டிருந்தது. அவ்வெறுப்பினுல், தொல்காப்பியர் விருப்பப்படி, அரங்கேற்றுமிடத்திலிருந்து, தொல்காப்பியத்தைக் கேட்கலாகாதென அதங்கோட்டாசிரியருக்குக் கட்டளையிட்டார்; தொல்காப்பியர், "நீர் சபையிலிருந்து என் நூலைக் கேட்டேதீர வேண்டும்" என்று அதங்கோட்டாசிரியரைக் கட்டாயப்படுத்தினர். அதங்கோட்டாசிரியர், இவ்விருவருடைய வார்த்தைகளையும் மறுக்கக்கூடாதவராயிருந்தார். எவருடையசொல்லைத் தட்டினலும் அவருக்குத் தம்மீது வெறுப்புண்டாகுமென்பது அதங்கோட்டாசிரியருக்குத் தெரிந்தது. அதனல், அவர், 'இருவருக்கும் நம்மீதுவெறுப்புண்டாகாதபடி, தொல்காப்பியத்தில் குற்றங்கள் கண்டுகூறி அதனை அரங்கேருதபடி செய்துவிடவேண்டும், என்று துணிந்து, தம்முடையஎண்ணத்தை அகத்தியர்க்குத்தெரிவித்தார்; அதற்கவர்இசைந்தார் பின்னர் அதங்கோட்டாசிரியர், தொல்காப்பியரிடத்தில், "நான் நூலைக்கேட்டு அதில்குற்றங்களிருந்தால் அவற்றை எடுத்துக்கூறுவேன்; அவ்வாறு குற்றங்கள் காணப்படின், நீர் அத்தொல்காப்பியத்தை அரங்கேற்ருது நிறுத்திக்கொள்ளவேண்டும்" என்ருர். அதற்குத் தொல்காப்பியர் உடன்பட்டார்.

பின்னர்த் தொல்காப்பியர், பாண்டியன் மாகீர்த்தியிடம், 'தென்னவர் பெருமானே! நான், 'தொல்காப்பியம் என்னும் அரியபெரிய இலக்கணநூலொன்றைச் செய்திருக்கின்றேன்: அதனை, நின்திருச்சபையில் அரங்கேற்ற அனுமதியளித்தல்

வேண்டும்” என்று கேட்டுக்கொண்டார். தென்னவன் அதற்கிசைந்து சபைகூட்டிவைத்தனன். அச்சபையில் பாண்டியனும், அவனைச்சார்ந்த அறிவுடையார்பலரும் கூடியிருந்தனர். அதங்கோட்டாசிரியரும் வந்திருந்தனர். தொல்காப்பியர், தம்நூலாகிய தொல்காப்பியத்தை அரங்கேற்றத்தொடங்கி வாசித்தனர். அதங்கோட்டாசிரியர், அதில் எப்படியேனும் குற்றங் கற்பித்துவிடவேண்டுமென்று, தொல்காப்பியரிடம் பலகேள்விகளைக் கேட்டார். அக்கேள்விகளுக்கெல்லாம் தொல்காப்பியர், தக்கவிடைகூறினர். அதங்கோட்டாசிரியரால் அந்நூலில் ஒருகுற்றமேனும் கண்டுபிடிப்பது முடியாமற்போயிற்று. அவரும், மற்றவர்களும், தொல்காப்பியத்தைக் குற்றமற்றதென ஒப்புக்கொண்டனர். தொல்காப்பியரை எல்லோரும் கொண்டாடிப்புகழ்ந்தனர்.

இவர்செய்த தொல்காப்பியமானது, எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம்என மூன்றுஅதிகாரங்களையுடையது. எழுத்ததிகாரம்—எழுத்துக்களின் தன்மைகளைக் கூறுவது; சொல்லதிகாரம்— எழுத்துக்களாலாகிய சொற்களின் தன்மைகளைக்கூறுவது; பொருளதிகாரம்— சொற்களைக் கொண்டு அறியப்படும் அறம், பொருள், இன்பம்முதலியவற்றின் இயற்கைகளாகிய பொருள்களைக்கூறுவது, பொருள்—உண்மை.

இத் தொல்காப்பியம்— கி. மு. நான்காம்நூற்றாண்டிற்கு முந்தியேஇயற்றப்பட்டது. இதற்கு நூல்களில்தக்க ஆதாரங்களிருக்கின்றன.

இன்னும் இத்தொல்காப்பியம், எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணிஎன்னும் ஐந்திலக்கணங்களும் நிரம்பியது;

இதன்பொருளதிகாரத்தில் யாப்பு, அணி இலக்கணங்கள் விளக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன. இந்நூல் 1612 சூத்திரங்களைக்கொண்டது. இதற்கு, கல்லாடர், இளம்பூரணர், சேனாவரையர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் முதலியோர் உரைஎழுதியிருக்கின்றனர். சில ஆண்டுகட்குமுன்பு சோழவந்தானூர், திருவாளர், அரசஞ்சண்முகனார் அவர்கள் இத்தொல்காப்பியப் பாயிரத்துக்கு விருத்தியுரைசெய்து வெளியிட்டிருக்கின்றார்கள்.

தொல்காப்பியர், இந்நூலைச்செய்து அரங்கேற்றிய பின்னர், பாண்டியர், கபாடபுரத்தைத் தம்அரசாட்சிக்குத் தலைநகராக்கி அங்கே இடைச்சங்கத்தை ஏற்படுத்தினர். பிறகு கபாடபுரமுங் கடல்கொள்ளப்பட்டது. இடைச்சங்கமும்அழிந்தது. அதன்மேல், உத்தரமதுரை (இப்போதுள்ள மதுரை) யில் பாண்டியர் கடைச்சங்கத்தை அமைத்தனர்.

முதற்சங்கம் கடலில் மூழ்கியகாலத்தில், தொல்காப்பியத்திற்கு முந்திய நூல்களும் அழிந்துபோயின. தொல்காப்பியம் அக்காலத்திற்குப்பின் செய்யப்பட்ட முதல்நூலாதலின்; இடைச்சங்கத்திலும், கடைச்சங்கத்திலும் முக்கிய இலக்கண நூலாகவழங்கி இக்காலத்திலும் நிலைபெற்றிருக்கின்றது. பிந்தினகாலத்தில் ஏற்பட்ட நன்னூல்முதலிய இலக்கண நூல்கள் இத்தொல்காப்பியத்திற்கு வழிநூல்களும், சார்புநூல்களுமாம்.

இக்காலத்தில், தமிழ்நாட்டில் வழங்கிவரும் இலக்கண நூல்களில் தொல்காப்பியமே முதன்மைபெற்றதாகும்; இடைச்சங்ககாலத்திலும், கடைச்சங்ககாலத்திலும் செய்யப்பட்ட தமிழ்நூல்களெல்லாம் தொல்காப்பிய இலக்கணத்தைத் தழுவியே செய்யப்பட்டவைகள்.

இப்பேர்ப்பட்ட பெருமைவாய்ந்த தொல்காப்பியத்தை இயற்றிய தொல்காப்பியனாரின்பெருமை அளவிடற்கரியதாம். இவர், கல்வியிலும், அறிவிலும், தவத்திலும் சிறந்தவர்; நியாயங்கூறுவதில் ஆசிரியர்க்கும் அஞ்சாதவர்; நியாயந்தவறி அகத்தியர் தம்மீது வெறுப்புற்ற காலத்தில் தாமும் அவர்மீது வெறுப்புற்றவர்; அகத்தியர்காலத்திற்குப் பிறகு அவரால் செய்யப்பட்ட இலக்கணமாகிய அகத்தியம் மறைபத் தமதுதொல்காப்பியம் என்றும் தமிழ்நாட்டில் நிலைபெறச் செய்தவர். உண்மைத்தவவேடந் தாங்கியவர்; நெருப்பிலும், நீரிலும்நிற்கும் தவசித்திபெற்றவர்.

இவர்வரலாற்றினை வேறுசிலர் வேறுவிதமாகவும் கூறுகின்றனர்; சிற்சிலமதக்காரர்கள் இவரைத் தங்கள் தங்கள் மதத்தைச்சார்ந்தவரெனவுங் கூறுகின்றனர். இவர், எந்தமரபில் உதித்தவராயினுமிருக்கட்டும், எம்மதத்தை யுடையவராயிருப்பினுமிருக்கட்டும்; பண்டைத்தமிழ்ப்புலவர்களில் சிறந்த ஒரு பெரியாரென்பதிலும், தமிழ்நாட்டிற்குப் பயன்தரக்கூடிய பெரிய நூலைச் செய்தவரென்பதிலும் சந்தேகமில்லை. இப்பேர்ப்பட்ட பெரியார்பலர், நம்தமிழ்நாட்டில் இருந்ததனாலேயே இந்நாட்டின்புகழ் எப்பொழுதும் நிலைத்திருக்கின்றது.

---

## 2. புத்தமதத்தை வளர்த்த அசோகன்

அசோகன்என்பவன், நம்இந்தியநாட்டில் அரசுசெலுத்திய மன்னர்களில் மிகச்சிறந்தவன்; ஆதலின், இவனுடைய சரித்திரத்தை மாணவர்கள் முக்கியமாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

இந்தஅசோகன், வடஇந்தியாவிலுள்ள தேசங்களில் முதன்மைபெற்றுவிளங்கிய மகததேசத்தை அரசாண்டுவந்த மௌரியவமிசத்தரசனான சந்திரகுப்தனின்பேரனும், பிந்துசாரன் புத்திரனுமாவன்.

கி. மு. 4-ஆம் நூற்றாண்டில் மகததேசமானது 'நந்தர்' என்ற வகுப்பைச்சார்ந்த அரசர்களால் ஆளப்பட்டு வந்தது. பின் கி. மு. 325-ஆம்ஆண்டிற்கு முந்தியோ பிந்தியோ அந்த ஆளுகையில் ஒருபுரட்சிஏற்பட்டு 'சாணக்கியன், கௌடல்யன், விஷ்ணுகுப்தன் என்ற பெயர்களைக்கொண்ட ஓர்ஆரிய மந்திரியின் சூழ்ச்சிகளால் அவ்வரசுரிமை நந்தர்களை விட்டு நீங்கிற்று. இந்தமந்திரி சந்திரகுப்தனைச்சார்ந்தவன். அக்காலத்திற்றான் அசோகனின்பாட்டனும், மௌரியவமிசத்தானுமாகிய சந்திரகுப்தன் மகதநாட்டிற்கு அரசனானான். இப்போது கங்கைக்கரையில், 'பாட்னா' என்னும் பெயருடனிருக்கும் பாடலிபுரம், அல்லது பாடலிபுத்திரம்என்னும் நகரிலிருந்துதான் இவன் அரசுசெலுத்தினான்.

இந்தச்சந்திரகுப்தன் கி. மு. 325 முதல் 301வரை இருபத்தைந்துஆண்டுகள் அரசுபுரிந்து இவ்வுலகைவிட்டுநீங்கினன். மைசூர் அரசாட்சியைச்சார்ந்த, 'சந்திரகிரி' என்னுமிடத்தில் உள்ள கல்வெட்டுக்களில் இவன் முடிவில் ஜைனமதத்தைத் தழுவி அரசைவிட்டு, 'பத்திரபாகு' என்ற ஜைனமுனிவரிடம் உபதேசம்பெற்று அவருடன் தென்னாட்டிற்குவந்து தவம் புரிந்து உடலைவிட்டான்என்னும் வரலாறு காணப்படுகின்றது.

இந்தச்சந்திரகுப்தனுக்குப் பிறகு அசோகன்தந்தையாகிய பிந்துசாரன் பட்டத்துக்குவந்தான். இவன் கி. மு.

301-ஆம் ஆண்டிலிருந்து 273-ஆம் ஆண்டுவரை இருபத்தேழுஆண்டுகள் அரசாட்சிசெய்து உயிர்நீங்கினன்.

இவனுக்குப்பின் அசோகன் பட்டத்துச்குவந்தான். இவன் பிந்துசாரனுக்கு மூத்தமகனல்லன்; பலசகோதரர்களுடன் பிறந்தவன். அவர்களுட் பட்டத்திற்குரிய பலர்இருந்தனர். அப்படியிருந்தும் அசோகன் புத்திசாதுரியமும், வல்லமையுமுடையவனயிருந்ததால் அரசுரிமையைப்பெற்றன். இவன் சிறுபருவமாயிருக்கும்போது பிந்துசாரனுடைய ஆட்சிக்குட்பட்ட தக்ஷசிலா என்றமாகாணத்தில் இருந்தகுடிகள் கலகஞ்செய்யஆரம்பித்தனர். அந்தக்கலகத்தை அடக்குதற்குப் பிந்துசாரன் இந்தஅசோகனை அங்கேஅனுப்பினன். அசோகன் அங்குச்சென்று அக்கலகத்தை அடக்கினன். பிந்துசாரன் இவனுடைய சாமர்த்தியத்தைக்கண்டு மகிழ்ந்து இவனை அந்தமாகாணத்திற்கு இராஜப்பிரதிநிதியாக நியமித்தான். அசோகன் கொஞ்சகாலம் அந்தமாகாணத்தில் ஆட்சிபுரிந்துவந்தான். பின்னர்ப் பிந்துசாரனல், 'உஜ்ஜயினி' என்னும்நகரத்திற்கு அதிபனுகநியமிக்கப்பட்டான். அப்போது பிந்துசாரன்இறந்தான். அதன்மேல் அசோகன் பாடலிபுரத்தைஅடைந்து இளவரசுப்பட்டந்தாங்கித் தந்தையின்அரசை நடத்திவந்தான். அப்பதவியில் நான்குஆண்டுகளிருந்து பிறகு பேரரசுப்பட்டந்தரித்துக்கொண்டான்.

இவனுக்கு, தேவானுப்பிரியன், பியதஸி, தேவானுப்பிரியனை பியதஸிஎன்ற நாமங்களுப்ஏற்பட்டிருந்தன.

பண்டைக்காலத்து அரசர்கள், தங்கள்வரலாறுகள் பிற்பட்டகாலத்தவர்க்கு விளங்கும்பொருட்டுச் சிலஅறிகுறிகளை

ஏற்படுத்திவைப்பது வழக்கம். அவ்வழக்கப்படியே அசோகனும் தன்னுடைய ஞாபகச்சின்னமாக பலஸ்தம்பங்களைநாட்டி அவற்றில் சிலவற்றில் சிலசாசனங்களை வரைந்திருக்கின்றான்; இவையன்றி இன்னும் ஏழு சாசன ஸ்தம்பங்களை நாட்டி யிருக்கின்றான். குகைகளையும், கட்டிடங்களையும் ஏற்படுத்தியிருக்கின்றான். இவற்றுள் சாசனங்களும், ஸ்தம்பம் முதலியவற்றிற் சிலவும்இப்பொழுதுகாணப் படுகின்றன. இவைகளே அசோகன்வரலாறுகளைக்காணுதற்கு அனுகூலமாயிருந்தன.



அசோகன் மேற்கூறியபடி பட்டத்துக்குவந்தபின், தன்னுடையஆளுகையில் செய்தகாரியங்கள் மிகவும்கொண்டாடத்தக்கவைகள். இவனுடையபாட்டனாகிய சந்திரகுப்தன்காலத்தில் ஆளுகை மிகப்பெருமையுற்றிருந்தது. அப்பெருமையிற் குறைவுபடாமல் இவனும் ஆட்சிபுரிந்ததோடு, அவன்செய்துவந்த காரியங்களைக்காட்டினும் சிறந்த பலகாரியங்களை இவன் செய்துவந்தான்: படைத்திறத்திலும், அதிகாரிகளை ஒழுங்காக நடத்தும்வகையிலும், தன்நாட்டில் குடியேறியிருந்த அன்னிய நாட்டாரை ஆதரிக்குங்கண்ணோட்டத்திலும், வியாபாரத்தை

யும் கைத்தொழிலையும் பெருக்குவதிலும் இந்த அசோகனது ஆளுகை முன்னினும் சிறந்துவிளங்கிற்று.

இவன் பட்டத்துக்குவந்தகாலத்தில், மௌரியஅரசாட்சி யானது இமயமலைமுதல், தெற்கே பாலாறுவரையில் பரவி யிருந்தது. ஆனால், கலிங்கர்நாடுமட்டும் அந்த ஆளுகைக்குட் படாதிருந்தது. இது அடர்ந்தகாடுகளால் சூழப்பட்டு ஒரு மூலையிலிருந்ததால், அசோகன்முன்னோராகிய சந்திரகுப்தன் முதலியவர்கள் அதைத் தங்கள்ஆட்சிக்குட்படுத்தவில்லை. அது மௌரியஅரசாட்சிக்கு இமயம்முதல்பாலாறுவரை ஒரேதொடர் ச்சியாயிருப்பதற்குத் தடையாயிருந்தது. அந்தக்குறையைத் தீர்க்கவேண்டுமென்னும்எண்ணம் அசோகனுக்குண்டாயிற்று. அதனால் அவன் பட்டத்துக்குவந்த 9-ஆம் ஆண்டில் படை யெடுத்துக் கலிங்கதேசத்தைக் கைப்பற்றினான். ஆனால் அவன் அதைப்பற்றிக் களிப்படையவில்லை. அவன் இயற்கையில் இரக்கமுள்ளவனாதலாலும், அதேசமயத்தில் பௌத்ததர்மத் தைக்கேட்டதாலும் அந்தயுத்தத்தில் உயிர்ச்சேதங்கள் நேர்ந் ததைப்பற்றி மனம்வருந்தி, "எவ்வளவுபெரிய இலாபம் கிடைப்பதாயிருந்தாலும் இனி ஒருபோதும் நான்யுத்தஞ்செய் வதில்லை" என்று கண்ணீர்வடித்துப் பிரதிக்ஞைசெய்தான்.

முதலில் அசோகன் இந்துமதத்திலிருந்தான். கலிங்க யுத்தம் நடப்பதற்குமுன் உபகுப்தர் என்னும் பௌத்தமத துறவியால் அவனுக்கு பௌத்ததர்மம் உபதேசஞ்செய்யப்பட் டது. அதிலிருந்து அசோகன் பௌத்தர்மதத்தில் பக்தி யுடையவனாயிருந்துவந்தான். பின்னர் பௌத்தமதத்தைத் தழுவி, இல்லறத்திலிருந்தபடியே புத்ததர்மத்தைக்கைகொண்

தொழுகும் உபாசகன் என்ற நிலையை அடைந்தான். மேற்கூறிய உபகுப்தர், புத்தருக்குப்பின் பௌத்தசங்கத்திற்குத் தலைமைவகித்த ஆசிரியருள் ஐந்தாம்ஆசிரியராவர். இவரே நெடுங்காலம்வரை அசோகனுக்குக்குருவாகவும், துணைவராகவுமிருந்தார். மேற்கூறியபடி உபாசகநிலையிலிருந்த அசோகன் இரண்டரை வருஷங்களுக்குப்பிறகு, அதாவது அவன் பட்டத்திற்குவந்த பன்னிரண்டாம்ஆண்டில், தான் பௌத்த தர்மத்தில்காட்டும் ஊக்கம் போதாதென்று நினைத்தான். அதை இன்னும்அதிகமாக அனுஷ்டிக்கவேண்டுமென்று தீர்மானித்தான். அதன்மேல் ஒருவருடம்சென்றபின் அதாவது அவன் பட்டாபிஷேகத்தின் பதின்மூன்றுவதுவருடத்தில் பௌத்தசங்கத்தைச்சேர்ந்து சன்னியாசியானன்.

அப்படித் துறவியானலும் அவன் அரசுநடத்தும் தொழிலை விட்டுவிடவில்லை. அந்நிலையிலிருந்தபடியே அந்த தர்மத்திற்கிசையத் தன் அரசை நடத்திவந்தான். அக்காலத்தில் தன்அரண்மனைச்சமயலறையில் மாமிசஉணவைத் தள்ளிவிடத்தக்க ஏற்பாடுசெய்தான். தன் ஆளுகையிலுள்ளமனிதர் பிராணிகளை வதைசெய்வதுகூடாதென்றும், அங்ஙனம்செய்தால் அது இராஜத்துரோகமாகக் கருதப்படுமென்றும் எல்லோருக்கும் அறிவிக்கும்படிசெய்தான். தன்னுடைய தர்மக்கொள்கைகளை கற்களிலும், கல்ஸ்தம்பங்களிலும் எழுதிப் பலருக்கும் அறிவிக்கவேண்டுமென்று நிச்சயித்தான். வேட்டையாடுதல்முதலியவற்றைக் கொடுந்தொழில்களென்று நீக்கினன். புண்ணிய ஸ்தலயாத்திரைசெய்வதையும், ஞானிகளைக் காண்பதையும், தர்மத்தை மனிதர்க்குப்போதிப்பதையுமே தன்னுடைய பொழுதுபோக்காகக்கொண்டான்.

அவன் பட்டத்துக்குவந்தபதினென்காவது ஆண்டில் புதிய முறையில் உத்தியோகஸ்தர்களேயும், சபைகளேயும் நியமித்து இராஜகாரியங்களும், தர்மபரிபாலனமும் சரிவர நடக்கும்படி செய்தான். குடிகளுக்குத் தன்னுடைய ஆளுகையில் எப்பொழுதும் நியாயம் கிடைக்குமென்று உறுதிமொழி கூறினன். தன்னல் நியமிக்கப்பட்ட அதிகாரிகள், நீதிவிசாரணையில் ஒழுங்குதவறிநடப்பார்களாயின் அது தனக்குச்செய்த பெருந் துரோகமாகுமென்று அவர்களுக்கு எச்சரிக்கை செய்தான். அவர்கள் சரியாய் நடக்கிறூர்களாவென்பதை இரகசியமாகப் பார்த்துவந்து தனக்குத்தெரிவிக்கும்படி ஒற்றர்களேநியமித்தான். தன் ஆளுகைக்குட்பட்ட இடங்களிலும், தனக்குநேசப்பான்மையான அயல்அரசர்நாடுகளிலும் மனிதருக்கும் மற்ற பிராணிகளுக்கும் மருத்துவசாலைகளே ஏற்படுத்தினன். மருத்துவத்திற்கு உபயோகமாம்மூலிகைகளில் கிடைக்காதவற்றைக் கிடைக்குமிடங்களிலிருந்து கொண்டுவந்து பயிராக்கும்படி செய்தான். மனிதர்க்குபயோகமாம் கனி, காய் கிழங்குகளேத் தரும் மரம், செடி, கொடி முதலியவற்றையும் அவ்வாறே பயிராக்கும்படி செய்தான். எங்கும் மாந்தோப்புகளேஉண்டாக்கினன். சாலைகளேஏற்படுத்தினன்; அவற்றில் அடுத்தடுத்து இருக்கும்படி கிணறுகளேவெட்டுவித்தான்; சாவடிகளேக்கட்டுவித்தான்; தண்ணீர்ப்பந்தல்களேஅமைத்தான்; நிழல்தரும்மரங்களே வளர்ப்பித்தான்;சந்திரகுப்தன் காலத்தில்வெட்டப்பட்ட 'சுதர்சன ஏரி' என்ற பெரிய ஏரியைச் சீர்திருத்தம்செய்து விவசாயத்திற்கு அனுகூலமுண்டாக்கினன். மனிதருக்குள் ஒற்றுமையை உண்டாக்கினன்; மதச்சண்டைகளே நீக்கினன்; எல்லா மதத்தினரிடத்தும் விசுவாசங் காட்டிவந்தான்.

இவ்வாறு அசோகன் அரசுக்குரிய காரியங்களே நடத்திவந்ததோடு புத்தமததர்மத்தை எங்கும் பரப்புவதிலும்

சிரத்தையெடுத்துவந்தான். பௌத்தமதத்தின் மும்மணிகளாகிய புத்தனையும், தர்மத்தையும், சங்கத்தையும் சரணமடைவதாக உறுதிகொண்டான். பௌத்தமதக்கோட்பாடுகள் வேறுபல இருந்தும் அசோகன் எல்லோருக்கும் பொருத்தமாயிருக்கும்படி தாய்தந்தையரைப்பேணல், முதியவருக்கும், ஞானிகளுக்கும்மரியாதைசெய்தல், ஏழைகளுக்குவேண்டுவனகொடுத்தல், அடிமைகளிடம் அன்புசெலுத்துதல், பிராணிகளிடத்தில் இரக்கம்காட்டுதல், அவற்றைத் துன்புறுத்தாமலிருத்தல், மாமிசமுண்ணுதிருத்தல், மெய்கூறல், பிறர்மத நிந்தைசெய்யாதிருத்தல், ஒற்றுமை ஆகியவைகளை புத்ததர்மம்என்றுகொண்டு அவற்றை எங்கும் போதிக்கத்தொடங்கினன்.

பௌத்தஆசாரங்களைக் காப்பாற்றவும், புத்தரின்வாக்கியங்கள் இன்னவையென்று தீர்மானிக்கவும், புத்தமதக்கோட்பாடுகளை ஆராயவும் ஒரு மகாசபையைக்கூட்டினன். பிக்ஷுக்கள் (புத்தமதத்தைச் சார்ந்தமனிதர்) நன்மார்க்கத்தில் நடக்கும்படி அவர்களுக்கு எச்சரிக்கைசெய்தல், ஸ்தூபங்கள் (பெரியோர்சமாதிகள்)கட்டுதல், விஹாரங்களை (மடங்களை)ப்பாதுகாத்தல், காட்டுமனிதருக்குத் தர்மத்தை உபதேசித்தல், பௌத்த சங்கங்களைவிருத்திசெய்தல், அவற்றில் சச்சரவுகள் உண்டாகாமல் அவற்றை நீக்குதல்முதலிய காரியங்களைச் சிரத்தையாகக் கவனித்துவந்தான். அவனுடையஆளுகைக்குட்பட்ட யவனர், காம்போஜர், நாபகநாட்டு நாபபந்தியர், போஜர், பிதேனிகர், ஆந்திரர், புலிந்தர், இராஷ்டிரிகர், காந்தரர் முதலியவர்களுக்குப் புத்ததர்மத்தை உபதேசிக்கும்படி பல தர்மபோதகர்களை ஆங்காங்கே அனுப்பினன். அவர்களெல்லோரும் அந்தப்போதகர்கள் மூலம் புத்ததர்மத்தைக்கேட்டனர்.

இன்னும் பர்மாதேசத்திலும், தென்னிந்தியாவில் சுய ராஜ்ஜியம் நடத்திவந்த சேரசோழபாண்டியர், சத்தியபுத்திரர் முதலியவர்களின் நாடுகளிலும் அசோகனால் தர்மபோதனை களும், உபகாரச்செயல்களும் நடந்துவந்தன. அசோகனுடைய சகோதரனாகிய மகேந்திரன், சகோதரியாகிய சங்கமித்திரை ஆகியவர்கள் தர்மோபதேசம் செய்யும்பொருட்டு அசோகனால் சிலோன்தீவுக்கனுப்பப்பட்டார்கள்.

இன்னும் நெடுந்தூரத்திற்கப்பாலுள்ள சுமார்-அறுநூறு யோசனைக்கப்பாலுள்ள ஐந்து அரசரின் நாடுகளிலும் அசோக னால் புத்ததர்மம் பரப்பப்பட்டிருக்கிறது. அவை ஸிரியா, எகிப்து, மாசிடோனியா, கைரீனே, எப்பைரஸ் என்பவை களே: மாஸிடோனியா தேசத்து வீரனாகிய அலக்ஸாந்தர் கி.மு. 335-ஆம்ஆண்டில் திக்விஜயம்செய்யத்தொடங்கிப் பல தேசங்களை வென்று இந்தியாவுக்கும் படையெடுத்துவந்தான். அவனுடையஆளுகை அவனுக்குப்பிற்காலத்தில்சீர்கேடுற்றது. அந்தஅரசை அவனிடமிருந்த போர்வீரர்களாகிய இரண்டாம் ஆண்டியாக்கஸ் (தியாஸ்), ப்டாலமியாஸ் (பைலாடெல்பாஸ்), அண்டிகோனஸ் (கொனடஸ்), மகாஸ், அலக்ஸாந்தர் என்பவர் கள் பங்கிட்டுக்கொண்டார்கள். அவ்வாறு பங்கிட்டுக்கொண் டவைகள்தாம் மேற்கூறிய தேசங்கள். இவற்றை மேற்கூறிய வர்கள் முறையேஆண்டுவந்தனர். இவர்களுக்கும் அசோக னுக்கும் நேசம்ஏற்பட்டிருந்தது. அதனால் அசோகன் இத் தேசங்களுக்குத் தூதனுப்பி இவற்றிலுள்ளவர்களுக்கும் தன் னுடைய தர்மம் விளங்கும்படிசெய்தான்; மேலும் இத்தேசங் களில் மனிதவைத்தியசாலைகளையும், மிருகவைத்தியசாலைகளை யும் ஏற்படுத்தினான். இச்சம்பவங்கள் அசோகன் பட்டத்துக்கு

வந்த பன்னிரண்டாம்ஆண்டிற்கு முன்னும்பின்னும் சிலவருடங்களில் நடைபெற்றிருக்கின்றன. கி. மு. 258-ம்ஆண்டில் அசோகனும், மேற்கூறியஅரசர்களும் உயிருடன்இருந்திருக்கிறார்கள். இவர்கள்கூடி உயிருடனிருந்த வருடங்கள் நான்கே.

இவ்வாறு அசோகன், புத்ததர்மத்தைப் பலநாடுகளில் பரப்பியதோடு பலநகரங்களை அமைத்திருக்கின்றான். பற்பல இடங்களில் பற்பலகட்டிடங்களை கட்டியிருக்கின்றான்.; கீர்த்திஸ்தம்பங்களை நாட்டி அவற்றில் தன்கொள்கைகளைச்சாசனங்களாகஎழுதியிருக்கின்றான்; ஸ்தூபங்களை அமைத்திருக்கின்றான்; புண்ணியஸ்தலயாத்திரைகள் சென்றிருக்கின்றான்.

அவன் பட்டத்துக்குவந்த இருபத்தோராம்வருஷத்தில், நேப்பாளத்தின்தலைநகராகிய காத்மாண்டு அல்லது லளிதா பட்டணத்தை அமைத்திருக்கின்றான்; அதில் பலகோவில்களைக் கட்டியிருக்கின்றான்; பின்னும் காஸ்மீரத்தின் தலைநகராகிய ஸ்ரீநகரும், நாலந்தாவும் அவனால் அமைக்கப்பட்டிருக்கின்றன. பாட்னாவில் அவன் தன்னுடைய அரண்மனையைக் கட்டியிருக்கின்றான்; அது சமீபகாலத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் இந்தியாவின் எல்லாப்பாகங்களிலும் அசோகனால்கட்டப்பட்ட கட்டிடங்கள் அவன்காலத்தில் நிறைந்திருந்தன.

அவன்செய்த புண்ணியத்தலயாத்திரைகளில், அவனுடைய பட்டாபிஷேகத்தின் இருபத்தோராவது வருடத்தில் செய்த யாத்திரையின்விவரங்கள் ஆராய்ச்சிக்காரரால் வெளியிடப்பட்டிருக்கின்றன: அவன் இந்த யாத்திரையில் புத்தரின்

சுதேசமாகிய கபிலவஸ்துவுக்குச் சென்றிருக்கின்றான். அவ்வாறு சென்ற மார்க்கத்தில் இப்போது எழுஸ்தம்பங்கள் காணப்படுகின்றன; இவை அவன்சென்ற யாத்திரையின் ஞாபகச்சின்னங்களாக அவனால் நாட்டப்பட்டிருக்குமென்று ஆராய்ச்சிக்காரரால் ஊகிக்கப்படுகின்றன. அவன் இந்தயாத்திரையில் தன்குருவாகிய உபகுப்தனுடன்சென்று புத்தரின்பிறப்பிடமாகிய(லும்பினி) (ரும்மின்தேயி) என்னும்கிராமத்தையும், 'கபிலவஸ்து' என்னும் நகரத்தையும் புத்தர் நிறைந்தஞானம் அடைந்ததலமாகிய புத்த கயாவையும், அவர்தமது தர்மத்தை நடத்தத்தொடங்கிய ஸார்நாதத்தையும்; அவர்முடிவில் பரிநிர்வாணமடைந்த குசிநகரதனையும் அவர்தர்மோபதேசம்செய்து கொண்டு நெடுங்காலம்வசித்த ஸ்ரீரவஸ்தியையும் வேறு இரண்டு ஸ்தலங்களையும்தரிசித்துத் திரும்பியிருக்கின்றான். புத்தரின் பிறப்பிடத்தை அசோகன்தரிசித்ததற்கறிகுறியாக ஒருஸ்தம்பத்தையும் நாட்டியிருக்கின்றான். அது நெடுங்காலமாகமறைந்திருந்து சமீபகாலத்தில்கண்டு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தஸ்தம்பத்தில் அந்தஊரிலிருந்த குடிகளுக்கு அசோகன் நிலவரியைக் குறைத்தான் என்னும்விவரம் எழுதப்பட்டிருக்கிறது. இன்னும் இந்தயாத்திரையில் அவன் பூர்வ புத்தரின் க்ஷேத்திரமாகிய, 'கொனகமனன்' என்ற இடத்தையும் தரிசித்து அங்கிருந்த ஸ்தூபத்தைப்புதுப்பித்து அங்கும் ஒருஸ்தம்பத்தையும் நாட்டியிருக்கின்றான். இவ்விவரங்கள் சிலாசாசனங்களால் தெரிகின்றன. இவ்விவரங்கள் எழுதப்பட்ட ஸ்தம்பமொன்றும் ரும்மின்தேயிக்குப் பக்கத்தில் அகப்பட்டிருக்கிறது.

இன்னும் அசோகன், தான் பட்டத்துக்குவந்த 13-ஆம் ஆண்டிலும் 20-ஆம் ஆண்டிலும் தீவிர துறவிகளாகிய ஆஜீவகர்

களுக்காக கயையின் சமீபத்தில் மூன்றுகுகைகளை உண்டாக்கி அவர்களுக்குத்தானம் செய்திருக்கின்றான். அவை இப்போது காணப்படுகின்றன.

இவையன்றி அவன், தான் பட்டந்தாங்கிய 27-28-ஆம் ஆண்டுகளில், அவனால் ஏழுஸ்தம்பங்களில் சாசனங்கள் பிரசுரிக்கப்பட்டன. அசோகன் அரசாட்சியின் தன்மைகளெல்லாம் இவற்றில் விளக்கிக்காட்டப்பட்டிருக்கின்றன.

மத்தியஇந்தியாவைச்சேர்ந்த போபால் சமஸ்தானத்தில் உள்ள 'ஸாஞ்சி' என்ற ஊரில் இரண்டுமூன்று ஸ்தூபங்கள் இருக்கின்றன; இவற்றில்ஒன்று நல்லநிலையில் இருக்கின்றது. இவைகளில்முதன்மையானது அசோகன்காலத்தது என்று ஊகிக்கப்படுகின்றது. ஸாஞ்சிக்குக்கிழக்கே சுமார் 200 மைல் தூரத்தில்உள்ள 'பர்ஹூத்' என்றஊரில் ஒருஸ்தூபமிருக்கின்றது; இதுவும் அசோகன்காலத்ததே. புத்த கயையில் ஒரு ஸ்தூபம் அசோகனால்கட்டப்பட்டிருந்தது இப்போது அது சிதைந்து அதன்சுற்றுச்சுவரின் கற்கள்மட்டும் காணப்படுகின்றன.

இந்த ஸ்தூபம் புத்தர்பள்ளியென்றுகூறப்படும். பௌத்தர்கள் இந்தஸ்தூபத்தின் மேற்புறத்தில் பௌத்தமுனிவரின் சாம்பலை அடக்கம்செய்வதுவழக்கம். இந்தஸ்தூபத்தின்வடிவமானது, ஒருபெரியகோளத்தை இரண்டாக்கி ஒருபாதியை உயர்ந்ததோர் பீடத்தின்மேலே வளைவாகக் கவிழ்த்துவைத்ததுபோன்றிருக்கும். இது கருங்கல்லினாலாவது, செங்கற்களாலாவது கட்டப்பட்டிருக்கும்; இதன்சுற்றுப்பக்கங்களில் விளக்குவைக்கும்மாடங்களும், அலங்காரங்களும், பௌத்த

மதக் கொள்கைகளைக்காட்டும் அடையாளங்களும் அமைக்கப் பட்டிருக்கும். மேற்பாகத்தில் ஆங்கிலஎழுத்தாகிய T போன்ற அடையாளம் அமைக்கப்பட்டிருக்கும். அதன்மேல் விரிந்த குடையொன்று நாட்டப்பட்டிருக்கும். இதன் நான்குபக்கங் களிலும் நடுவில் வீதிவிட்டுச் சுற்றுச்சுவர் கட்டப்பட்டிருக் கும்; கோபுரவாயில்களைப்போன்ற அழகியவாயில்கள் அமைக் கப்பட்டிருக்கும்.

அசோகன்காலத்தில் புத்தருக்கு விக்கிரகங்கள்இல்லா திருந்தன. பௌத்தர்கள்,புத்தருக்கும், அவருடையதர்மத்திற் கும் அறிகுறியாகப் போதிவிருக்ஷம், தர்மசக்கரங்கள், பாதங் கள்முதலிய அடையாளங்களை ஏற்படுத்தி வணங்கிவந்தார்கள். அவற்றை ஸ்தூபங்களிலும்அமைத்து வணங்கிவந்தார்கள். பிந்தினகாலத்தில் அத்தகையஸ்தூபங்களை புத்தர்கோவில் களாக மாறிவிட்டன. புத்தருக்கு விக்கிரகங்களும்ஏற்பட் டன; அவ்விக்கிரகங்கள் ஸ்தூபங்களிலும் உண்டாக்கப்பட்டு அவற்றிற்குப் பூஜைமுதலியனவும் நடந்தேறிவருகின்றன.

ஸாஞ்சியிலிருக்கும்முக்கியஸ்தூபம் முற்காலத்தில் சுமார் 78 அடி உயரமுள்ளதாயிருந்தது; இக்காலத்தில் அதன்மேல் அலங்காரங்கள் அழிந்துவிட்டமையால் 54அடி உயரமுள்ள தாயிருக்கிறது. இதன் நான்குவாயில்களும் 34அடி உயர முள்ளவை; அழகிய வேலைப்பாடுகள் நிறைந்தவை, பர்ஹூத் என்ற ஊரிலிருக்கும்ஸ்தூபமும் மிகச்சிறந்தது; புத்தமத தர்மங்களை விளக்கும் அழகிய பலசிற்பவேலைகள்நிறைந்தது.

அசோகனால்நாட்டப்பட்ட ஸ்தம்பங்களில், இப்போது, டில்லி தோப்ராஸ்தம்பம், டில்லி மீரத்ஸ்தம்பம், பிரயாகை

ஸ்தம்பம், ஸார்நாத்ஸ்தம்பம், ஸாஞ்சிஸ்தம்பம், ரும்மின்தேயி ஸ்தம்பம், நிக்லீவாஸ்தம்பம், லெளரியானந்தன்கர்ஸ்தம்பம், லெளரியா அரராஜ் ஸ்தம்பம், ராம்பூர்வாஸ்தம்பம் (லிகிதமுள்ளது), டெஹ(லிகிதமில்லாதது) பக்ஹிராஸ்தம்பம் என்னும் 12 ஸ்தம்பங்களிருக்கின்றன. இவற்றில் 10 ஸ்தம்பங்களில் அசோகனுடைய சாசனங்களிருக்கின்றன; இரண்டில் சாசனங்களில்லை.

இவையெல்லாம் வேலைப்பாட்டில் ஒருதன்மையானவைகளே. இவற்றின் உயரம் 40 அல்லது 50 அடியிருக்கும் இவற்றின் அடியில் சதுரமானபீடம் அமைக்கப்பட்டிருக்கின்றது; மேலே கண்டாமணிபோன்ற அழகியசிகரமிருக்கின்றது; சிகரத்தின்மேல் ஓரடிகனமுள்ள தட்டுஇருக்கின்றது; இத்தட்டு சிலதூண்களில் வட்டமாகவும், சிலவற்றில் சதுரமாகவுமிருக்கும். இத்தட்டின்மேல் ஸ்தம்பத்திற்கு மகுடமாக சிங்கம், இடபம், கருடன் ஆகியவற்றில் ஒன்றின்உருவம் அமைக்கப்பட்டிருக்கின்றது. சிங்கஉருவத்தில் ஒன்றுமிருக்கின்றது; இரண்டுமிருக்கின்றன; மூன்றும் அமைக்கப்பட்டுள்ளன; நான்கும் வகுக்கப்பட்டிருக்கின்றன.

இந்தஸ்தம்பங்களில் இரண்டுமூன்றுஸ்தம்பங்களே கெடாமல் நல்லநிலையிலிருக்கின்றன; அவற்றுள் லெளரியாநந்தன்கர் ஸ்தம்பம் மிக்கஅழகுள்ளது; ஔரங்கஸீப்காலத்தில் இதன்சிகரம் குண்டுபட்டதால்சிறிதுசிதைவுண்டிருக்கின்றது. பக்ஹிராஸ்தம்பம் இதைக்காட்டினும்பெரிது; எனினும் இதுவே சிறந்தவேலைப்பாடுள்ளது; இது 40 அடி உயரமுள்ளது; இதன் சிகரம் 7 அடி உயரமுள்ளது. இதன்நடுப்பாகம் வழுவழுப்பாக உருக்கினலோ வெண்கலத்தினலோ வார்க்கப்பட்டதுபோலிருக்கிறது; இதன் சிகரத்திலுள்ளதட்டு வட்டவடிவானது;

அதன்விளிம்பில் அன்னவடிவங்கள் அழகாகச்செதுக்கப்பட்டிருக்கின்றன; இந்தத்தூண் சன்னார்மலைக்கருங்கல்லால் செய்யப்பட்டது. ஸார்நாத்ஸ்தம்பம் உயர்ந்தவேலைப்பாடுள்ளது; இதன்சிகரத்திலுள்ள சிற்பவேலைகள் அதிசயிக்கத்தக்கவை. இதில் நான்குசிங்கங்கள் கூடிஉட்கார்ந்து முதுகில்தர்மசக்கரத்தைத் தாங்கிக்கொண்டிருப்பதுபோன்ற உருவம் அமைக்கப்பட்டிருக்கின்றன.

கத்தியவாட் அல்லது குஜராத்என்னும் நாட்டின்மத்திய பாகத்திலுள்ள, 'கிர்நார்' என்ற மலைப்பாறையில், அசோகனுடைய 14 சாசனங்களும் செதுக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வளவு அரும்பெருங்காரியங்களை யெல்லாம்செய்த அசோகனுடைய ஆளுகையானது மிகப்பரவியிருந்தது; வடக்கேகாஸ்மீரமும், நேப்பாளமும், கிழக்கே அஸ்ஸாம் வரையிலுள்ள நாடுகளும், தெற்கே மைசூர்வரையுள்ள நாடுகளும் இந்தியாவிற்குப் புறம்பாயிருக்கும் பலூச்சிஸ்தானம், ஆப்கானிஸ்தானம், அதற்கப்பாலுள்ள ஹிந்துக்குஷ்மலைத் தொடர்வரையிலுமிருக்கும் நாடுமுதலியவைகளும்அவன்ஆளுகைக்குட்பட்டிருந்தன. தென்இந்தியாவின் தெற்குக்கோடியிலுள்ள தமிழ்நாட்டரசர்மூவரும், வேறுசிலஅரசரும் அவன் ஆட்சிக்குட்படவில்லை. இந்தியாவின்புறத்திலிருக்கும் மத்திய ஆசியாவிலுள்ள கோபிப்பாலைவனப் பிரதேசத்தைச்சார்ந்த கோட்டான் அல்லது சீனதுர்க்கிஸ்தானம் அசோகன்ஆளுகைக் குட்படாதிருந்தும் அவனுடையசெல்வாக்கு அங்கும் வியாபித்திருந்தது. அசோகன்குமாரனை, குனலன், கோட்டான்ஜனங்களால். தங்களுக்கு அரசனைத்தேர்ந்தெடுக்கப்

பட்டானென்பதும், அவன்மூலமாகப் பௌத்தமதம் அங்குப் பரவியதென்பதும் திவ்யாவதானத்தில் கூறப்படுகின்றன.

இவ்வாறு அசோகன் தன்னுடைய ஆளுகையையும், புத்த மததர்மத்தையும் எங்கும் பரப்பியதனுலேயே புத்தமதம் எல்லாநாடுகளிலும் மேல்நாடுகளிலும்கூட விருத்தியடைந்து வந்தது.

அசோகன் மேற்கூறியபடி தன்அரசை முப்பத்தேழு ஆண்டுகள்வரை நடத்தி கி. மு 232-ஆம்ஆண்டில் இவ்வுலகை விட்டு நீங்கினன். இவனுக்குப் பலபுத்திரர்கள் இருந்தார்கள். இவனுக்குப்பின் இவன்பேரனை தசரதன் மகததேசத்திற்கு அரசனனன். இவன்தன்பாட்டனகிய அசோகன்செய்த குகைகளுக்கருகில் மூன்றுகுகைகளை ஆஜீவகர்களுக்கு அமைத்திருக்கின்ருன். அசோகனுக்குப்பின் கி. மு. 232 முதல் 185 வரை ஆறு மௌரியஅரசர்கள் மகததேசத்தரசை ஆண்டுவந்திருக்கின்றனர். முடிவில் பிருஹத்ரதன்என்ற மௌரியமன்னனிடமிருந்து 'புஷ்யமித்திரன்'என்ற சுங்கவம்சத்தரசன் இவ்வரசைக் கைப்பற்றிக்கொண்டான். அதன்மேலும் மௌரியர் பாட்னவில் சிற்றரசர்களாயிருந்துவந்தனர்.

## 3. கொல்லாமை

'கொல்லாமை' என்பது ஓர் உயிரைக் கொலைசெய்யாதிருத்தலாம். கொலையாவது, உடம்போடு கூடியிருக்கும் ஓர் உயிரை, அவ்வுடம்பினின்றும் பிரித்துவிடுதலாம்.

இக்கொலையானது, மிகத்திமையானதாம். ஏனெனில், ஓர்உயிர் கருவில் உற்பத்தியாகும்போதே உடம்பைத் தனக்கிருப்பிடமாகக் கொள்கின்றது; அதற்குள்ளேயேஇருந்து வளர்ந்துவெளிப்படுகின்றது; அதனால், அவ்வுயிருக்கு உடம்பினிடத்தே விலக்கமுடியாத பற்றுண்டாகிவிடுகின்றது. அப்பற்றின் மிகுதியால் உடலும்உயிரும் ஒன்றாகிவிடுகின்றன. அவ்வொற்றுமையால் உடலுக்குநேரும் இன்பதுன்பங்களையெல்லாம் உயிர்அனுபவிக்கின்றது. உடம்பில் சௌக்கியம் நேரும்போது உயிர் ஆனந்தத்தையடைகின்றது; அசுகம் நேரும்போது துன்பத்தையடைகின்றது. உடம்பில் ஒரு முள் குத்தி வேதனையுண்டானாலும் உயிர்துடிக்கின்றது; ஓர் அவயவம்ஒடிந்து வலிஏற்பட்டாலும் உயிர்பதைக்கின்றது; ஓர் அங்கத்தில் நெருப்புப்பற்றிப் புண்ணுண்டானாலும் ஆவி நடுங்குகின்றது. இப்படிப்பட்ட வேதனைகளையெல்லாம் தாங்கமுடியாமல் அழுதல், முக்குதல், முணங்குதல், கதறுதல் முதலியவற்றையெல்லாம் உயிரேசெய்கின்றது. உடலில்நேரும் சிறுதுன்பங்களுக்கே உயிர் இவ்வாறுகதறும் பற்றுடையதாயிருப்பதால் அதைவிட்டுப்பிரியும்போது அளவற்றவேதனையடையும்; உயிர், உடலைவிட்டுப்பிரிவதுதான் மரணம்என்று சொல்லப்படுகின்றது. மரணகாலத்தில் உயிர் உடலைவிட்டு நீங்கும்வரையில் பெருந்துன்பத்தையடையும்; நீங்கினபின்புதான் அத்துன்பம் ஒருவாறுமறையும். அதனாலேதான் மரணவாதனை சகிக்கமுடியாததென்று பெரியோர்கூறுகின்றார்கள்.

இந்தமரணம் உயிர்களுக்கு வியாதியினாலோ, மூப்பினாலோ இயற்கையாகநேரும்போது நிச்சயம்தெரியாதிருந்து திடுமெனநேர்வதால், அத்தருணத்தில்மாத்திரம் வாதனை

தோன்றி உயிர்நீங்கியவுடனே மறைந்துவிடும். ஒருவர் ஓர் உயிரைப்பிடித்து வருத்துவதால் மரணம்நேரும்போது, அவ்வுயிர், தான் உடலைவிட்டுநீங்குவதை ஆரம்பத்திலிருந்தே தெரிந்துகொண்டு அடங்காதவேதனையடைந்து அலறித்துடிக்கும். இக்கொலையால் நேரும்துன்பம் நெடுநேரம்வரையிருந்து அவ்வுயிரைப் படாதபாடெல்லாம் படுத்திவிடும். ஆதலினலேயே கொலை மிகத்தீமையானதென்று அறிவுடையவரால் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது; நீதிநூல்களிலும் கூறப்பட்டிருக்கின்றது. பஞ்சமாபாதகங்களில் இக்கொலையும் ஒன்ருகச் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

ஆதலின், இக்கொலையைச்செய்து பிராணிகளுக்குத் துன்பத்தையுண்டாக்குவோர் மகாபாவிகளாவர். இக்கொலைகாரர் இவ்வுலகத்தில் பலதுன்பங்களையடைவர்; இறந்தபின் மறுஉலகத்திலும் மாருத்துயரத்துக்குள்ளாவர். இவர்கள் அருளற்ற வன்னெஞ்சராவர்; இவர்களைக் காணும்மனிதரும் அஞ்சுவர்; பிராணிகளும் பதைக்கும். இவர்களுக்குத் தெய்வ தண்டனையும், அரசதண்டனையும், நிச்சயமாகக்கிடைக்கும்.

இக்கொலைசெய்பவர்களில் பலவகையினர்உண்டு: சிலர், பொருள்காரணமாகப் பிறரோடுபகைகொண்டு அப்பகையினுல் அவர்களைக் கொன்றுவிடுகிருர்கள். கேவலம் நிலையற்றபொருளுக்காக இவ்வாறுபிறரை வெட்டிமடிப்பது பெருந் தீமையானகாரியம்; ஒருபொருளுக்குச் சொந்தக்காரராகிய இருவரில்ஒருவர், புத்தியில்லாமல் அக்கிரமமாகப் பொருள்முழுவதையும் கவர்ந்துகொண்டாலும், அதில் அதிகபாகத்தை எடுத்துக்கொண்டாலும் அவ்விருவரும் சண்டையிட்டுச் சாகா

மல் சிலபெரியோர்களிடம் தங்கள்வழக்கைக்கூறிச் சமாதான மாகத் தீர்த்துக்கொள்வது நலம்.

சிலர், பிறர்பொருளைக் கொள்ளையடிக்கவும், திருடவும் துணிந்து, அத்தீமைகளைச் செய்யும்போது எதிர்த்தவர்களைக் கொல்லுகிறார்கள். ஒருவர்பொருளை மற்றொருவர் கைப்பற்ற நினைப்பதே மகாபாதகமாகும்; அதனோடு கொலையும்செய்வது அளவுகடந்த பாவமாகும்: இப்பேர்ப்பட்டவர்கள், தங்கள் பொருளைப் பிறர்கைப்பற்றினால் அப்போது தங்கள்மனம் என்னபாடு படுமென்பதைக் கவனிக்கவேண்டும்; தங்களை மற்றொருவன்கொன்றால் அப்போது தங்களுக்கு எவ்வகைத் துன்பமுண்டாகுமென்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டும். இவ்வாறு நினைத்துப்பார்த்தால் அவர்கள் பிறர்பொருளைக் கொள்ளையடிக்கவும்,பிறரைக்கொல்லவும் துணியமாட்டார்கள்.

சில அனியாயக்காரர்கள், பிறர் பணங்கொடுப்பதற்காக அவர்களுடைய விரோதிகளைக் கொலைசெய்துவிடுகிறார்கள். இவர்கள், தங்களுக்கு விரோதமில்லாத ஒருவனைப் பிறர் கொடுக்கும் பணத்திற்காகக் கொலைசெய்வது எவ்வளவு முழு மூடத்தனம்? அந்தப் பணத்தைவைத்துக்கொண்டு இவர்கள் எத்தனைகாலம் வாழப்போகிறார்கள்? செல்வமும், ஆயுளும் நிலைக்காவென்பதை இவர்கள்உணர்வார்களானால் அக்கொலையைக் கனவிலும் கருதமாட்டார்கள்.

சிலர், மாமிசஉணவைவிரும்பிப் பலவகைப்பிராணிகளை வதைக்கிறார்கள். மனிதரின்உணவுக்காகக் கடவுளால் எத்

ஞானயோ நல்லபொருள்கள் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. அவற்றைவிட்டுப் புலால்உண்ண விரும்பிப் பிராணிகளைவதைப் பது இரக்கமற்றசெய்கையாகும். இவர்களை வேறுபிராணிகள் ஆகாரத்தின்பொருட்டுப் பிடித்துக் கொல்லத்தொடங்கினல் அப்போது இவர்களுடையநெஞ்சு என்னபாடுபடும்? இவர்கள் அதைச்சற்று நினைத்துப்பார்ப்பார்களானல் மாமிசஉணவுக் காகப் பிராணிகளை வதைக்கவேமாட்டார்கள். இவர்கள் அஃறிணைப் பொருள்களாகிய மிருகங்கள், பக்ஷிகள்முதலிய பிராணிகளுக்கு இன்பதுன்பங்களைஉணரும் அறிவுகிடையாது; ஆதலின், அவற்றை வதைத்துத்தின்னலாம் என்று தாங்கள் செய்யும்கொலைக்குச் சமாதானங்கூறுகின்றார்கள். இது சிறிதும் பொருந்தாது. ஓரறிவுயிர்களாகிய மரம், செடி, கொடி களுக்கும் இன்பதுன்பங்களையுணரும் தன்மையுண்டு. அவற் றிற்கே அந்தச்சக்தியிருக்கும்போது இரண்டு, மூன்று,நான்கு, ஐந்தறிவுள்ள பிராணிகளுக்குத் துன்பத்தை அறியுமறிவு இல்லாமலிருக்குமா? மனிதர் எப்படித் துன்பத்தை உணர்கின் றாரோ அப்படியே மற்றபிராணிகளும்உணரும். ஆதலின், எதையுமே கொலைசெய்வதுகூடாது.

சிலர் வேடிக்கையின்பொருட்டு வேட்டையாடியும்,வேறு பல கொடுங்காரியங்களைச்செய்தும் பிராணிகளைத் துன்புறுத் திக் கொல்கின்றனர். இது மிகுந்த பாதகச்செயலாகும். இவர் களை வேறொருவர் வேடிக்கையின்பொருட்டுப் பிடித்துச் சங் கடப்படுத்திக் கொலைசெய்வார்களானல், இவர்களுக்கு எப் படிப்பட்ட கலக்கமுண்டாகும்? இவர்கள் இதைச்சற்று ஆலோசனைசெய்து பார்ப்பார்களானல் எந்தப்பிராணிகளுக் கும், எவ்வகையினலும் துன்பத்தைச்செய்யமாட்டார்கள்.

சிலர், மிருகங்களாலும், பறவைகளாலும், மற்ற பிராணிகளாலும் மனிதருக்கும், பயிர்களுக்கும் கெடுதியுண்டாகிறதென்று நினைத்து அவற்றை அழிக்கத்தொடங்குகின்றார்கள். அவைகள் நிலத்தில்விளையும் தானியங்களைத்தின்றே உயிர் வாழ வேண்டியவைகளாயிருக்கின்றன. மனிதர், வேளாண்மைத் தொழில்செய்வது அவைகளும் ஜீவித்தற்பொருட்டேயாம். ஆதலின், அவைகள் வேளாண்மைகளில் சிறிதுபாகத்தைத் தின்பதற்காக அவற்றைக் கொல்லலாகாது; அவற்றால் மிகுந்தசேதமுண்டானால் அவற்றைக்கொல்லாமல் அகற்றலாம்; சில விஷஜந்துக்களும், மிருகங்களும் தங்களை மனிதர் வருத்தும்போதுமாத்திரம் தங்கள்உயிரைக் காப்பாற்றிக்கொள்வதற்கு அவர்களுக்குத் தீங்குசெய்கின்றன; மற்றகாலங்களில் எவ்விததீங்கும் செய்வதில்லை. ஆதலின், அவைகள் சுயேச்சையாக வாழுமிடங்களில்சென்று அவற்றைக் கொலை புரிவதுகூடாது.

சிலர், மாமிசம்விற்றுப் பணம்சம்பாதிப்பதற்காக ஆடுமாடுகளைக் கொலைசெய்கின்றனர். அதிகப்பொருள் சம்பாதிக்கக்கூடிய வேறுநல்லவியாபாரங்கள் உலகத்தில் எத்தனையோ இருக்கின்றன. இவர்கள் அவற்றையெல்லாம்விட்டு இந்தப் பாதகமான வியாபாரத்தைச்செய்வது விவேகமற்ற செயலாகும்.

சிலர் தேவதைகளுக்குப் பலியிடும்பொருட்டுப் பிராணிகளைத் துள்ளத்துடிக்கக் கொல்கின்றனர். தெய்வங்கள், பிராணிகளுக்கு நன்மையைச்செய்ய ஏற்பட்டனவேயன்றித் தீமையைச்செய்ய ஏற்படவில்லை; அவைகள், தங்களுக்குப்

பிராணிகளைப் பலியிடச்சொல்லவேயில்லை; அறிவற்றமனிதர் அவற்றின்பெயரைச்சொல்லித் தாங்கள் புலால்தின்பதற்கு இவ்வாறு பிராணிகளைவதைக்கின்றார்கள்; மேலும் தாங்கள் வாழ்வதற்கு வேறுபிராணிகளைத் தெய்வங்களுக்குப் பலியிடு கிறார்கள்; மற்றொருஉயிரைக்கொன்று இவர்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றநினைப்பது எவ்வளவு மூடத்தனமான செய்கை? இதனால் இவர்களுக்குத் தெய்வதண்டனை ஏற் படுமேதவிரக் கடவுள்கிருபை சிறிதும் உண்டாகமாட்டாது.

இன்னும்பலர், பலவகைகளில் பிராணிகளைக் கொலை செய்கின்றனர். நாம் நன்றாக ஆராய்ந்துபார்க்குமிடத்து எந்தவகையினாலும் பிராணிகளைக்கொல்வதற்கு நியாயமிருப் பதாகத் தெரியவில்லை. எல்லாஜீவவர்க்கங்களையும் கடவுள் உண்டாக்கி, அவைஉணவுண்டு சுயேச்சையாக வாழ்வதற்குப் பல நல்லமார்க்கங்களை ஏற்படுத்தியிருக்கின்றார். அவை தங்கள்தங்களுக்கேற்பட்ட உணவைஉண்டு ஆனந்தமாகவாழ் வதற்கு உரிமைபெற்றிருக்கின்றன. அப்படியிருக்க, நீதி தவறி அவற்றிற்குத்தீங்குசெய்வோர் பகுத்தறிவுள்ளமனித ராகார். அஃறிணையைச்சார்ந்த சிலபிராணிகள் இதரபிராணி களைப் பிடித்துதின்று ஜீவிக்கின்றன; இவற்றிற்கு வேறு நல்லஆகாரங்கள் எத்தனையோஇருந்தும், இவை பகுத்தறி வில்லாத பிராணிகளாதலால், மற்றபிராணிகளைப் பிடித்துத் தின்கின்றன; இவற்றைப்போல் பகுத்தறிவுள்ளமனிதர் செய்வது அழகாகாது. கொலைசெய்பவர் பகுத்தறிவில்லாத மிருகங்களுக்கு நிகராவர்.

ஆதலின், மனிதராய்ப்பிறந்த ஒவ்வொருவரும் எவ் வகைக் காரணத்தைக்கொண்டும் கொலைத்தொழில்புரிவது

கூடாது. கொல்லாமையே எல்லாத்தருமங்களிலும் சிறந்த தருமமாகும். கொலைத்தொழில் இல்லாதமனிதரை, உலகத்திலுள்ள பிராணிகளெல்லாம் தெய்வமெனக்கொண்டாடும்.

---

## 4. தமிழ்வியாசம்

ஏதேனு மொருபொருளைப்பற்றி விரித்தெழுதுவதற்கு, வியாசம், என்றுபொருள். 'வியாசம்' என்பது 'விரிவு' என்னும் பொருளைத்தரும். ஆதலின் அது, விரித்தெழுதப்படும், ஒரு பொருளையோ, செயலையோ, குணத்தையோ விளக்கிக் காட்டும். இந்தவியாசம், கல்வியறிவுடையவர்களால் ஒவ்வொருமொழியிலும் எழுதப்படும். தமிழ்மொழியில் எழுதப்படுவது, 'தமிழ்வியாசம்' என்று சொல்லப்படும். இது, நடையிலேயே எழுதப்படும்.

இதனை எப்படிஎழுதுவதெனில், ஒரு பொருளை எடுத்துக்கொண்டு, அதன்உற்பத்தி, தன்மை, அதனை உபயோகிக்கும் விதம், அதன்பயன் ஆகியவற்றை விரித்தெழுதவேண்டும். உதாரணமாக முதலில், பால், என்பதை எடுத்துக்கொள்வோம்; இதைப்பற்றி வியாசம் எழுதவேண்டுமானால்,

பால்:—பாலானது ஆடு மாடுமுதலிய மிருகங்களிடத்தும், மனிதரிடத்தும் உண்டாகின்றது. இது மனிதருக்கும், மற்றபிராணிகளுக்கும் ஆகாரமாகவும், மருந்தாகவும் உபயோகப்படும் ஒருநல்லபானம். தித்திப்புச்சுவையுள்ளது; இது பிராணிகளைக் காப்பாற்றக்கூடியதாதலால் எல்லோராலும்

அமுதமென்றுசொல்லப்படுகிறது. ஆடு,மாடுமுதலியவைகளில் உண்டாகும்பால். அவற்றின்குட்டிகளுக்கும், கன்றுகளுக்கும், மனிதவர்க்கத்தாருக்கும், வேறுபிராணிகளுக்கும் உபயோக மாகின்றது. மருந்துகளுக்கும் உபயோகப்படுகின்றது. மனி தரிடம் உண்டாகும்பால் பிள்ளைகளுக்கும், மருந்துகளுக்கும் உபயோகமாகின்றது. எவ்வாறெனில்,மனிதர், ஆடு,மாடுகளில் உண்டாகும் பாலில் குட்டிகளும், கன்றுகளும் பிழைக்கும்படி அவற்றிற்குவேண்டிய அளவுவிட்டு, அவை குடித்தபின்பு மீதியைக்கறந்து காய்ச்சிக்குடிக்கிறார்கள்; தயிராக்கிச் சாப்பிடு கிறார்கள்; மோராக்கிப்பருகுகிறார்கள்; இன்னும் அப்பாலி லிருந்து, வெண்ணெய், நெய்முதலியவற்றைஎடுத்து உபயோ கப்படுத்துகிறார்கள்; மேலும் பாலைக் குழந்தைகளுக்கும் ஊட்டுகிறார்கள்; தாங்கள்வளர்க்கும் நாய்க்குட்டி, கிளிமுதலிய வற்றிற்கும் ஊட்டுகிறார்கள். காபி, டீ, கொக்கோ முதலிய பானங்களோடும் பாலைக்கலந்து பருகுகிறார்கள். பாலிலிருந்து சில பலகாரங்களும்செய்து சாப்பிடுகிறார்கள்; பாலையும், அதி லிருந்தெடுக்கப்படும் வெண்ணெய், நெய் முதலியவற்றையும் சேர்த்துச் சில லேகியங்கள், மாத்திரைகள்முதலிய மருந்து களும் செய்கிறார்கள்.

மனிதரிடம்உண்டாகும் பாலைக் குழந்தைகள் உண்டு வளர்கின்றன; சிலசமயங்களில், மனிதர்பால் சில மாத்திரை வகைகளிலும், வேறுசில மருந்துகளிலும் சேர்க்கப்படுகின் றது. ஜன்னி, காவறட்சிமுதலிய நோய்களுள்ள மனிதருக்கும் கொடுக்கப்படுகின்றது.

இந்தப்பாலை, எவ்விதமாகவாவது உட்கொண்டுவந்தால், உடம்பில் இரத்தவிருத்தியுண்டாகும்; பலம்அதிகரிக்கும்; பசி

நீங்கும்; வெப்பந்தணியும்; இளைப்புத்தீரும்; வேறுபலநோய்களும் அகலும்.

ஆனல், இந்தப் பால்வகைகளில், பசுவின்பாலும், வெள்ளாட்டுப்பாலும், மனிதர்பாலுமே சிறந்தவைகள். செம்மறியாட்டுப்பால், எருமைமாட்டுப்பால் முதலியவைகளால் விசேஷ நன்மையில்லை; இவற்ருல் வெப்பந்தணியும்; பலமுண்டாகும்; ஆனல், வாயுமுதலியவை அதிகரிக்கும். பொதுவாக நோயுள்ள உடம்பிலிருந்துண்டாகும் எந்தப்பாலினலும் தீமையேவிளையும். ஆகலின், பரிசுத்த உடம்பிலிருந்துண்டாகும் பாலையே உபயோகிக்கவேண்டும்.

இன்னும், புலி, கழுதை, பற்பலபிராணிகளிடத்திலும், ஆல், அத்தி, கள்ளி, எருக்கு, வேலிப்பருத்திமுதலிய மரம் செடிகொடிகளிடத்திலும்கூடப் பால்உண்டாகின்றது. எனினும், அவ்வகைப்பால், மேற்கூறியவற்றின் பாலைப்போல் நன்மைதரத்தக்க பலவகைகளுக்கு உபயோகப்படுவதில்லை. சிலவகைப்பால்கள் உடம்பைவளர்ப்பதற்கும், மருந்துகள் செய்வதற்கும் உபயோகமாகும்; சிலபால்கள் ஒருவகையில் மருந்துமுதலியவற்றிற்கு உபயோகப்பட்டு நன்மைசெய்யும்; சிலபால்கள் முழுதும் தீமையேசெய்யும். எவ்வாறெனில்,

புலி, கழுதைமுதலியவற்றின் பால் அவற்றின்குட்டிகளின் உடம்பைவளர்க்கும்; சிலமருந்துகளிற்சேர்க்கப்படும். ஆல், அத்திமுதலியவற்றின் பால் சிலமருந்துகளிற் சேர்ந்து அவற்றைச் சாப்பிடும்மனிதர்க்குக் குணஞ்செய்யும்; கள்ளிப்பால், எருக்கம்பால்முதலியவைகள் கொடூரமான சிலமருந்துகளைச்செய்ய உபயோகமாம்; தனியாக உபயோகித்தால்

வேக்காடு முதலிய தீமைகளைச்செய்து மனிதருக்கு உயிர்ச் சேதத்தையுமுண்டாக்கும்.

ஆதலின், "இந்தப் பால்வகைகளை ஆராய்ந்து, நல்லபால் வகைகளை உபயோகிப்பவர்கள், நோயின்றி உடல்வலிமை பெற்று உலகத்தில் இன்புற்றுவாழ்வார்கள்" என்றெழுத வேண்டும்.

இரண்டாவதாக வியாசம் எழுதுவதற்கு நெசவுத் தொழிலை எடுத்துக்கொள்வோம்; இதைப்பற்றி ஒருவியசாம் எழுதவேண்டுமானால்,

நெசவுத் தொழில்:— 'நெசவுத்தொழில்' என்பது, துணிகள் முதலியவற்றை நெய்யும்வேலையாம். இத்தொழில் பஞ்சு நூலைக்கொண்டு மனிதர்களால் செய்யப்படுகிறது. 'கைக்கோளர்' என்னும்வகுப்பாரே பெரும்பான்மையும் இத் தொழிலைச்செய்யக் கூடியவர்கள்.

நம் இந்தியநாட்டிலே முற்காலத்திலிருந்தவர்கள், பருத்திச்செடிகளை உண்டாக்கி, அவற்றின் காய்களிலிருந்து பருத்தியைஎடுத்து, அதிலுள்ள கொட்டையைநீக்கி, அப் பருத்தியைப்பஞ்சாக்கி, அப்பஞ்சைக் கதிர்களாலும், இராட்டினங்களாலும்நூலாக்கி, அந்தநூலைத் தறிகளிலிட்டுத்துணிகளாக நெய்துவந்தார்கள்; இது மிகவும் பிரயாசையான வேலையாகையால் அக்காலத்தில் துணிகள் அதிகமாக உற்பத்தியாகவில்லை. அதனால் நம்நாட்டுமக்கள் செட்டாகத் துணிகளைக்கட்டிவந்தனர். இக்காலத்திலோ பருத்தியைப்பஞ்சாக்கும் இயந்திரங்

களும், பஞ்சை நூலாக்கும் இயந்திரங்களும், நூலை ஆடைகளாக்கும் இயந்திரங்களும் எங்கும் அதிகரித்திருக்கின்றன; பஞ்சு, நூல், நெசவு முதலியவற்றின் தொழிற்சாலைகளும் பலவிடங்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன; இவற்றில், கைக்கோளர்மாத்திரமின்றி எல்லாவகுப்புமனிதர்களும் வேலை செய்துவருகிறார்கள்; இத்தொழிற்சாலைகளின்மூலமாக ஏராளமான ஆடைகள் உற்பத்தியாகின்றன. ஆதலின், நம்நாட்டு மனிதர், துணித்தட்டின்றிச் சிறுவிலையில்பலதுணிகளைவாங்கிக் கட்டிவருகின்றனர்; ஏழைமக்களும் தாராளமாகத் துணிகளை வாங்கிக் கட்டிவருகின்றனர்.

ஆதலின், இந்த நெசவுத்தொழிலானது நம்நாட்டிற்குப் பெரிய நன்மையைத்தரக்கூடியது; இலாபந்தரக்கூடியது; ஏழைகளும் கஷ்டமின்றிவாழ்வதற்கு அனுகூலஞ்செய்வது; பிறருக்குத் தீங்குவிளைவிக்காதது; இலகுவிற்செய்யக்கூடியது; சோம்பலைப்போக்குவது; சுயேச்சையாயிருக்கச்செய்வது; அடிமைத்தனத்தைநீக்குவது; பாபமில்லாதது. இதனுடைய உயர்வை யுணர்ந்தே, திருவள்ளுவநாயனாரும் இந்தப் பாபமற்ற தொழிலைச் செய்துவந்திருக்கிறார்.

இப்பேர்ப்பட்ட நெசவுத்தொழிலை நம்நாட்டில் விருத்தி செய்யவேண்டும்; இக்காலத்தில் தேசநன்மையைக்கருதி நம்நாட்டிலுள்ள பலரும்கதர்நூல்நூற்றுக் கைந்நெசவு செய்து வருகின்றார்கள். இவ்வாறுசெய்துவருவது பெரிதும் நன்மையே. எனினும், இத்தகைய நெசவால் நம்நாட்டுமக்களுக்குப்போதுமான ஆடைகள் வெளிவரவில்லை; தொழில்செய்வார்க்கும் விசேஷஇலாபமில்லை. ஆதலின், நம்நாட்டிலுள்ள

பணக்காரர் பலரும் சேர்ந்து பற்பலவிடங்களில், நூல்நூற்கும் இயந்திரசாலைகளையும், நெசவுத்தொழிற்சாலைகளையும் ஏற்படுத்தவேண்டும்; நம் நாட்டுமக்கள் பலரும் அவற்றில் வேலை செய்துவரவேண்டும்.

"இப்படி நெசவுத்தொழிலை விருத்திசெய்தால் நம்இந்தியாவில் துணிப்பஞ்சம்தொலையும்;எங்கும் செல்வம் பெருகும்; ஏழைமக்கள் கஷ்டமின்றிஜீவிப்பார்கள்; எங்கும்ஆனந்தமே குடிகொண்டிருக்கும்'' என்றெழுதவேண்டும்.

மூன்றாவதாக வியாசம் எழுதுவதற்கு, 'அன்பு'என்னும் குணத்தை எடுத்துக்கொள்வோம்; இதைப்பற்றி வியாசம் எழுதவேண்டுமானால்,

அன்பு:—மனிதர்க்கு இருக்கவேண்டிய மேலானகுணங்களில், 'அன்பு' என்பது மிகச்சிறந்தகுணமாம். இது, எல்லா மனிதர்களிடத்திலும் உண்டாகமாட்டாது; உத்தமவகுப்பிற் பிறந்த புத்திமான்களின் உள்ளத்தில்மாத்திரமே உண்டாகும்.

ஒருவர்உள்ளத்தில் ஏற்படும் இரக்கமே; 'அன்பு' என்று சொல்லப்படும். கைம்மாறுவேண்டாமல் பிறவுயிர்களின்மீது செலுத்தும் கருணையே அன்பு. தாய்தகப்பன்மார், மக்களிடத்திலும், மக்கள் தாய்தந்தையரிடத்திலும், அரசன் குடிகளிடத்திலும், குடிகள் அரசனிடத்திலும், கடவுள் அடியார்களிடத்திலும், அடியார் கடவுளிடத்தும், பெரியோர் பிராணிகளிடத்திலும், பிராணிகள் பெரியோரிடத்திலும் காட்டும் மனக்கசிவே அன்பாகும்.

மனிதராய்ப்பிறந்த ஒவ்வொரும் இந்த அன்பைப் பெற்றிருத்தல் வேண்டும். பிள்ளைகளிடத்திலும், சுற்றத்தாரிடத்திலும், மற்றமனிதரிடத்தும், பிராணிகளின் மீதும் கருணை செலுத்தவேண்டும்; பெரியோரிடத்திலும், அரசரிடத்திலும் பற்றுவைத்து அவர் மனமகிழ நடந்துகொள்ளவேண்டும்; மனிதர் பசியாலோ, நோயாலோ வருந்தக்கண்டால் அவ்வருத்தம் தமக்கு வந்ததுபோல்நினைத்து மனதிரங்கி அவர்க்குதவி செய்தல்வேண்டும்; மற்றபிராணிகளுக்கும் துன்பம் வந்தபோது இரங்கி அத்துன்பத்தை அகற்றவேண்டும்.

அன்பில்லாதவர், மனிதராகார்; அவர்க்கு உலகத்தில் ஒருவிதநன்மையும் ஏற்படாது, அவரை எவரும் சட்டை பண்ணமாட்டார்; உலோபிகளென்றும், கன்னெஞ்சரென்றும் நிந்திப்பர்.

"அன்புடையவர்களுக்கு உலகத்தில் எல்லாநன்மைகளும் ஏற்படும்; பலரும் உறவினராவர்; எதிலும் வெற்றிகிடைக்கும்; அவர்களை உலகத்தார் பலவிதமாகப்புகழ்வார்; தந்தையென்றே மதித்துக்கொண்டாடுவர்; இதரபிராணிகளும் அவரைவாழ்த்தும்; இம்மையிலும், மறுமையிலும் அவர்கள் அழியாச்சுகத்தை அடைவார்கள்" என்றெழுதவேண்டும்.

இதில், 'பால்' என்னும் ஒருபொருளைப் பற்றியும், 'நெசவுத்தொழில்' என்னும் ஒரு செயலைப்பற்றியும், 'அன்பு' என்னும் ஒருகுணத்தைப்பற்றியும் மூன்று வியாசங்கள் சுருக்கமாக இங்கு விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன. இந்தவிதமாகவே, மனதில் தோன்றும் எந்தப் பொருளைப் பற்றியும் வியாசம் எழுதலாம். பொருள்களின் தன்மைக்குத்

தக்கபடி இங்கே காட்டிய வியாசங்களைப்போல அவற்றைச் சிலவகைகளாகப்பிரித்துச் சுருக்கியாவது, பலவகைகளாகப் பிரித்து விரித்தாவதுஎழுதலாம். எடுத்துக்கொண்ட பொருளின் தன்மைகளைப் பல பாகுபாடுகளாகப்பிரித்து ஒவ்வொரு வகையையும் சுருக்கியோ, விரித்தோஎழுதுவது அவரவர்களின் புத்தியைப்பொறுத்ததாகும்.

மாணவர் இந்தமுறைகளைப் பின்பற்றினல்எளிதில் வியாசங்கள் எழுதப் பழகிக்கொள்ளலாம். இத்தகைய வியாசங்கள் பல, கல்விமான்களால் பத்திரிகைகளிலும், புத்தகங்களிலும் வெளிவருகின்றன. அவற்றைப் படித்துவருவதாலும் வியாசமெழுதும் பழக்கமுண்டாகும்.

இப்படிப் பலவியாசங்களைப்படிப்பதாலும் அப்படிப்பைக் கொண்டு பழகி வியாசங்கள் எழுதுவதாலும், எழுதிய வியாசங்களைப் பத்திரிகைகளில் வெளியிடுவதாலும், கூட்டங்களில் படிப்பதாலும், எடுத்துப் பிரசங்கிப்பதாலும் கல்விகற்றுக் கொள்பவர்க்கு மேலும்மேலும் கல்விஞானம் அதிகரிக்கும்; அறிவு வளர்ச்சியடையும்; உலக இயற்கை முற்றும்விளங்கும்; கூட்டத்தில் பேசும்வல்லமையுண்டாகும். வியாசம்எழுதப் பழகிக்கொள்ளாதவர், எவ்வளவு கல்வியைக்கற்றிருந்தாலும் அக்கல்வியால் சிறப்படையமாட்டார்கள். சுயமொழியில் வியாசமெழுதும்பழக்கம் மேல்நாட்டாரிடம் மிகுதியும்உண்டு. அதனலேயே அவர்கள், கல்வியில்சிறந்தவர்களாய் விளங்குகின்ருர்கள். அவர்கள்மொழியும் மேன்மையுறுகின்றது.

ஆகலின், நாமும் நம்முடைய தாய்மொழியாகிய தமிழில் வியாசங்களை யெழுதப்பழகவேண்டும். அங்ஙனம் பழகிவந்

தால் நம் தமிழ்மொழியும் வளர்ச்சியடையும்; நாமும் பலவகை களில் மேன்மை அடைவோம்.

---

## 5. லைபரேரியும், அதன் அவசியமும்

'லைபரேரி' என்பது வாசகசாலை. அதாவது, பொது ஜனங்கள் பலரும்கூடி நூல்களையும், பத்திரிகைகளையும் படிக்கு மிடமாம். இதில்படிப்பதற்கு, வருவோரிடம் பணம்வாங்கும் வழக்கமில்லை. பொதுநலப்பிரியராகிய சிலதனவந்தரின் பண வுதவியைக்கொண்டும், இலவசமாகச் சிலர்கொடுக்கும் புத்த கங்களைக்கொண்டும், பத்திரிகைகளைக்கொண்டும் இந்தவாசக சாலை அமைக்கப்படும். ஆதலின், இதில், ஏழைகள் முதல் தனவந்தர் ஈறுகச் சகலரும்வந்து இலவசமாக நூல்களையும், பத்திரிகைகளையும் படிக்கலாம்

ஒருநகரத்தில் இந்தவாசகசாலை அமைக்கப்பட்டால், அங்கே எந்தஎந்தமொழிகள் வழங்கப்படுகின்றனவோ, அம் மொழிகளில்உள்ள எல்லாநூல்களும், எல்லாப்பத்திரிகை களும் கிடைத்தவரையில் சேகரித்துவைக்கப்படும்; வேறு மொழிகளில் கிடைக்கும் நூல்களும், பத்திரிகைகளும்கூட வைப்பதுவழக்கம். நூல்களில் அச்சிடப்பட்டவைகளும், அச்சிடப்படாதவைகளும் சேகரித்துவைக்கப்படும்.

இது, நடைபெற்றுவருவதற்குச் சிலர், மூலதனமாகப் பெருந்தொகைப்பணமும், சிறுதொகைப்பணமும் கொடுப் பார்கள்; சிலர், அங்கத்தினராகச்சேர்ந்து மாதந்தோறும் சிறுசிறுதொகைப்பணங்களைச் சந்தாவாகச் செலுத்திவரு

வார்கள்; சிலர் தங்களிடமிருக்கும் பழையபுத்தகங்களை இல வசமாக அனுப்புவார்கள்; சிலர், கைப்பணங்கொடுத்துப் புத்தகங்களை வாங்கியனுப்புவார்கள்; பெரியபடிப்பாளிகளும், புலவர்களும் இறந்துபோகுங்காலத்தில் தங்களிடமிருக்கும் ஏராளமானபுத்தகங்களைப் படிப்பாரில்லாவிடின் இந்தவாசக சாலையிற் சேர்த்துவிடுவார்கள். சிலர் தங்களுக்குவரும் பத்திரிகைகளைப்படித்துவிட்டு இவ்வாசகசாலைக்கனுப்பிவிடுவார்கள், சிலர், பணங்கட்டிப் பத்திரிகைகள் வரும்படி செய்வார்கள்; இந்தவாசகசாலைக்கு அங்கத்தினர்கள்தவிர, தலைவர், உப தலைவர், காரியதரிசி முதலியவர்களுமிருப்பார்கள்.

இவர்களுடைய பார்வையில் வாசகசாலையின்காரியங்கள் நடைபெற்றுவரும். அங்கேயிருக்கும் புத்தகங்களுக்கும், பத்திரிகைகளுக்கும் இவர்கள் சரியான கணக்குவைத்திருப்பார்கள்; எல்லாவற்றிற்கும் பெயர் முதலெழுத்துவரிசைப்படி நம்பரிட்டு அவைகளைக் கணக்குப்புத்தகங்களிற் பதிந்துகொண்டு பீரோக்களில் அடுக்கிவைத்திருப்பார்கள்; மேலும் மேலும் இலவசமாகக்கிடைக்கும் புத்தகங்களையும், பத்திரிகைகளையும் சேகரித்துக்கொண்டேயிருப்பார்கள்; இலவசமாகக் கிடைக்காதவைகளை விலைக்குவாங்கிவைப்பார்கள். எல்லாவற்றையும் மேற்கூறியபடி நம்பரிட்டுக் கணக்குப்புத்தகங்களில் பதிந்துவைத்திருப்பதால் அவற்றில் எதையும் நினைத்த மாத்திரத்தில் சுலபமாக எடுத்துக்கொள்ளலாம்.

இப்படி, லைபரேரியில் எல்லாவகைநூல்களும், பத்திரிகைகளும் சேகரித்துவைக்கப்படுவதால், யார்யாருக்கு எந்த எந்தநூல்கள், எந்த எந்தப்பத்திரிகைகள் தேவையோ,

அவற்றையெல்லாம் நினைத்தபோதெல்லாம் அவர்கள்சென்று படித்துப்பார்த்துக்கொள்ளலாம். அதிகவிலையுள்ள புத்தகங்களை வாங்கமுடியாதஏழைகள் இங்கேவந்து அவற்றைப் படித்துணர்ந்துகொள்ளலாம். இலக்கண இலக்கியங்களிலோ, கணிதத்திலோ, சோதிடத்திலோ, வைத்தியத்திலோ, வானசாஸ்திரத்திலோ, பூமிசாஸ்திரத்திலோ, இரசாயனசாஸ்திரத்திலோ, தேசப்பயிற்சியிலோ, கைத்தொழிலிலோ, விவசாயத்திலோ, வியாபாரத்திலோ, இன்னும்வேறு எந்தவகையிலோ ஒன்றைப் பார்க்கவேண்டுமானாலும், ஒருசந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ளவேண்டுமானாலும், ஒரு நூலையே படிக்கவேண்டுமானாலும் மனிதர்இந்தவாசகசாலைக்கு வந்து தங்கள்நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளலாம்.

இவ்வாறு ஏற்படுத்தப்படும் வாசகசாலைகளின் சிலவற்றில் பொதுஜனங்கள்வந்து நூல்களையோ, பத்திரிகைகளையோ படிப்பதற்குமாத்திரம் அவற்றின்காரியஸ்தர்கள் அவர்களுக்கு உரிமையளித்திருக்கிறார்கள். படிக்கிறவர்கள் இந்த லைபரேரிகளில்வந்து வேண்டியவற்றைக் காரியஸ்தரிடம் கேட்டுவாங்கிப் படித்துவிட்டுமட்டும் போகலாம்; வெளியில் எதையும் கொண்டுபோதல்கூடாது. சிலவாசகசாலைகளில், படிக்கவிரும்புவோர், எதையும்காரியஸ்தரிடம் கேட்டுவாங்கிக் கொண்டுபோய் வீட்டில்வைத்துப் படித்துவிட்டுத் திரும்பக் கொண்டுவந்து சேர்ப்பதற்குத்தக்க ஏற்பாடுகளை அவற்றின் தலைவர்கள் செய்திருக்கிறார்கள். இவற்றில், புத்தகமோ, பத்திரிகையோ வாங்கிப்படிக்கவிரும்புவோர், காரியஸ்தரிடம், இன்னது வேண்டுமென்றும், அதை இத்தனைநாட்களில் திரும்பக்கொண்டுவந்து கொடுத்துவிடுவேனென்றும் தெரிவிக்க

வேண்டும். காரியஸ்தர், அவர் பெயரையும், அவர் கேட்ட புத்தகம் அல்லது பத்திரிகையையும், தவணை நாளையும் பதிவு புத்தகத்தில்எழுதி அவரிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டு அவர்விரும்பியதைகொடுப்பார். அதைஎடுத்துச்செல்பவர், படித்துவிட்டுக் குறிப்பிட்டதினத்தில் திரும்பக்கொண்டு வந்து காரியஸ்தரிடம்சேர்த்து, அவ்விவரத்தைப் பதிவு புத்தகத்தில்எழுதச் செய்துவிடவேண்டும்.

இவ்விரண்டுவித ஏற்பாடுகளைக்கொண்டுதான் இக்காலத்தில் பற்பலவிடங்களில் வாசகசாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்தவாசகசாலையால் உண்டாகும் நன்மைகள் பல; மாணவர்கள், பள்ளிக்கூடத்தில் படித்துவிட்ட பாடங்களை மேலும்மேலும்படித்து விருத்திசெய்துகொள்வதற்கு இந்த லைபரரி அனுகூலமாயிருக்கின்றது. மற்றவர்களும் கல்வியை விருத்திசெய்துகொள்வதற்குப்பெருந்துணையாயிருக்கின்றது. உலகத்தில் உண்டான பலவகைத்தொழில்களையும் போதிக்கக்கூடிய சகல சாஸ்திரங்களும் இதில்நிரப்பியிருப்பதால், யார் யார் எந்தஎந்தத் தொழில்களைக்கற்றிருக்கின்றார்களோ அந்த அந்தத் தொழில்களைப்பற்றிய நூல்களை அவரவரும்படித்துத் தங்கள்தங்கள் தொழில்களை விருத்திசெய்துகொள்வதற்கும் இவ்வாசகசாலை ஏதுவாகயிருக்கின்றது; பலவகைப்பட்ட தொழில்களை மனிதர்செய்து பணந்தேடி இனிதாகவாழ்வதற்கும் ஏதுவாயிருக்கின்றது; அறிவுஅதிகரிப்பதற்கும், நாகரீக மோங்குவதற்கும், செல்வம்பெருகுவதற்கும், அரசியல்களை அறிந்துகொள்வதற்கும், உலகியலை உணர்ந்துகொள்வதற்கும், பலநீதிகளைத் தெரிந்துகொள்வதற்கும், புறநாட்டு

வர்த்தமானங்களை அறிந்துகொள்வதற்கும், மனிதர் கடமைகளை ஆராய்வதற்கும், சோம்பலைப்போக்கிச் சுறுசுறுப்படைவதற்கும், காலத்தைப் பயனுடையதாகக் கழிப்பதற்கும், ஆனந்தமாகப் பொழுதுபோக்குவதற்கும், இன்னும் பற்பல நன்மைகளை அடைவதற்கும் ஏற்றதாயிருக்கின்றது. ஒரு நாட்டிற்கு வாசகசாலையே பெருஞ்செல்வக்களஞ்சியமென்று சொல்லலாம்.

மேல்நாட்டுக்காரர்கள் இந்த லைபரேரியின்பயனை நன்குணர்ந்திருக்கிறார்கள்; அதனாலேயே அவர்களுடைய நாடுகளில் எங்கேபார்த்தாலும் லைபரேரிகள்நிரம்பியிருக்கின்றன; அமெரிக்காமுதலிய தேசங்களில் உள்ளவர்கள் ஊர்களிலும், நகரங்களிலும் வாசகசாலைகளை அமைத்திருப்பதுடன், மனிதர் பிரயாணஞ்செய்யும் புகைவண்டித் தொடர்களிலும்கூட வாசகசாலையமைத்து அவ்வண்டிகள் போய்க்கொண்டிருக்கும்போதே ஆங்காங்குள்ளவர்களுக்குப் புத்தகங்களையும், பத்திரிகைகளையும் படிக்கக்கொடுத்துத் திரும்பிவரும்போது அவற்றை அவர்களிடம் வாங்கிக்கொண்டுவருகிறார்கள். வாசகசாலைகள் இவ்வாறு அந்நாடுகளில் பரவியிருப்பதனாலேயே எல்லோரும் கல்வியில் மிகத் தேர்ச்சியுற்றவர்களாயிருக்கின்றார்கள்; அறிவிற் சிறந்தவர்களாய் விளங்குகிறார்கள்; கைத்தொழில்முதலியவற்றில் கைதேர்ந்தவர்களாயிருக்கின்றார்கள்; பொருள்தேடும்மார்க்கங்களை நன்றாகஉணர்ந்துகொண்டிருக்கிறார்கள். எங்கும் செல்வம்பெருகிச் செழித்திருக்கின்றது; நாகரீகம்நாள்தோறும் ஓங்கி வளர்ந்துவருகின்றது. எவரும், எதிலும் வெற்றிபெறுகிறார்கள்; வீரத்திலும் சிறந்துவிளங்குகிறார்கள்.

ஆதலின், நம்முடையநாட்டிலும் இவ்வாசகசாலைகள் ஏற்படுவது அவசியமாகும். சென்னை, மதுரை, தஞ்சை, திருச்சி முதலிய பெரியநகரங்களிலெல்லாம் கவர்ன்மெண்டா ராலும், நம்நாட்டுப்பெரியாராலும் லைபரேரிகள் ஏற் படுத்தப்பட்டிருக்கின்றன; சிற்சில சிறியநகரங்களிலும், கிரா மங்களிலும் சிலவாசகசாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. எனினும், இக்காரியத்தில், மற்றநாடுகளோடு நம்நாட்டை ஒப் பிட்டுப்பார்க்கும்போது இது, மிகத் தாழ்ந்தநிலையிலிருக்கின் றது. நம்நாட்டிலும் வாசகசாலைகள் இருக்கின்றன என்று சொல்லி நாம் பெருமையடைவதற்குப் போதுமான லைப்ரேரி கள் இங்கில்லை. இருக்கும் லைப்ரேரிகளிலும் எங்கோ சில லைப்ரேரிகள்தாம் எல்லோருக்கும் உபயோகப்படக்கூடியவை களாயிருக்கின்றன; மற்றவைகள் சிலவகுப்பாருக்கென்று மாத்திரம் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இவற்றால் நம்நாடு முன்னேற்றமடையாது. நம்நாடு கல்வியிலும், செல்வத்திலும், நாகரீகத்திலும், சௌக்கியத் திலும் சிறப்புற்று விளங்கவேண்டுமானால், நம்தேசத்தில் எங்கும் ஒவ்வொரு சிறுகிராமங்களிலும்கூட எல்லோருக்கும் உபயோகப்படத்தக்க லைப்ரேரிகளை ஏற்படுத்த நாம் ஒவ் வொருவரும் பெருமுயற்சி யெடுத்துக்கொள்ளவேண்டும். இப் போது ஏற்படுத்தப்பட்டிருக்கும் வாசகசாலைகளையும் விருத்தி செய்யவேண்டும். ஒருநாட்டிற்குக் கல்விச்சாலைகளைக்காட் டினும் வாசகசாலைகள் மிகஅவசியமானவை. மற்றவர்களைக் காட்டினும் மாணவர்கள்தாம் லைப்ரேரிகளைப்பாதுகாப்பதில் மிகச் சிரத்தையுடையவர்களாயிருக்கவேண்டும்.

# 6. விக்கிரமார்க்கன்

பண்டைக்காலத்தில் இந்தியநாட்டை ஆண்டுவந்த மன்னர்களில்,விக்கிரமார்க்கன் மிகச்சிறந்தவன். சூரியன் உலக முழுவதிலும் தன்பிரகாசத்தைப் பரப்பிவருவதுபோல இம் மன்னனும், தன்வெற்றியால் எங்கும் புகழைப்பரப்பிவந்த வன். அதனாலேயே இவனுக்கு, 'விக்கிரமார்க்கன்' என்னும் பெயர் ஏற்பட்டது. விக்கிரமம்-வெற்றி, அர்க்கன்-சூரியன்; இவ்விரண்டு பெயர்களும்சேர்ந்து, விக்கிரமார்க்கன்' என் றாயின; "வெற்றியால் சூரியனுக்குச் சமமானவன்" என்பது இதன்பொருளாம். இந்தப்பெயர், 'விக்கிரமாதித்தன்' என்று மற்றொருவகையாகவும் வழங்குகின்றது. அதற்கும் இதே பொருள்தான். ஆதித்தன்-சூரியன்.

இவன், குப்தர்வம்சத்தைச் சார்ந்தவன். பரதகண் டத்தை ஒருகுடைநிழலில் ஆண்டுவந்த, அசோகன் இறந்ததி லிருந்து அறுநூறுவருடங்கள்சென்றபிறகு 'குப்தர்' வம்சம் தோன்றிற்று. அந்தமரபில் 'சந்திரகுப்தன்' என்னும் அரசன் தோன்றி 'மகதநாட்டில்' அரசுசெலுத்திவந்தான். அவனுக்கு 'சமுத்திரகுப்தன்' என்னும் குமாரன் ஒருவன் பிறந்தான்; இவன், பிரான்ஸ் யுத்தவீரனாகிய நெப்போலியனுக்கு ஆயிரத் தைந்நூறு ஆண்டுகளுக்கு முன்னிருந்தவன். நெப்போலியனை வீரத்தில், இந்தச்சந்திரகுப்தனுக்கு நிகரானவன்என்று அறிஞர் ஒப்பிட்டுக்கூறுவது வழக்கம். இதனாலேயே சந்திர குப்தன்வீரம் இப்பேர்ப்பட்டதென்பதை எல்லோரும் தெரிந்துகொள்ளலாம். இந்தச்சமுத்திரகுப்தன் பலதேசத் தரசர்களையும் வென்று தன்னுடையவெற்றிக்கொடியை நிலை நாட்டியிருக்கிறான். இவன்சமஸ்தானத்திலிருந்த 'ஹரிசேனர்'

என்பவர், இவனுடைய வெற்றியைப்புகழ்ந்து வடமொழியில் கவிபாடியிருக்கின்றார். இவன் திக்குவிஜயம்செய்து பற்பல இடங்களிலும் வெற்றிபெற்று வந்தகாலத்தில், அசோகனால், அலகாபாத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் கீர்த்திஸ்தம்பத்தில், அவனுடைய புகழ்க்கல்வெட்டுக்குக்கீழே தன்னுடைய கீர்த்தியை, எழுதிவைக்கும்படி செய்திருக்கிறான். அந்தக் கல்வெட்டில், இவன் வீரத்தில்சிறந்தவனென்பதும்,கவிபாடுங் கல்விமானென்பதும் விளங்குகின்றன. மேலும் இந்தச் சமுத்திரகுப்தன்காலத்து நாணயம் ஒன்று கண்டெடுக்கப் பட்டிருக்கிறது. அதில், இம்மன்னன் வீணையைக்கையில் வைத்து மீட்டிப் பாடிக்கொண்டிருக்கும் தோற்றம் காட்டப் பட்டிருக்கிறது. அதனால் இவன், சங்கீதஞானமுள்ளவனென் பதும் விளங்குகின்றது.

இந்தச்சமுத்திரகுப்தனுக்கு, ஒரு புத்திரன் பிறந்தான். இவனுக்கு, இவனுடைய பாட்டன்பெயராகிய 'சந்திரகுப்தன்' என்னும்பெயரே பெரியோர்களால் இடப்பட்டது. இவன், தாய் 'தத்தாதேவி' என்பவளாவள். இந்தச்சந்திரகுப்தன் தான், 'விக்கிரமார்க்கன்' என்பவன். இவனே விக்கிரமார்க் கன்என்பதை, இந்துதேச மன்னர்சரித்திராசிரியராகிய, 'ரா. கோ. பண்டார்க்கர்' என்பவர் சரித்திர ஆராய்ச்சிகளில் விளக்கமாக வெளியிட்டிருக்கின்றார். சந்திரகுப்தனுக்குண் டான வெற்றியின்சிறப்புநோக்கி, 'விக்கிரமார்க்கன்' என்ற பட்டப்பெயர் ஏற்பட்டிருக்கக்கூடுமென்றும், இருபெயர் களும் தனித்தேனும் சேர்ந்தேனும் இவனுக்குவழங்கியிருக்கக் கூடுமென்றும் சிலர் ஊகித்துத் தீர்மானிக்கின்றனர். இதற் காதாரமாகப் பூமியில்கண்டெடுக்கப்பட்ட விக்கிரமார்க்கன்

காலத்து நாணயமொன்றில், 'விக்கிரமாதித்திய சந்திரகுப்தன்' என்னும்பெயர் வரையப்பட்டிருக்கின்றது. இன்னும் அதில் கைகளில் வில்லையும், அம்பையும்பிடித்துநிற்கும் ஒரு வீரபுருஷனது தோற்றம் காணப்படுகின்றது. இவற்றினல், சந்திரகுப்தனே, விக்கிரமார்க்கன்என்பதும், இவன் வில் வீரத்தில் சிறந்தவனென்பதும் ஒருவாறு விளங்குகின்றன.

மேலும் விக்கிரமார்க்கனிடத்தில் வில்லொன்றிருந்ததென்றும், அதனைவளைப்பது எவராலும் முடியாதென்றும், அதனைவளைக்கக்கூடியவன் விக்கிரமார்க்கன் ஒருவனேயென்றும் சிலர்கூறுகின்றனர். இவர்கள் இவ்வாறுசொல்லும், விக்கிரமார்க்கன் வில்யுத்தவெற்றியில் சிறந்தவனென்பதை உறுதிப்படுத்துகின்றது. இன்னும், சந்திரகுப்தனுகிய இந்த விக்கிரமார்க்கனை, 'இரண்டாம்சந்திரகுப்தன்' எனவும் சரித்திரஆராய்ச்சிக்காரர்கள் கூறுகின்றார்கள். குப்தர்வமிசஅரசர்களில் 'சந்திரகுப்தன்' என்னும்பெயரை முதலில்ஏற்றவன் இவன்பாட்டனும், இரண்டாமவனுகஏற்றவன் இந்த விக்கிரமார்க்கனுமாதலின், இவனை, இரண்டாம்சந்திரகுப்தனென்று சரித்திரஆராய்ச்சிக்காரர்கள் குறிப்பிட்டிருக்கலாம்.

இரண்டாம்சந்திரகுப்தனும், விக்கிரமார்க்கனும் ஒன்றேயென்பதற்கு இவ்வாறு பலஆதாரங்கள் ஏற்பட்டிருந்தாலும், சிலர் 'இரண்டாம்சந்திரகுப்தன்வேறு, விக்கிரமார்க்கன்வேறு' என்று கூறுகின்றனர். இவர்கள் ஒன்றுயிருந்தாலும்சரி, வேருயிருந்தாலும்சரி; விக்கிரமார்க்கன் என்னும் பெயருடையவன் பெரியகீர்த்திமான் என்பதில்மட்டும் சந்தேகமேயில்லை. இவனுடையசிறப்புக்கள் பலபுத்தகங்களிற் காணப்படுகின்றன.

இந்தவிக்கிரமார்க்கன் அரசுசெலுத்தியஇடம் மாளவ தேசத்தைச்சார்ந்த, 'உஜ்ஜயினி' என்னும் நகரமாகும். இந்த உஜ்ஜயினிநகரமானது, விந்தியமலைக்கும், அரவல்லிமலைக்கும் நடுவில்இருக்கின்றது. இவ்வரசன், கல்வியிற் சிறந்தவன், அறிவில்மேம்பட்டவன்; வீரத்திற்பெரியவன்; மனவுறுதியுள் ளவன்; நினைத்ததைச் செய்துமுடிக்கும் நேர்மையுள்ளவன்; பிறரைத் தன்வசப்படுத்தும் பெரியசித்திபெற்றவன்; இராஜ தந்திரங்களை நன்குணர்ந்தவன்; தெய்விகமான சிங்காதனத் தைப்பெற்றவன்; செங்கோல்முறை பிசகாதவன்; நடுநிலைமை யுடையவன்; குடிகளுக்கிதமேசெய்யுங் குணவான்; ஈகையிற் சிறந்தவன்; ஏழைக்கிரங்கும் இதமுள்ளவன்; தன்னிடம்வரும் வழக்குகளை மிகவும்ஒழுங்காகத் தீர்த்துவிடுவான்; இவன் செய்யும் தீர்ப்பினால் வாதி, பிரதிவாதிகள்இருவரும் திருப்தி யடைவார்கள்; இவன்செய்த தீர்மானங்களால் எவரும் வருத்த மடைந்ததே கிடையாது; இவன், தற்பெருமையடைவதே யில்லை; சுயநலத்தை எப்பொழுதும் விரும்புவதேயில்லை; இவன், பெரியசக்கரவர்த்தியாயிருந்தும் சாமானிய மனிதரைப் போலவே யிருந்துவந்தான்; சாதாரண உணவுண்டு இடம்பமற்ற ஆடையாபரணங்களணிவதே இவனுடைய வழக்கம்; இன்னும் இவன் உயர்ந்த படுக்கைகளையும் விரும்பு வதில்லை; பாயில்தான்படுப்பான்; வழக்குகளில் கஷ்டப்பட்டா வது உண்மையைக்கண்டுபிடிப்பான்; உண்மைதெரிவதற்காக மாறுவேடம்பூண்டு நகர்சோதனைசெய்வான்; பிறர்குற்றங்களை எளிதில்தெரிந்துகொள்வான்; மனிதர், தன்னைப்பற்றி என்ன பேசிக்கொள்கிறார்களென்று இரகசியமாக அவர்களுடைய பேச்சுக்களைக்கேட்டுத் தன்னிடம்குறைவுஇருந்தால் அதை நீக்கிவிடுவான்; குடிகளுக்குக்குறைவிருப்பதாகத்தெரிந்தால் அதையும் அகற்றுவான்.

இவன்காலத்தில், இந்தியநாட்டில் பிராணிகளை வதைக்கும் கொடுந்தொழில்இல்லை; புலால் உண்பவர் பெரும்பான்மையும்இல்லை; புலால்புசித்தவர் சண்டாளர்என்று அறிவுடையோரால் கருதப்பட்டுவந்தார்கள். இவன் ஆளுகையில் திருடரைக்காண்பது அரிதாயிருந்தது. வழிப்பிரயாணத்தில் மனிதர்க்குப் பயமேகிடையாது; தூக்குத்தண்டனைகிடையாது; இராஜத்துரோகிகளும், கொலைமுதலிய பெருங்குற்றங்களைச் செய்தவர்களும் வலக்கைமாத்திரம் துணிக்கப்படும்தண்டனையை அடைந்துவந்தார்கள்; வரியால் ஜனங்கள் வருந்தினது இல்லை. ஜனங்கள் பூமியிலிருந்து அடையும்பயனில் சிறிது பாகத்தைமாத்திரந்தான் இவன் அவர்களிடம் அரசிறையாக வாங்கிவந்தான்; அவ்வருமானத்தையும் குடிகளின்சௌகரியத்திற்கும், கல்விச்சாலைகளுக்கும், வைத்தியசாலைகளுக்கும், அறநிலையங்கட்கும், இன்னும் இவைபோன்ற பலநற்காரியங்களுக்குமே செலவுசெய்து வந்தான்.

இன்னும் இவன், பிறமதத்தினருக்கு இடர்விளைத்ததில்லை; அக்காலத்திலிருந்த ஜைனபௌத்தமதங்களுக்கு ஒருசிறிதும் தீங்குசெய்ததில்லை; இம்மன்னன் விசேஷமாக வடமொழிக்கல்வியை வளர்த்துவந்தான். பலவித்வான்களை ஆதரித்துவந்தான். இவனுடைய இராஜசபையில், 'கவிநவரத்தினங்கள்' என்னும் ஒன்பதுவித்வான்கள் இருந்துவந்தார்கள்; அவர்கள், தன்வந்திரி; க்ஷபணகன், அமரசிம்மன், சங்கு, வேதாளபட்டன், கடகாப்பரன், காளிதாசன், வராஹமிஹிரன், வாருசி என்பவர்களே. இவர்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கல்வியில் தேர்ச்சிபெற்றவர்கள்; காளிதாசன் இவர்

களில் தலைமைபெற்றவன். 'அமரசிம்மன்' என்பவன் வடமொழியில் சிறந்தநிகண்டு செய்தவன்; அந்நிகண்டு, 'அமரசிம்மம்' என்று சொல்லப்படும்.

இந்த விக்கிரமார்க்கனைப்போல சகலவிதத்திலும் சிறந்த ஓர் அரசன் ஒருநாட்டுக்கு இருப்பானேயானால் அந்நாட்டில் ஒருசிறிதும் குறைவுஏற்படுமா? இப்பேர்ப்பட்ட அரசர்களே குடிகளுக்குத் தந்தையராவர். இவன் இவ்வாறு சிறந்த அரசனையிருந்தபடியினாலேயே, இவனுடையகாலத்தைக் குறிப்பிடும் வருடத்தொகை, 'விக்கிரமசகாப்தம்' என்னும்பெயருடன் பஞ்சாங்கங்களில் கணித்தெழுதப்பட்டுவருகின்றது. இன்னும் சீனதேசத்துப் புத்தமத அபிமானியாகிய, 'பாஹியன்' என்பவர் கி. பி. சுமார் 400-ஆம் நூற்றாண்டில், இந்தியாவுக்கு யாத்திரையாகவந்து திரும்பியகாலத்தில்,தாம்கண்ட அதிசயங்களைப்பற்றி எழுதியகுறிப்பில், மேலேகூறிய விக்கிரமார்க்கனுடைய அருமைச்செயல்களை மிகப் புகழ்ந்தெழுதியிருக்கின்றார். இவற்றைக்கொண்டே விக்கிரமார்க்கன் இந்தியநாட்டு மன்னருள், மிகப் பெயர்சிறந்த அரசனென்பதை நாம் தெரிந்துகொள்ளலாம்.

இன்னும் இம்மன்னனைப்பற்றிய அற்புதசரித்திரங்கள் பலவுண்டு. இவனுடையசிம்மாசனம் தெய்வீகம்பொருந்தியதென்றும், இவன் இறந்தபிறகு அது பூமியில்மறைந்திருந்ததென்றும், அவ்விடத்தில் மாடுமேய்க்கும்சிறுவர்கள் இருந்து நீதிவிசாரணை செய்து ஒழுங்காக வழக்குத்தீர்த்து வந்தார்களென்றும்,அக்குறிப்பினால் போஜராஜன்அங்கேதேனுமிருக்குமென்று மந்திரிசொல்லக்கேட்டு அவ்விடத்தைவெட்டி அந்தச்சிம்மாசனத்தைக் கண்டெடுத்து அரண்மனையில்

கொண்டுபோய்ச்சேர்த்து அதில் ஏறப்போனனென்றும், அதிலிருந்த பதுமைகள் அவனைத் தடுத்துவிட்டனவென்றும், பின்னர் அச்சிம்மாசனம் ஆகாயத்தில் பறந்துபோய்விட்டதென்றும், ஒரு கதையைப் பலர்கூறுகின்றூர்கள். 'விக்கிரமாதித்தன் கதை' என்னும் ஒரு தமிழ்ப்புத்தகத்தில் இவனைப் பற்றி அநேகம்கட்டுக்கதைகள் கூறப்பட்டிருக்கின்றன. அவற்றுள் சிலமட்டும் ஒப்புக்கொள்ளக்கூடியனவாயிருப்பினும் பெரும்பான்மையான கதைகளெல்லாம் இயற்கைக்கு மாற்றமானவைகளாயும், நம்பத்தகாதவைகளாயுமிருக்கின்றன; ஆதலின், அவற்றைத்தள்ளி, மேற்கூறியவிக்கிரமார்க்கனின் உண்மைச்சரித்திரங்களை மட்டும் நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். விக்கிரமார்க்கனுடைய உண்மைச்சரித்திரத்தைப் படிப்பார்க்கு அறிவு அதிகரிக்கும்.

---

## 7. நெப்போலியன்—I

உலகத்தில்தோன்றியவீரர்களில், 'நெப்போலியன்' மிகச்சிறந்தவன். இவன், இத்தாலியா தேசத்தைச்சார்ந்த, 'கார்சிக்கா' என்னும் தீவில், வக்கீலாயிருந்த ஒருவருக்குச் சுமார் 150 வருடங்களுக்குமுன் புத்திரனைப் பிறந்தவன்.

இவன் பிறந்துவளர்ந்து, கல்விகற்கும் பருவத்தை அடைந்தவுடன், இவனுடையதகப்பனர், இவனைப் பிரான்ஸ் தேசத்திலுள்ள பிரீயேன் என்னும் ஊரில் அக்காலத்திலிருந்த பள்ளிக்கூடத்திற்கு, கல்வி கற்கும் பொருட்டு அனுப்பினர். நெப்போலியன் அங்கே கல்வி கற்றுவந்தான். அப்படிஅங்கே கல்வி கற்றுவருங்காலத்தில்,

அங்குள்ள மாணவர்களெல்லோரும் பிரான்ஸுக்காரர்களா யும், இவன்மாத்திரம் இத்தாலியனுயுமிருந்தபடியால் இவனுக் கும், மற்றையமாணவர்களுக்கும் அதிகநட்பு ஏற்படவில்லை. நெப்போலியன், அவர்களுடையநட்பைவிரும்பாமலே படிப் பில்மாத்திரம் மிகுந்த ஊக்கமுடையவனுயிருந்துவந்தான். இவனுக்கு, கணிதபாடத்திலும், பெரிய இராஜ்ஜியங்களை ஆண்டு கீர்த்திபெற்றவீரர்களின் வரலாறுகள்அடங்கிய சரித் திரபாடத்திலும் மிகுந்தவிருப்பமுண்டு. அதனல், இவன் இவ்விரண்டுபாடங்களிலும் நிபுணனுயிருந்தான். கணக்கில் இவனுக்குமேற்பட்ட மாணவர்கள் அந்தப்பள்ளிக்கூடத்தில் இல்லை.

நெப்போலியன், இவ்வாறு அந்தப்பள்ளிக்கூடத்தில் 4ஆண்டுகள்வரை கல்விகற்றுப்பிறகுபோர்த்தொழில்கற்றுக் கொள்ளும் விருப்பமுடையவனுய், பாரீஸ்நகரத்திலிருந்த படைப்பயிற்சிக் கலாசாலையில்சேர்ந்து யுத்தவித்தை கற்று வந்தான்.

அக்காலத்தில் பிரான்ஸ்தேசத்திலிருந்தபொதுஜனங்கள், சுயராஜ்ஜியம் பெறவேண்டுமென்று பெருங்கிளர்ச்சி செய்து வந்தார்கள். இது மிக்கபயங்கரமானகிளர்ச்சி. இக்கிளர்ச்சியில் அப்போதிருந்த பிரான்ஸ்மன்னன், கொடுங்கோல் அரசனு யிருந்தபடியால், பொதுஜனங்கள் அவன்மீது மிகுந்தவெறுப் பும், கோபமும்அடைந்து அவனைக்கொன்றுவிட்டதோடு, மேலும் அவன் சார்பிலிருந்து அவனுக்குதவிசெய்தவர்களையும் கொன்றுகுவித்தார்கள்.பிரான்ஸ்தேசமெங்கும் இந்தக்கலகமே மிகுந்து இரத்தமயமாயிருந்தது.



யுத்தப் பயிற்சி செய்துவந்த நெப்போலியன் மேற்கூறிய கிளர்ச்சி நடந்த காலத்தில் மிக்க வீரமும், புத்தி நுட்பமும் உடையவனாய், விளங்கினான். இவனுடைய சாமர்த்தியம், பிரான்ஸ்தேசத்துப்பொதுஜனங்களாகிய கிளர்ச்சிக்காரர்களுக்குத் தெரிந்தது. அதனால் அவர்கள், நெப்போலியனைத் தங்களோடுசேர்த்துக்கொண்டு பீரங்கிப்படைக்கு அதிகாரியாக நியமித்தார்கள். அவர்களுடைய விருப்பப்படி நெப்போலியன் வேலைசெய்யத்தொடங்கி, நெப்போலியன், 'துலோன்' என்னும்பட்டணத்தை முற்றுகையிட்டுக் கைப்பற்றினான். இவ்வெற்றியைக்கண்டு பொதுஜனங்கள் ஆச்சரியமும், மனக்களிப்பும் அடைந்தார்கள். அப்போது நெப்போலியனுக்கு வயது இருபத்தைந்து நடந்துகொண்டிருந்தது.

நெப்போலியன், இவ்வாறு வெற்றியடைந்திருக்குங் காலத்தில், இவனோடு சிலர் சிநேகங்கொண்டிருந்தார்கள்.

அவர்கள்மீது, இவனுடைய கட்சிக்காரர்களுக்கு அதிருப்தியுண்டாகியிருந்தது. அதனால்,இவனைச்சார்ந்தகட்சிக்காரர்களாகிய பொதுஜனங்கள், இவனால்தங்களுக்கொருசமயம் ஏதேனும் கெடுதிசம்பவித்தாலும் சம்பவிக்குமென்று இந்த நெப்போலியன்மீது சந்தேகங்கொண்டார்கள். நெப்போலியன் அதனையுணர்ந்து மனமுறிந்து, பிரான்ஸ்நாட்டுமக்களோடு சேர்ந்திருக்கவிரும்பாமல் அந்நாட்டைவிட்டு வெளியேறித் துருக்கிதேசம்சென்று, தன்னுடைய இராணுவப்பயிற்சியைக் கொண்டு துருக்கிமன்னன் படைகளைச் சீர்திருத்தி விருத்திக்குக்கொண்டுவர நினைத்தான்.

அத்தருணத்தில், இவன் கட்சிக்காரராகிய பிரான்ஸ் பொதுஜனங்கள், இவன்மீது சந்தேகங்கொண்டிருந்தாலும் இவன் துணையை விட்டுவிடவிரும்பவில்லை. இவன் தங்களை விட்டுநீங்கினால், தங்களுடையகாரியம் சீர்குலையுமென்று நினைத்தார்கள். ஆதலால், நெப்போலியன் துருக்கிதேசம் செல்லமுயன்றதை அவர்கள் உணர்ந்து, இவனுடைய எண்ணத்தைத்தடுத்து இவனைப்பிரான்ஸிலேயே நிறுத்திக்கொள்ளத்தக்க ஏற்பாடுகளைச்செய்தார்கள். பிரான்ஸ்தேசத்தின் இராணுவமந்திரி, இவனுக்கு உயர்ந்தபல அதிகாரங்களைக் கொடுத்தான். அதன் மேல் நெப்போலியன், பிரான்ஸ்தேசத்தாருக்குதவியாயிருந்து எதிரிகளை அடக்கிவெற்றிபெற்று மேலும்மேலும் கீர்த்திஅதிகரித்திருந்தான்.

அக்காலத்தில், பிரான்ஸ்தேசத்தின் ஆளுகைக்குட்பட்டிருந்த வடஇத்தாலியாதேசத்தில், ஆஸ்திரியதேசத்தார்வந்து பிரவேசித்திருந்தார்கள். அவர்களை அப்புறப்படுத்தும்படி

பிரான்ஸ—சுக்காரர்கள் நெப்போலியனை அங்கே அனுப்பினார்கள். நெப்போலியன் அங்கேபுறப்படுவதற்குமுன் 'ஜோசபீன்' என்னும் மாதை மணஞ்செய்துகொண்டான். பின்னர், வட இத்தாலியாவுச்குச்சென்று தன்னுடைய புத்திநுட்பத்தால், ஆஸ்திரியரின் செல்வாக்கையொடுக்கி ஜெயம்பெற்றான்.

இவன், அக்காலத்தில் யுத்தங்களில்காட்டிவந்த வல்லமையும், தந்திரங்களும், மனோதிடமும் அதிசயிக்கக்கூடியவைகளாயிருந்தன. இவனைச்சேர்ந்த பட்டாளத்திலுள்ள சிப்பாய்களுக்கு இவன் அருகிலிருக்கும்போது அச்சமென்பது சிறிதேனும் ஏற்படுவதில்லை. இவனுடைய தைரியத்தைக்கொண்டு அவர்கள், அசாத்தியமான காரியங்களையும் செய்தேமுடிப்பார்கள். இன்னும் நெப்போலியன் எப்போதும் முகமலர்ச்சியுடையவனாகவே விளங்குவான்; விசனக்குறி சிறிதேனும் தோன்றுவதில்லை. இவன் நடப்பதில் இளைப்பதேகிடையாது. ஒருமனிதன் கால்நடையாக ஒருநாளைக்கு 20 மைல்தூரம் செல்வது அசாத்தியமானகாரியம். மனிதரின் இயற்கை இப்படி இருந்தாலும் நெப்போலியன்,பல ஆயுதங்களைச் சுமந்துகொண்டும், பீரங்கிமுதலிய யுத்ததளவாடங்களுடனும் நாள் ஒன்றுக்கு 20 மைல்வீதம் இளைப்பின்றி நடப்பான். இப்படியே பலதினங்கள் தொடர்ச்சியாக நடந்துசெல்வதுண்டு.

இப்படி, நெப்போலியன், போர்த்திறமிகுந்தவனாய் எங்கும் வீரச்செலுத்தி வந்தகாலத்தில், இங்கிலாந்து தேசத்தையும் அடக்கியாள முயன்றான். ஆனால் இவனிடம் அதிகப்படை இல்லாததாலும் இங்கிலாந்தின்படை அதிகரித்திருந்ததாலும் இவன்;பன்முறை இங்கிலாந்தின்மீது படையெடுத்துத் தோல்வியே அடைந்தான். எனினும் தன்னுடைய சிறு

3 - OCT 1950

படையைக்கொண்டே இங்கிலாந்து தேசமுழுவதையும் ஒரு கலக்குக்கலக்கிவிட்டான். அக்காலத்தில், நெப்போலியனால் இங்கிலாந்து தேசமுழுவதும் நடுங்கிக்கொண்டிருந்தது. 'நெப்போலியன்' என்றபெயரைக் கேட்டமாத்திரத்தில் இங்கிலாந்திலுள்ள ஒவ்வொருவரும் நடுங்கிக்கொண்டிருந்தார்கள்.

நெப்போலியன், மேற்கூறியபடி வட இத்தாலியாவுக்குச் சென்று வெற்றிபெற்றுத்திரும்பியபின், "பிரான்ஸ்க்காரர்களுக்கு எகிப்து தேசத்தில் ஆதிக்கம் இருக்கும்படி செய்ய வேண்டும்; எகிப்து கைவசமாகிவிட்டால் இந்தியாவுக்குச் செல்லும் வழியும் கைவசமாகிவிடும்; அதனால் நமக்குப்பல அநுகூலங்களுண்டாகும்" என்று தீர்மானித்துப்படைகளுடன் சென்று எகிப்தைத் தாக்கினான். அக்காலத்தில், இவனுக்கு நிகரான வீரமுடைய, 'நெல்சன்' என்பவன் ஆங்கிலேய கப்பற்படைத்தலைவனாயிருந்தான். அவன், நெப்போலியனுடைய எண்ணத்தைத் தெரிந்துகொண்டு, அதைத்தடுக்க ஆரம்பித்துத் தன் சண்டைக்கப்பல்களைக் கடலில் நிரப்பிவைத்திருந்தான். அப்போது எகிப்தைத்தாக்கிய நெப்போலியன் தற்செயலாக ஏற்பட்ட மூடுபனியில் மறைந்து, தன் கப்பல்களைக்கடலிற் செலுத்தி, நெல்சனுடைய கப்பல்களிருக்குமிடத்தை நோக்கிச்சென்றான். நெல்சன் இவனுடைய தந்திரத்தையுணர்ந்து, தன் கப்பல்களை இருபிரிவுகளாகப் பிரித்து நெப்போலியனுடைய கப்பல்களை, இரண்டுபக்கங்களிற் சூழ்ந்துகொள்ளச்செய்து பீரங்கிகளைப்பிரயோகித்தான். அப்பீரங்கிகளால், நெப்போலியனுடைய கப்பல்கள் உடைந்து சிதைந்து கடலில் மூழ்கிவிட்டன; படைகளும் நாசமடைந்

தன. நெப்போலியன்மட்டும் தப்பிப்பிழைத்து மிக்கபிரயாசையுடன் பிரான்ஸ்தேசம் போய்ச்சேர்ந்தான்.

அங்குபோய்ச்சேர்ந்தபின், பழையமுறைப்படி நடந்துவந்த அரசியலை நீக்கி, புதியமுறையில் சுயராஜ்ஜியம்போன்ற மேன்மையான அரசாட்சியை ஏற்படுத்தி அதற்குத்தானே 'கான்சல்' என்னும் தலைவனாய் அமைந்திருந்தான்.

இப்படியிருக்கும்போது, கொஞ்சகாலஞ்சென்றபிறகு, மீண்டும் வடஇத்தாலியதேசத்தில், ஆஸ்திரியர் பிரவேசித்தார்கள். நெப்போலியன் மறுபடியும் அங்கே சென்று, 'மாரெங்கோ' என்ற இடத்தில் அவர்களோடெதிர்த்து அவர்களைத்தோற்கடித்துவிட்டுப் பிரான்ஸ்க்குத் திரும்பிவந்தான். அவ்வாறுவந்ததும், இவனுக்கு, 'பாப்' என்பவரால் பட்டாபிஷேகம்செய்யப்பட்டது. நெப்போலியன், மகுடஞ்சூட்டிக்கொண்டபின்னர் பிரான்ஸ்தேசத்தில் எங்கும் பற்பலரோட்டுகளையும், பாலங்களையும், கல்விச்சாலைகளையும், கைத்தொழிற்சாலைகளையும் அமைத்து மனிதர்க்குவேண்டிய சௌகரியங்களைச்செய்தான். பிரான்ஸில் கலகம்ஏற்பட்டிருந்தகாலத்தில் பயந்து அந்நாட்டைவிட்டோடிய ஜனங்களைவரவழைத்து மனஅமைதியுடன் வாழச்செய்தான்.

பின்னர் இந்த நெப்போலியன், தெற்குஇத்தாலியாவுக்குச்சென்று அங்கிருந்தவர்களையும் அடக்கி அதற்கும்தானே அரசனாகி மகுடஞ்சூட்டிக்கொண்டுவந்தான். இப்படிஅவன் பற்பலவிடங்களில் வெற்றிபெற்றுவந்தகாலத்தில், இவனுக்கு இங்கிலாந்தின்மீது ஏற்பட்ட பழம்பகையானது, மேலும் மேலும் அதிகரித்து இவன்மனம் கொதித்துக்கொண்டே

யிருந்தது. அதனால் இவன், இங்கிலாந்தை அடியோடு தொலைத்துவிடவேண்டுமென்று பன்முறை முயன்றுபார்த்தான். இங்கிலாந்து கப்பற்படையில் மிகவல்லமைபெற்றிருந்தபடியால் இவனுடைய முயற்சி பலிக்கவில்லை.

மேற்கூறியபடிமுயன்ற நெப்போலியன், பால்டிக்சமுத்திரத்தில் ஒருமுறை ஆங்கிலேயரோடு எதிர்த்தான். அந்தச் சண்டையில் ஆங்கிலேயர் இவனைத்தோற்கடித்துவிட்டார்கள். அதன்மேல்இவன், ஆங்கிலேயரோடு நேரேஎதிர்த்துச் சண்டைபோடாமல் தந்திரத்தால்அவர்களை வெல்லநினைத்தான். அவர்களுடைய கப்பல்வியாபாரம்கெடுமாறு, கடலிற் செல்லும் கப்பல்களைத் தடுக்கப்பலசூழ்ச்சிகளைச் செய்தான். ஆங்கிலக்கப்பற்படைவீரனாகிய நெல்சனிடம் இவனுடைய சூழ்ச்சிகள் பலிக்கவில்லை. அந்தநெல்சனால் இவன்தோற்கடிக்கப்பட்டு ஓட்டம்பிடித்துப் பிரான்ஸ்தேசத்தை அடைந்தான்.

அதன்மேல் நெப்போலியன், தக்கபடைகளைச் சேகரித்துக்கொண்டு ருஷியாதேசத்தின்மீது படையெடுத்தான். ருஷியர்கள் இவனோடு எதிர்த்துப்போர்புரிந்து முடிவில் தளர்ச்சியடைந்தார்கள். அவ்வாறுதளர்ந்தசமயத்தில் அவர்கள், நெப்போலியனை எளிதாகஜெயிக்க ஒருவகைத் தந்திரம் செய்தார்கள்; அஃதியாதெனில், ஊரைச்சுற்றிலும் நெருப்பைக்கொளுத்திவிட்டு வெளியேறிஓடிவிட்டார்கள். நெப்போலியனும், அவனைச்சார்ந்த படைவீரர்களும் நெருப்பின் மத்தியில் அகப்பட்டுக்கொண்டார்கள். அவர்களில் அநேகர் அக்கினிக்கிரையாய் மாண்டனர். நெப்போலியனும், சில படைவீரர்களுமே அந்த ஆபத்தினின்றுந்தப்பிப்பிழைத்தனர். பின்னர் மிஞ்சியவீரர்களுடன் நெப்போலியன் ஓட்-

டம்பிடித்துவிட்டான். நெப்போலியன் அடைந்த தோல்வி களில் இதுமிகவும் பரிதபிக்கக்கூடியதாயிருந்தது.

இவ்வாறு நெப்போலியன் தோல்வியுற்றுஓடியும், அம் மட்டோடு மனந்தளர்ந்து யுத்தமுயற்சியை விட்டுவிடவில்லை. சிலதினங்களில் மீண்டும் ருஷியாவின்மீது படையெடுக்கத் துணிந்து, சேனைகளைச்சேர்த்துக்கொண்டு யுத்தஞ்செய்வதற் குத்தகுதியான சீதோஷ்ணஸ்திதியைக்கவனிக்காமல் மிகுந்த பனிக்காலத்தில் ருஷியரோடு சண்டைசெய்யப்புறப்பட்டான். பனியினால் போர்வீரருக்குச் சங்கடமுண்டாகுமென்பதை அவன் நினைக்கவில்லை. அதனால், போர்வீரர்களைப்பனிகாலத் திற்குத்தகுந்த உடையுடன் அழைத்துச்செல்லவில்லை. எல் லோரும் சாதாரண உடைகளையணிந்தே யுத்தத்திற்குச் சென்றார்கள். அங்குப்போய் யுத்தம்செய்யத்தொடங்கிய வுடன் போர்வீரரில் பலர் பனியின்உபத்திரவஞ்சகிக்காமல் மாண்டனர். சிலர், போர்செய்யச் சக்தியற்றுத் தளர்ந்து உயிர்நீங்கத்தக்கநிலையில் நின்றுவிட்டார்கள். அந்நிலையில் நெப்போலியன், போர்செய்யமுடியாமல் குற்றுயிரோடிருந்த அப்போர்வீரர்களை அழைத்துக்கொண்டு பிரான்ஸ்தேசத்துக் குத் திரும்பிவந்துவிட்டான்.

முதலில் இவன் பலசண்டைகளில் வெற்றிபெற்றுவந்த காலங்களிலெல்லாம் பிரான்ஸ்தேசத்து ஜனங்கள் இவனை மிகவும் கொண்டாடிவந்தார்கள். அப்படிப்புகழ்ந்துவந்தவர்கள் பிற்காலத்தில், மேற்கூறியபடி இவன் சில சண்டைகளில் தோல்வியுற்றுவரவே, அவற்றில்நேர்ந்த பணச்சேதம், ஜனச் சேதம் முதலியவற்றை அவர்கள் நினைந்து, மனத்துயரமுற்று

இந்த நெப்போலியன்மீது வெறுப்படைந்தார்கள். அப்படி இவனை எல்லோரும் வெறுத்திருக்கும்போது, இவன் மேலும் எதிரிகளோடு யுத்தஞ்செய்வதற்குப் போர்வீரர்களையும் பணத்தையும் சேகரிக்கத்தொடங்கினான். இவனுடைய செய்கை பிரான்ஸ்ஜனங்களுக்குப்பிடிக்கவில்லை. எல்லோரும் இவன்மீது கோபமும் பகையுங்கொண்டார்கள். அவ்வாறு பகைகொண்டதால் நெப்போலியனைச் சில ஆட்களின் துணையோடு கொண்டு போய் 'எல்பா' என்னும் தீவில் விட்டுவரும்படி சிலவீரர்களுக்குக்கட்டளையிட்டார்கள். அவர்கள் அவ்வாறே நெப்போலியனை அங்கேகொண்டுபோய்விட்டார்கள். பிரான்ஸ்ஜனங்கள், மேற்கூறியபடி நெப்போலியனை நாட்டைவிட்டுக் கடத்திய பிறகு '18-ஆம் லூயிஸ்' என்பவனைத் தங்களுக்கு அரசனாக்கிக் கொண்டார்கள்.

'எல்பா' தீவுக்குக் கொண்டுபோகப்பட்ட நெப்போலியன், தன்னுடைய தைரியத்தையும், சாமர்த்தியத்தையும், இழந்துவிடவில்லை. அத்தீவிலேயே அடைபட்டுக்கிடக்கவில்லை. தன்னை அத்தீவிற்குக் கொண்டுபோன மனிதர்களைப் பேச்சுவல்லமையால் வசப்படுத்தித் தன்னுடைய நோக்கத்திற்கிசைந்து நடக்குமாறு செய்துகொண்டான். பின்னர், அவர்களின் உதவியால், தன்னுடைய துணையாட்களுடன் அத்தீவிலிருந்து வெளியேறித் தன் துணையாட்களைச் சில கப்பல்களில் ஏற்றி மறைத்துவைத்துத் தானும் ஒரு கப்பலிலேறி அக்கப்பல்களுடன் பிரான்ஸுக்குப்புறப்பட்டான். அப்போது இவனுடைய கப்பல்களைச்சுற்றி விரோதிகளான பிரான்ஸ்க்காரரின் கப்பல்களே நிறைந்திருந்தன. அக்கப்பல்களில் இருந்தவர்களெல்லோரும், நெப்போலியன் கொண்டுவந்த கப்

டல்களை, அவனை, 'எல்பா' தீவில் விட்டுவரும் கப்பல்களென்று நினைத்துக்கொண்டார்கள். அதனால், அங்கே சூழ்ந்திருந்த பிரான்ஸ்கப்பல்களில் 'ஒரு கப்பலிலிருந்தவர்கள், நெப்போலியன் ஏறிச்சென்ற கப்பலுக்கருகில், அக்கப்பலுடன்சென்று, நெப்போலியனிடத்திலேயே, "நெல்போலியனை எல்பாவில் விட்டுவிட்டீர்களா?" என்று கேட்டார்கள். அதற்கு நெப்போலியன் "ஆம்; நெப்போலியனை அங்கே இறக்கிவிட்டு நாங்கள் திருப்பிவருகிறோம்; நெப்போலியன் சுகமாயிருக்கின்றான்" என்றுசொல்லிவிட்டு அந்தக்கப்பலைக் கடந்து சென்றான்; சென்று பிரான்ஸ் துறைமுகத்தையடைந்தான்.

---

## 8. நெப்போலியன்—II

நெப்போலியன், இயற்கையில் முகவசீகரமுடையவன்; புத்திநுட்பம் பொருந்தியவன்; வாக்குச்சாதுரியமுள்ளவன்; பேச்சினால் பிறரைமயக்கிவிடும் தன்மை வாய்ந்தவன்; இதமான வார்த்தைகளை நிரப்பிக் கடிதமெழுதி, அக்கடிதத்தால் பகைவரையும் தன்வசப்படுத்திவிடும் சாமர்த்தியமுடையவன். ஆதலின், இவன் மேற்கூறியபடி பிரான்ஸ்துறைமுகத்தை அடைந்தவுடன், அங்கிருந்த தன் எதிரிகளின்மீது ஒரு குண்டுப்பிரயோகங்கூடச் செய்யாமல், சமாதான தந்திரத்தால் அவர்களை வென்றுவிடவேண்டுமென்று தீர்மானித்தான். அவ்வாறு தீர்மானித்தபின் பிரான்ஸ் ஜனங்களுக்கு நயமான ஒரு கடிதமெழுதத் தொடங்கி, பிறர்மனதைக் கவரும் இதமான வார்த்தைகளைக் கூறி அவற்றை ஒரு கடிதத்தில் எழுதும்படி தன்னுடனிருந்த ஆட்களுக்குக் கட்டளையிட்டான். அவர்கள் அவ்வாறே எழுதினார்கள். அக்கடிதம் எழுதி முடிக்கப்பட்ட

வுடன், அதை, கடற்கரையில் அப்போது வந்துகூடியபிரான்ஸ் ஜனங்களுக்கு அனுப்பினன். அவர்கள் அதைப் படித்துப் பார்த்தவுடன் பகை நீங்கி, நெப்போலியன்மீது விசுவாச முடையவர்களாய்க் கூட்டங்கூட்டமாகவந்து இவனுடைய படையில் சேர்ந்துகொண்டார்கள்.

பின்னர், நெப்போலியன் குதிரைமீதேறி அந்தப்படையுடன் பாரீஸ் நகரத்தை நோக்கிச்சென்றான். அவ்வாறுசென்று 'கிரநோபிள்' என்னும் ஊரையடைந்தான். அப்போது இவனுக்குவிரோதமாயிருந்த பிரான்ஸ் அரசாட்சியார் 6000 படைவீரர்களை, இந்த நெப்போலியனுடைய வருகையைத்தடுக்கும்படி அனுப்பினர்கள். அப்படைவீரர்கள் சொற்பப்படையுடன் சென்ற நெப்போலியனைச் சந்தித்தார்கள். பிரான்ஸ் படைத்தலைவன், நெப்போலியனைநோக்கிச் சுடும்படி தன் படைவீரர்களுக்குக் கட்டளையிட்டான். அவர்களும் துப்பாக்கிகளை மேலே உயர்த்திச்சுடத்தொடங்கினர்கள். அந்த ஆபத்தானசமயத்திலும் நெப்போலியன் தைரியத்தைக் கைவிடாமல் குதிரையைவிட்டுக் கீழே இறங்கி அந்தப் பிரான்ஸ் பெரிய படைக்கு முன்னேபோய் நின்று தன் சட்டையைத்திறந்து நெஞ்சை அப்படைவீரர்களுக்கு நேரேகாட்டி "சுடலாம்; தன்னுடைய அரசனையே சுடவிரும்புகிறவன் சுடலாம்" என்று சொன்னன். அப்படைவீரர்களில் அநேகர், நெப்போலியன் தலைமையின்கீழிருந்து எதிரிகளோடு சண்டையிட்டவர்கள்; ஆதலின், அவர்கள்மனம்நெப்போலியனைச்சுட இசையவில்லை. அதனல், நெப்போலியன் மேற்கூறியவார்த்தைகளைச்சொன்னவுடன், அவர்களால் உயர்த்தப்பட்ட துப்பாக்கிகள் கீழே தாழ்த்தப்பட்டன. அவர்களைப்பார்த்து மற்ற

வர்களும் துப்பாக்கிகளைக் கீழேதாழ்த்திவிட்டனர். அவர் களால் உயர்த்திப்பிடிக்கப்பட்டிருந்த லீலிபுஷ்பம்பிரகாசிக்கும் பிரான்ஸ் ஆளுகைக்கொடி கீழேபோடப்பட்டது; பலராலும் மிதிக்கப்பட்டது; கிழிக்கப்பட்டது. நெப்போலியன் கையிற் பிடித்திருந்த கழுகுக்கொடி, அவன் வெற்றிக்கறிகுறியாக அவர்களால் உயர்த்தப்பட்டது. அங்குக்கூடியிருந்த படை வீரர்களும், மற்ற பொதுஜனங்களும் "நெப்போலியனே எங் கள் சக்கரவர்த்தி! சக்கரவர்த்தி!" என்று கூவினார்கள். இந்த ஒலி எங்கும் முழங்கியது. உடனே நெப்போலியன், பாரீஸ் நகருட்புகுந்து சிம்மாசனமேறினான். முன்னே பட்டந்தாங்கி யிருந்த 18-ஆம் லூயிஸ் சொல்லாமல் ஓட்டம்பிடித்துவிட் டான்.

நெப்போலியன், இவ்வாறு சண்டை செய்யாமல் அடைந்த வெற்றி நெடுங்காலம் நிலைத்து நிற்கவில்லை. 100 நாட்களே நின்றது. இவன்பெற்றிருந்த இந்தக்காலத் திற்குள், முன்னே தான் ஆங்கிலேயரை ஒடுக்க முயன்று அது நிறைவேறுமற் போனதைப்பற்றிச் சிந்தித்து மேலும் அவர்களை அடக்கத்துணிந்து, அவர்களுடைய செல்வாக்குக்கு அனுகூலமாயிருக்கும் வியாபாரத்தைக் கெடுக்க முயன்றான்; ஆங்கிலேயரோடு வியாபாரஞ்செய்யக்கூடாதென்று முக்கிய மான தேசங்களுக்குக் கட்டளையிட்டான். போர்த்துக்கல் தேசம் ஒன்று தவிர மற்ற தேசங்களெல்லாம் இவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடந்தன. போர்த்துக்கல் தேசம் அவ்வாறு தன் கட்டளைக்கடங்காமற்போகவே நெப்போலியன், அந்தப்போர்த்துக்கல் தேசத்தின்மீது படையெடுத்தான். அப் போது, போர்த்துக்கல் தேசத்துக்கு ஆங்கிலேயர் உதவி

செய்ய முன்வந்தார்கள். இவ்விருவகைப்படைகளும் ஒன்று சேர்ந்தன. இப்படைகளுக்கும், நெப்போலியன் படைக்கும் 1865-ஆம் ஆண்டில் 'ஸ்பெயின்' தேசத்தில் பெரிய யுத்தம் நடந்தது. அந்தச்சண்டையில் மிக்கவீரம் பொருந்திய ஆங் கிலசேனுதிபதியாகிய 'மார்ல்பரவ்' என்பவர், நெப்போ லியனைத் தோற்கடித்துவிட்டார். நெப்போலியன் மிகுந்த துயரத்தோடு தப்பியோடிப் பிரான்ஸ்தேசத்தையடைந்தான்.

அப்போதுபிரான்ஸ்க்காரர், இவனுக்குப் பணஉதவியோ, படை உதவியோ செய்ய முன்வரவில்லை. இவனைத் தங்கள் கூட்டத்தினின்றும் விலக்கிவிடவேண்டுமென்ற தீர்மானத் துக்கு வந்துவிட்டாாகள். அதனுல் அவர்கள், நெப்போலியனை நோக்கி, "நீ ஆங்கிலேயர் கையில் சிறைப்படவேண்டும், அல் லது இத்தேசத்தைவிட்டு ஓடிவிடவேண்டும்; இவ்விரண்டில் எதைச்செய்ய உனக்கு விருப்பமோ அதை ஒரு மணி நேரத் தில் தெரிவித்துவிடவேண்டும்" என்று இவன் தன் அபிப் பிராயத்தைத் தெரிவிப்பதற்கு ஒருமணி நேரம் கொடுத் தார்கள். நெப்போலியன், 'என்னசெய்யலாம்?' என்றுசிந்தித் தான். இவனுக்கப்போதுண்டான துயரத்திற்களவில்லை. இவன் எண்ணுததெல்லாம் எண்ணினுன். தான் வெற்றி பெற்றுவந்த சமயங்களிலெல்லாம் தன்னை மிகக்கொண்டாடிய பிரான்ஸ்க்காரர், தோல்வியடைந்தசமயத்தில் கைநழுவவிட்ட படியால், 'உலகத்து மனிதர்கள் வாழ்வோரைப்போற்றித் தாழ்வோரைத்தூற்றும் இயற்கையுடையவர்' என்ற உண் மையை உணர்ந்து மனம் புண்ணுனன். முடிவில், தன்னிடம் வெற்றிபெற்றவர்களாகிய ஆங்கிலேயர் கையிலேயே தன்னை ஒப்படைக்கத் தீர்மானித்தான்.

இப்படித் தீர்மானித்துக்கொண்டிருக்கும்போது, இவன் இருந்த அறைக்குள் ஒரு குருவி ஏதோ ஒரு அபாயத்திலிருந்து தப்பியோடிவந்து நுழைந்தது. அங்கேயிருந்த ஒருவர் அதைக்கைப்பற்றினர். அப்போது நெப்போலியன் அக்குருவியின்மீதிரக்கங்கொண்டு, அதைப்பிடித்த மனிதனை நோக்கி, "நண்பரே! இக்குருவியைவிட்டுவிடும்; ஆபத்துக்குள்ளாகிவந்த இதற்கு மேலும் துன்பமுண்டாகச் செய்ய வேண்டாம்; உலகத்தில் இக்காலத்தில் சிறைப்படுத்திக் காக்க வேண்டியவர்கள் அநேகர் இருக்கின்றார்கள்; அவர்களோடு இதையும் சேர்க்கவேண்டாம்." என்று சொன்னான். இந்த நெப்போலியன் விரோதிகளைமாத்திரமே கொல்ல நினைப்பான்; விரோதமில்லாத மனிதருக்குப், பிராணிகளுக்கும் இடையூறு செய்யமாட்டான். ஆகையினால் தான் ஆயிரக்கணக்கான எதிரிகளைச் சுட்டுக்கொன்றவனாயிருந்தும் இந்தப்பறவையின் மீது இரக்கங்காட்டினான்.

இவன் இவ்வாறுசொல்லிவிட்டுத் தான் செய்துகொண்ட தீர்மானப்படி, ஆங்கிலேயரிடம் சிறைப்படச்சென்றான். அப்போது ஆங்கிலேயர் தங்கள் விரோதியாகிய இந்த நெப்போலியனைத் தேடிக்கொண்டிருந்தார்கள். அதலின், இவன்சென்றவுடனே இவனைப்பிடித்துச் சிறைப்படுத்தினார்கள்; இவனுடைய வீரத்தைமிகவும் கொண்டாடினார்கள். எனினும், இவனுக்கு உதவியொன்றும் செய்யவில்லை. இவனைக்கப்பலேற்றி மனிதசஞ்சாரமில்லாத, 'சென்ட்எரினா' என்ற தீவில் கொண்டுபோய் இறக்கிவிட்டுவிட்டார்கள்.

அந்தோ! மகாவீரனாகிய நெப்போலியனுடைய கடைசி நாட்கள் இத்தீவிலேயே கழிந்தன. இவன் இத்தீவிலிருந்து

கொண்டு தன்னுடைய முந்தினகால வாழ்க்கையை எண்ணி எண்ணி மனத்துயரமுற்றான்; ஏதேதோ யோசித்தான்; இவன் மனதிற்கு ஆறுதலான மார்க்கமொன்றும் ஏற்படவில்லை. முடிவில் ஆறாத்துயரத்துடன் மடிந்தான். இவனுடைய உடம்பு அங்கேகிடந்தழிந்தது. அதில் மிஞ்சியிருந்த எலும்புமுதலிய சில அங்கங்கள், இவன் இறந்து 19 ஆண்டுகள் கழிந்த பிறகு சிலரால் பிரான்ஸ் தேசத்திற்குக் கொண்டுபோகப்பட்டன. பாரீஸ் நகரத்தில், சண்டைசெய்ய வலிமையற்ற பழைய போர்வீரர்களுக்கு இருப்பிடமாய் அமைந்திருந்ததும், 16-ஆம் லூயிஸ்' என்னும் பிரான்ஸ் மன்னனால் கட்டப்பட்டதுமான ஒரு மண்டபத்தில் அந்த நெப்போலியனுடைய எலும்புகள் அடக்கம் செய்யப்பட்டிருக்கின்றன. அவ்வாறு அடக்கம் செய்யப்பட்ட கல்லறை இப்போதுமிருக்கின்றது. இந்தக் கல்லறையைச்சுற்றிலும் நெப்போலியன் எதிரிகளிடமிருந்து கைப்பற்றிய 60கொடிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் இவன் உயிரோடிருக்கும்போது அணிந்துகொண்டிருந்த சாம்பல்நிறச்சட்டையும், நீண்ட கால் அணிகளும், விநோதமான மடக்குத்தொப்பியும், தூரதிருஷ்டிக்கண்ணாடியும் அக்கல்லறைக்கு அலங்காரமாகத் தொங்கவைக்கப்பட்டிருக்கின்றன.

நெப்போலியன், முதலிற் பலவெற்றிகளையடைந்து பின்பு தோல்விகள்பலவற்றையும் அடைந்தான். அப்படித் தோல்வியடைந்திருந்தாலும் இவனை வல்லமையற்றவனென்று எவரும் சொல்லமாட்டார்கள்; மகா வீரனென்றே உலகமுள்ளளவும்

கொண்டாடுவார்கள். இவன் ஆங்கிலேயரிடத்திற்றுன் பெருந் தோல்விகளை அடைந்தான். இதற்குக் காரணங்கள் பலவுண்டு: ஆங்கிலேயருடைய இங்கிலாந்து, கடலாற் சூழப்பட்ட ஒரு தீவு; ஆங்கிலக் கப்பற்படைகள் மிகச்சாமர்த்தியம் பெற்றவைகள்; இத்தகைய கடற்படைகளையுடைய இங்கிலாந்தை அடக்கவேண்டுமானால், மிக்க பலம்பொருந்திய கப்பற்படை வேண்டும். அப்பேர்ப்பட்ட கப்பற்படை நெப்போலியனிடம் இல்லை; ஆதலினாலேயே நெப்போலியன் ஆங்கிலேயரிடம் தோல்வியடைந்தான். இவனுக்குச் சரியான பக்கத்துணையிருந்தால், இவ்வீரன் எதிலும் தோல்வியடையவே மாட்டான். பிரான்ஸ்காரர்கள் இந்த நெப்போலியனுக்குச் சரியான படைத்துணையும், பொருளும் அளித்திருப்பார்களானால் இவன் உலகமுழுவதையும் தன்குடைநிழலில் அடக்கியாண்டு பெரிய சக்கரவர்த்தியாக விளங்கியிருப்பான். இது, பொதுவாக உலகத்தாரின் அபிப்பிராயம். நெப்போலியன், இணையற்ற வீரனாயிருந்தபடியினாலேயே இவனுடைய கீர்த்தி என்றென்றும் நிலைபெற்று விளங்கக்கூடியதாயிருக்கின்றது.

---

## 9. லாலா லஜபதிராய்

இந்தியாவிலுள்ள மனிதரின் நன்மைக்குப் பாடுபட்ட பெரியார்களில், 'லாலா லஜபதிராய்' என்பவரும் ஒருவர். இவர் பாஞ்சாலநாட்டில்உள்ள, 'லூடியானா' என்னும் ஜில்லாவில்உள்ள, 'ஜாகரன்' என்னும் ஒருசிறியநகரத்தில், கவர்ன்மெண்ட்பள்ளிக்கூடத்தில் உருதுபாஷையும், பாரஸிகபாஷையும் கற்பிக்கும் போதகாசிரியராயிருந்த, இராதாகிருஷ்ண

லாலா என்பவருக்கு கி. பி. 1865-ஆம்ஆண்டில் புத்திரராகப் பிறந்தவர்; வியாபாரத்தில் விருத்தியடைந்தவர்களாகிய, 'அகர்வார பன்னியர்' வமிசத்தைச் சேர்ந்தவர்.



இவர் இளம் பருவமாயிருக்கும் போதே இவருடையதாயார் இவரை நன்மார்க்கங்களிற்பழக்கிப் பள்ளிக்கூடத்திற்கனுப்பி, இவருடைய படிப்பு விருத்தியை நன்றாகக் கவனித்துவந்தார். அதனால், இவர், கல்வியில் மிகுந்த சுறுசுறுப்பும், சிரத்தையுமுடையவராயிருந்து வந்தார்; இவருக்குக் கல்வித்தேர்ச்சி அதிகமாகஉண்டாகிவந்தது; ஒவ்வொருவகுப்பிலும் இவர் முதற்பிள்ளையாக விளங்கிவந்தார். அதனோடு தம்மைப்போன்றமாணவர்க்குப் பாடங்களைப் போதிக்கும் வழக்கத்தையுங்கொண்டிருந்தார். ஒவ்வொரு வகுப்புப் பரீக்ஷையிலும்தேறிவந்தார்; முடிவில், லாகூரிலுள்ள கவர்ன்மெண்ட்கலாசாலையில் இரண்டுவருடங்கள் கவர்ன்

மெண்டின் பணஉதவிபெற்றுக் கல்விகற்றுவந்தார். பின்னர், பஞ்சாப் சர்வகலாசபையைச்சார்ந்த சட்டப்பரீக்ஷையில் தேறினர்.

பிறகு, 1883-ஆம் ஆண்டு, தம்முடைய 18-ஆம் வயதில் வக்கீலாகவந்தார். அதன்மேல் இரண்டுவருடங்களுக்கப்பால் சட்டப்பரீக்ஷையின் முடிவான பரீக்ஷையிலும் இரண்டாவதாகத்தேறினர்.

அப்பால், இவருக்கு, குருதத்த வித்தியார்த்தியின் சிநேகமும், லாலாஹம்ஸராஜரின் நட்பும்ஏற்பட்டன. அதன்பிறகு இவர், அவ்விருவருடனும்சேர்ந்து, தயானந்தசரஸ்வதியின் ஆரியசமாஜக்கொள்கையை, நம் நாட்டுமக்களுக்கறிவித்து, கல்வியறிவும், பொதுநலப்பிரியமும் உண்டாக்கும்வழியில் உழைக்கமுற்பட்டார். இம்மூவரும் பலகிராமங்களில் பள்ளிக்கூடங்களை அமைத்தார்கள்; நகரங்களில் கல்விச்சாலைகளை ஏற்படுத்தினர்; ஆரியசமாஜங்களையும் ஸ்தாபித்தனர்; தங்கள் நோக்கங்களைத் துண்டுப்பிரசுரங்களில் வெளியிட்டனர். 1886-ஆம் ஆண்டில் லாகூரிலுள்ள, 'தயானந்தகலாசாலை' ஏற்படுவதற்கு முக்கியகாரணஸ்தர்களாயிருந்தவர்கள், லாலாலஜபதிராயும், ஹம்ஸராஜருமே.

இவ்வாறு லாலாலஜபதி, பொதுக்காரியங்களிலும், மதப்பிரசாரத்திலும் உழைத்துவந்ததோடு, 'ஹிஸ்ஸார்' என்னும்ஊரில் வக்கீல்வேலையையும் செய்யஆரம்பித்தார். இவருடைய கௌரவத்தைநினைத்துப் பலரும் இவரிடத்திலேயே தங்கள்வழக்குகளைக் கொண்டுவரத்தொடங்கினர். அத்தொழிலில் இவருக்குப்பணவருமானம் அதிகரித்துவந்தது. அதனோடு

இவர் ஏழைகளுக்குப்பணமின்றி நியாயவாதஞ்செய்து வந்தார். குறைந்தவருமானமுள்ள விவசாயிகளிடம் சொற்பத் தொகைவாங்கிக்கொண்டு அவர்களின்வழக்குகளை நடத்திவந்தார். இந்த உபகாரச்செயல்களால் இவருக்குப்புகழும் அதிகரிக்கலாயிற்று. 'பிரஜாபந்து' என்னும்பெயரும் வழங்கலாயிற்று.

பிறகு, 'பஞ்சாபி' என்னும் வர்த்தமானப் பத்திரிகைக்குச் சொந்தக்காரராயிருந்த, லாலாஜஸ்வந்தராயின் தந்தையாரான, 'லாலாசூடாமணி' என்பவர், அநாதைப்பிள்ளைகளுக்கும், நன்மார்க்கத்தைவிட்டுத்திரியும் அறிவிலிகளுக்கும் உபயோகமாயிருக்கும்படி கைத்தொழில்பள்ளிக்கூடமொன்றை ஏற்படுத்தியகாலத்தில், நம் லாலாலஜபதி, அவருக்குத்துணையாயிருந்து அக்காரியத்தில்உழைத்துவந்தார். பின்னர், ஹிஸ்ஸார் முனிசிபாலிட்டிக்கு (நகரசங்கத்துக்கு) மூன்றுஆண்டுகள் கௌரவகாரியதரிசியாயிருந்து அந்நகரத்தைச்சிறப்பித்தார்.

இவர், பணஞ்சம்பாதிப்பதில் மாத்திரம் அதிகமாகப் புத்தியைச் செலுத்தவில்லை; தேசமுன்னேற்றத்திலும், பொதுக்காரியங்களிலும்கூட கவனஞ்செலுத்திவந்தார். ஞாயிற்றுக்கிழமைதோறும் இவர்வீட்டில் பொதுஜனஊழியர் பலர் சேர்ந்து நாட்டின்நன்மைகளைப்பற்றிப் பலயோசனைகள் செய்வது வழக்கம்; இவர், ஆங்கிலத்தில் மிக்கபாண்டித்தியம் பெற்றிருந்ததோடு உருதுபாஷையிலும், ஹிந்திபாஷையிலும் நல்லவிற்பத்தியுடையவராயிருந்தார். பேசுவதிலும் இவர் மகாதீரர்; ஆங்கிலத்தில் மிக்கசாதுரியமாகப் பேசும்திறமை பெற்றவர்.

இன்னும் நம் லாலாலஜபதிராய் 1888-ஆம் ஆண்டில் அலகாபாத்தில்நடந்த நான்காவதுகாங்கிரஸில் முதன்முதல் பஞ்சாப்பிரதிநிதியாகச்சேர்ந்து, 'சட்டசபையில் இந்தியர்களின் தொகையும், ஜனப்பிரதிநிதிகளின்தொகையும் அதிகமாயிருக்க வேண்டுமென்ற தீர்மானத்தைப்பற்றிப்பேசினர். லாகூர் 'தயானந்தகலாசாலைக்கு ஐந்துலட்சப் ரூபாய் மூலதனம்வைக் கப்பட்டதில், பணம்சேகரிக்கும்விஷயத்தில் இவரேமுயற்சி யெடுத்தார். அக்கலாசாலைக்குப் பலஆண்டுகள்வரை கௌரவ காரியதரிசியாகவுமிருந்தார்; கௌரவ போதகாசிரியராகவு மிருந்தார்; தேசசரித்திரத்தை மாணவர்க்கு விளக்கிக்காட்டி வந்தார்; ஏழைப்பிள்ளைகள் படிக்கப் பணஉதவிசெய்தார்; அவர்களுக்குப்புத்தகங்களும் வாங்கிக்கொடுத்துவந்தார்; ஜுலாந்தர்' என்னும் ஊரிலுள்ள ஆங்கில சமஸ்கிருதகலா சாலைக்குக் காரியதரிசியாகவுமிருந்தார்; பஞ்சாப்மாகாணத் தில் ஆரியசமாஜத்தார்களால் ஏற்படுத்தப்பட்ட எல்லாக்கலா சாலைகளின் நிர்வாகக்கமிட்டியில் அங்கத்தினராகவுமிருந்தார்.

பிறகு இவர், 1892-ஆம் ஆண்டில் பஞ்சாப்மாகாணத்திற் குத் தலைநகரான லாகூருக்குச்சென்று அங்குத்தம்முடைய வக்கீல்தொழிலை நடத்திவந்தார். 1902-ஆம் ஆண்டுவரை அத் தொழிலிலிருந்து அதிகப்பணம்சம்பாதித்தார். அதன்பிறகு அப்பணத்தைப் பொதுக்காரியங்களுக்கு உபயோகப்படுத்தத் தொடங்கினர்.

1893-ஆம் ஆண்டில் லாகூர்காங்கிரஸில் கவர்ன்மெண் டார் கல்விக்கு அதிகப்பணம் செலவிட வேண்டுமென்றும், கைத்தொழில்வித்தையை விருத்திசெய்யவேண்டுமென்றும் பேசினர்.

புனவிலுள்ள இந்திய ஊழிய சங்கத்தைப்போன்ற பலசங்கங்களைப் பஞ்சாபில் ஏற்படுத்தினர்; அநாதைப் பிள்ளைகளுக்குப் பல பாதுகாப்பிடங்களை அமைத்தார்; பஞ்சம் முதலிய கஷ்டநிவர்த்திக்கமிட்டிகளை ஏற்படுத்தினர்: பரோஜிபூர்நகரிலுள்ள ஆரியசமாஜ அநாதைஆச்சிரமத்திற்குப் பல ஆண்டுகள்வரை பொதுக்காரியதரிசியாக இருந்தார்: மீரட்நகரத்தில் திக்கற்றவர்களுக்கென்றேற்படுத்தப்பட்ட மடத்திற்கு அங்கத்தினராகவுமிருந்தார்: 1897-ஆம் ஆண்டில் இரண்டாயிரம் ஏழைகளுக்கு உதவியேற்படுத்தக்கூடிய வேலையைத்தொடங்கி அதற்குப் பொதுக்காரியதரிசியாகவுமிருந்தார்.

1900-ஆம்ஆண்டில் லாகூரில்நடைபெற்றகாங்கிரஸிலும், "கல்வி, கைத்தொழில் ஆகியவற்றை ஆராய்ச்சிசெய்ய காங்கிரஸ் தினங்களில் ஒருநாள் தனியாகவிடவேண்டுமென்ற பிரேரணையைக்கொண்டுவந்தார். அவ்வருட காங்கிரஸ்மகாசபையின் 1901-ஆம் வருடத்திய நிர்வாகக்கமிட்டிக்குப் பஞ்சாப்மாகாணத்தின் அங்கத்தினராகவும் நம் லாலாலஜபதி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கவர்ன்மெண்டாரால் 1901-ஆம்ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட பஞ்சநிவாரணகமிஷனில் இவர் நல்லசாக்ஷியங்கூறினர்.

1902-ஆம் ஆண்டில், லார்ட் கர்ஸனல் ஏற்படுத்தப்பட்ட யூனிவர்ஸிட்டிகமிஷனில், அரசாங்கத்தார்விருப்பப்படி கல்வி அபிவிருத்திவிஷயத்தில் சாக்ஷியங்கூறினர். 1905-ஆம் ஆண்டில் அமெரிக்காவுக்குச்சென்று அங்குள்ள கல்வி நிலைமையையும், கல்விபோதிக்கும் முறைகளையும் தெரிந்துவந்து நம்நாட்டிலுள்ளவர்க்குத் தெரிவித்தார்; இன்னும், கல்வி, பெண்கல்வி,

தேகப்பயிற்சிமுதலியன விருத்தியாவதற்கானமார்க்கங்களையும் செய்தார்; இன்னும் அவ்வருடம் ஏப்ரல்மாதத்தில், வட இந்தியாவிலுள்ள காங்காராஜில்லாவில் பூகம்பத்தினலுண்டான சேதத்தின்நிவாரணத்திற்காக லாகூரிலுள்ள ஆரியசமாஜத்தார் ஏற்படுத்தியகமிட்டிக்குக் காரியதரிசியாயிருந்து கஷ்ட நிவர்த்தி செய்தார். பலபாங்கிகளுக்கு அங்கத்தினராகவுமிருந்தார்; பஞ்சாப் நேஷனல்பாங்கிக்கு டைரக்டராகவுமிருந்தார்; பலதொழிற்சாலைகளுக்கு டைரக்டராயிருந்து உதவிபுரிந்தார்; வியாபாரத்துறைகளையும் விருத்திசெய்தார்; பலபத்திரிகைகளுக்கும், நூல்களுக்கும் ஆசிரியரானார்.

மேற்கூறிய 1905-ஆம்ஆண்டில், காங்கிரஸைப்பற்றி இங்கிலாந்தில் பிரசாரம்செய்வதற்குக் காங்கிரஸ் சபையார் நம்லாலாவையும், கோகலேயையும்தேர்ந்தெடுத்து அங்கனுப்பினார்கள். பஞ்சாப்மாகாணத்திலுள்ள இந்தியன்அஸோசியேஷன் மூவாயிரம் ரூபாய்சேகரித்துச் செலவுக்காக லாலாவிடம் கொடுத்தது; லாலா அதைப் பெற்றுக்கொள்ளாமல் பஞ்சாப்பிலுள்ள ஏழைமாணவர்களுக்குக்கொடுக்கும்படி ஏற்பாடுசெய்துவிட்டுத் தம்முடைய சொந்தப்பணச்செலவில் இங்கிலாந்துக்குச் சென்றார்; கோகலேயும், நம்லாலாவும் அங்குப் பல பிரசங்கங்களைச் செய்தார்கள். பின்பு கோகலே இந்தியாவுக்குத் திரும்பிவந்துவிட்டார்; லாலா அங்கிருந்து தொழில் தலைவர்களிடம் இந்தியாவின்நிலைமையை விளக்கமாக எடுத்துக் கூறினார். அவர்கள் அதைக்கேட்டு, காங்கிரஸுக்குத் தந்தி மூலமாக ஓர் அனுகூலமான அறிக்கையை அனுப்பினார்கள். அதன்பிறகு லாலா, முன்னுரைத்தபடி கல்விமுறை முதலியவற்றைத் தெரிந்துகொள்ள அமெரிக்காவுக்குப்போய்வந்தார்.

பிறகு அந்த 1905-ஆம் ஆண்டிலேயே காசியில்நடந்த காங்கிரஸ்மகாசபையில், இந்தியர் அடக்கத்தால்அடையும் கஷ்டங்களைப்பற்றி உருக்கமாகப்பேசினர். இந்தக்காங்கிரஸில், லாலா இங்கிலாந்தில்செய்த வேலையைப்பற்றிப் புகழ்ச்சியான ஒரு தீர்மானம் நிறைவேறியது.

1906-ஆம் ஆண்டில் கல்கத்தாவில்கூடிய காங்கிரஸில் சுதேசியத்தைப்பற்றியதீர்மானத்தை நம் லாலா ஆதரித்துப் பேசினர்.

அப்பால் 1907-ஆம் ஆண்டில், பஞ்சாப்மாகாணத்தை ஆண்டுவந்த, 'ஸர். டென்ஸில்இபட்ஸன்' என்பவர், 'லாலா லஜபதிராய்' கவர்ன்மெண்டுக்கு விரோதமானகாரியங்களைச் செய்தார்என்று அவர்மீதுகுற்றஞ்சுமத்தி, 1818-ஆம் வருடத்திய 3-ஆம் ரெகுலேஷன்படி இவரையும், ஸர்தார்அஜித் ஸிங்கையும் நாட்டைவிட்டுக்கடத்திப் பர்மாவிலுள்ள, 'மாண்டலே' என்னுமிடத்தில் சிறைப்படுத்தும்படிசெய்தார். இவர் சிறையிலிருக்குங்காலத்தில் சிலபத்திரிகைக்காரர்கள் இவரை நிந்தித்தெழுதினர்கள். சிலமாதங்கள்சென்று, பலபெரியோர்கள், லாலா குற்றமற்றவரென்று கூறியதன்மேல் இவர், விடுதலையடைந்துவந்தார். வந்தபின் தம்மைநிந்தித்தவர்கள்மீது மானநஷ்ட வழக்குத்தொடுத்து அவர்களிடமிருந்து நஷ்டஈட்டுப்பணம்வாங்கினர்.

பின்னர், மேற்குறித்த 1907-ஆம் ஆண்டில் சூரத்தில் கூடிய காங்கிரஸில், லாலாலஜபதி சிறைவாசஞ்செய்துவந்ததனல் இவரையே தலைவராக ஏற்படுத்தவேண்டுமென்று திலகர்கக்ஷியார் கூறினர்கள். அதை இவர் அங்கீகரிக்கவில்லை.

அவ்வருஷம் சிலகாரணங்களால் காங்கிரஸ் பிளவுபட்டது. எனினும், லாலாலஜபதி காங்கிரஸுக்குப்போய்க்கொண்டிருந்தார். 1908-ஆம் ஆண்டிலிருந்து 1912-ஆம் ஆண்டுவரை இவர் காங்கிரஸுக்குப்போகவில்லை. 1912-ஆம் ஆண்டில் பாங்கிபூரில்நடந்த காங்கிரஸில் இரண்டு தீர்மானங்களில் பேசினார். இவ்வருடத்தில் மீண்டும் அமெரிக்காவுக்குச்சென்று வந்தார். 1913-ஆம் ஆண்டில் கராச்சியில் நடந்த காங்கிரஸில் ஒருதீர்மானத்தை ஆதரித்துப்பேசினார். இவ்வருட ஆரம்பத்தில் பூபேந்திரநாதவஸு, ஜின்னா, சமாரத், மஸ்ரல்ஹக், பி. என். சர்மா முதலியவர்களுடன் காங்கிரஸ் தூதராக இங்கிலாந்திற்குச்சென்று பிரசாரஞ்செய்தார். 1914-ஆம் ஆண்டிலும் இங்கிலாந்திலேயே இருந்தார்.

இவர் அங்கிருக்கும்போது, “இந்தியாவில் இராஜீய நிலைமையின் பிரதிபிம்பங்கள்” என்ற ஒருசிறுபுத்தகத்தை எழுதிவெளியிட்டார்; அதற்காகக் கவர்ன்மெண்டார், இந்தியாவில் இவருக்கேற்பட்டிருந்த வக்கீல்பதவியை நீக்கியதோடு, இந்தியாவிற்குள் இவர்வரக்கூடாதென்ற உத்தரவையும் பிறப்பித்தார்கள். பிறகு இவர் 1915-ஆம்ஆண்டில் இங்கிலாந்தைவிட்டு அமெரிக்காவுக்குச்சென்று நாலாபக்கங்களிலும் சுற்றுப்பிரயாணம்செய்தார். ஆங்காங்கே இந்தியாவைப்பற்றிப் பலபிரசங்கங்கள்செய்தார்; 1916ஆம்ஆண்டில் ‘யங்இந்தியா’ என்னும் புத்தகத்தைவெளியிட்டார்; பல சங்கங்களைஏற்படுத்தினார். அமெரிக்காவிலிருந்த இந்திய வாலிபர்களை ஒன்றுசேர்த்து, அவர்களுக்குத் தேசாபிமானத்தையுண்டாக்கினார். பத்திரிக்கைகளுக்கு இந்தியாவைப் பற்றிய வியாசங்கள்எழுதினார்; இந்தியாவைப்பற்றியவிஷயங்

களை அமெரிக்காவிலுள்ளவர்களுக்குத் தெரியும்படி செய்தார்; 1919-ஆம் ஆண்டுவரை அமெரிக்கா முதலிய மேல்நாடுகளிலேயே இருந்துவந்தார். இவ்வருடத்தில் இந்தியாவுக்கு வந்துசேர்ந்தார்.

1920-ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதத்தில் கல்கத்தாவில் நடந்த காங்கிரஸுக்கு இவரைத்தலைவராகத்தேசாபிமானிகள் தேர்ந்தெடுத்தார்கள். அப்போது நம் லாலா லஜபதியை ஜனங்கள் கொண்டாடியதற்களவில்லை.

இவர் தேசநன்மைக்காகச் செய்துவந்த காரியங்கள் இன்னும்பலவுண்டு; அமெரிக்காவில் இருந்தகாலத்தில் பஞ்சாபில் உள்ளவர்களின் கஷ்டநிவர்த்திக்காக 5000 ரூபாய் அனுப்பினர். மதப்பிரசாரமும், ஆசாரச் சீர்திருத்தப்பிரசாரமும் செய்திருக்கிறர்; உருதுபாஷையில் இத்தாலியா தேசாபிமானிகளாகிய மாஜினி, கரிபால்டி, ஆகியவர்களின் சரித்திரங்களையும், சிவாஜி, சுவாமி தயானந்தர், ஸ்ரீகிருஷ்ணன் முதலியவர்களின் சரித்திரங்களையும், எழுதி அச்சிட்டு வெளிப்படுத்தியிருக்கின்றர்; ஆங்கிலத்தில் ஆரியசமாஜத்தைப்பற்றியும், பண்டித குருதத்தவித்தியார்த்தியைப்பற்றியும், நாட்டின் விஷயத்தைப்பற்றியும், தம்மை நாட்டைவிட்டு வெளியேற்றியதைப்பற்றியும், அமெரிக்காவின் ஐக்கிய அரசியல்களைப்பற்றியும், பிரிட்டிஷ்இந்தியாவின் பொருளாதார நிலைமையைப்பற்றியும், இந்துக்களின் நாகரீகத்தைப்பற்றியும் பலபுத்தகங்களை எழுதி வெளியிட்டிருக்கிறர்.

காங்கிரஸுக்கு இவர்போய்க்கொண்டிருந்தும் அதைப்பற்றி இவருக்கு நல்லஅபிப்பிராயங்கிடையாது. இந்தியா, தன்

உரிமையைப்பெறவேண்டுமானால் மிதவாதிகளும், அமிதவாதிகளும் ஒன்றுபடவேண்டுமென்பது இவருடையகொள்கை. கொடுங்காரியங்களைச்செய்வதில் இவருக்கு விருப்பமேயில்லை. தேசத்துக்குப்பாடுபடுகிறவர்கள் தைரியத்தைவிடலாகாதென்பதும், கஷ்டத்தைச் சகிக்கவேண்டுமென்பதும் இவரின் அபிப்பிராயங்கள். வக்கில்தொழிலில் இவருக்கு நல்ல அபிப்பிராயங் கிடையாது. இந்தியா பலவகைகளிலும் முன்னேற்றமடையவேண்டுமென்பதிலேயே இவர்மிக்கவிருப்பமுடையவர். அரசியல் காரியங்களில் இவருக்கு நல்ல ஆராய்ச்சியுண்டு. இவருடையமதம் ஆரியசமாஜமாகும்.

இவருடையகுணங்களோ மிகப் பாராட்டக்கூடியவைகள்; இவர், பரோபகாரமுள்ளவர்; ஏழைகள்மீது இரக்கமுள்ளவர்; நடுநிலைமைபொருந்தியவர்; ஜீவதயையுள்ளவர்: தீயகாரியங்களை நீக்கி நன்மையான காரியங்களையேசெய்பவர்; கோபமில்லாதவர்; சுகதுக்கங்களைச் சமமாகப்பாவிப்பவர்; தன்மதிப்பை விடாதவர்; தீரமான மனதுடையவர்; மிகுந்த புகழாளர்.

இவர், 1920-ஆம் ஆண்டிற்குப்பின் தேசீயகாரியங்களில் முன்போல்அதிகமாகத் தலையிட்டதாகத்தெரியவில்லை. எனினும், இந்தியாவின் முன்னேற்றத்தில் மிகுந்தவிருப்பமும், சிரத்தையுமுடையவரா யிருந்துவந்து, கடைசியில் 1928-ஆம் வருடம் நவம்பர் மாதம் 17-ஆம் தேதி மார்புநோயால் பீடிக்கப்பட்டு இவ்வுலகைவிட்டு நீங்கினர்.

---

## 10. பருவங்கள்

உலகத்தில் ஏற்பட்டிருக்கும் காலப்பிரிவுகளே, 'பருவங்கள்' என்று சொல்லப்படுகின்றன. மனிதர்கள், நோயின்றிச்

சுகத்துடன் வாழவேண்டுமானல், கால வேறுபாடுகளை யுணர்ந்து, அவற்றிற்குத்தக்க உணவு, பானம் முதலியவற்றை உட்கொள்ளவேண்டும்; ஆதலின், பருவங்களைப்பற்றி அறிந்து கொள்ளுதல் எல்லோருக்கும் அவசியமாம்.

பூமி, தன்னைத்தானே ஒருமுறை சுற்றிக்கொள்ளும் காலம், பகல் இரவுகொண்ட ஒரு நாளாம். இந்த ஒருநாளை, காலை, நடுப்பகல், பிற்பகல், மாலை, யாமம், வைகறை என ஆறுபகுப்புகளாகப் பெரியோர்கள் பிரித்திருக்கின்றார்கள். இந்தஆறும் சிறுபொழுதெனச்சொல்லப்படும். காலை, நடுப்பகல், பிற்பகல் என்னும் மூன்றும் பகலின்பிரிவுகள்; மாலை, யாமம், வைகறைஎன்பன இரவின் பிரிவுகள்; காலை—சூரியன் உதயமாகுங்காலம்; நடுப்பகல்—சூரியன் உச்சிக்குவரும் மத்தியானநேரம்; பிற்பகல்—சூரியன் மேற்கேசாயும் சாயுங்கால நேரம்; மாலை—சூரியன் மேற்கேமறைந்தபின் ஏற்படும் முன்னிரவுநேரம்; யாமம்—நடுஇராத்திரி; வைகறை—கோழி கூப்பிடும் விடியற்காலநேரம்.

காலை—தந்தசுத்தி, ஸ்நானம்முதலியனசெய்து சுறுசுறுப்புடன் வேலைதொடங்கும்நேரம்; நடுப்பகல்—உணவுண்டு மும்முரமாக வேலைசெய்யும் நேரம்; பிற்பகல்—வேலைவிட்டுச் சிற்றுண்டியருந்தித் தேகாப்பியாசம் செய்யும்நேரம் அல்லது இளைப்பாறும் நேரம்; மாலை—இளைப்பாறி இராப்போஜனமுண்ணும் நேரம்; யாமம்—நித்திரைசெய்யும் நேரம்; வைகறை—விழித்தெழுந்து தேகாப்பியாசம் செய்யும்நேரம், அல்லது படிக்கும்நேரம்.

மேற்கூறியபடி பகல், இரவுகொண்ட ஒருநாளளவில் தன்னைத்தானே சுற்றிக்கொள்ளும்பூமி. அவ்வாறு சுழன்றபடியே கொஞ்சங்கொஞ்சமாக நகர்ந்து முந்நூற்றறுபது தினங்களில் சூரியனை ஒருமுறை சுற்றிவரும்; அப்படிச் சுற்றி வருங்காலம் ஒருவருடமாம். இந்த ஒருவருட காலத்தை இரண்டு அயனங்களாகவும், ஆறுபருவங்களாகவும் பெரியோர் பிரித்திருக்கின்றனர்.

மேலேசொன்னபடி பூமி, தன்னைத்தானே ஒருநாளில் சுற்றியும், சூரியனை ஒருவருடத்தில் சுற்றியும் வருகின்ற சஞ்சாரத்தினல், சூரியன் ஆறுமாதங்கள் வடக்குநோக்கியும், ஆறுமாதங்கள் தெற்குநோக்கியும் சிறிதுசிறிதாக நகர்ந்து செல்வதுபோல் காணப்படும். அவ்வாறு வடக்குநோக்கி நகர்வது ஒரு அயனமாகும்; தெற்குநோக்கி நகர்வது ஒரு அயனமாகும்; தைமாதம்முதல், ஆனிமாதம்வரையில் சூரியன் தெற்கிலிருந்து வடக்குநோக்கிநகரும்; இப்படிநகரும் ஆறு மாதகாலமும் உத்தராயணமென்று சொல்லப்படும்; ஆடி மாதம்முதல் மார்கழிமாதம்வரையில் சூரியன் வடக்கிலிருந்து தெற்குநோக்கி நகரும்; இப்படிநகரும் ஆறுமாதகாலமும் தட்சிணயனம் என்றுசொல்லப்படும்; உத்தராயணகாலத்தில் பகற்பொழுது அதிகரித்திருக்கும்; தட்சிணயனகாலத்தில் இரவுநீட்டித்திருக்கும்.

இவ்வாறு இரண்டுஅயனங்களைக்கொண்ட ஒருவருடத்தை, மேற்கூறியசூரியன் நகர்ச்சிக்குத்தக்கபடி ஆறு பாகங்களாகவும் பெரியோர் பிரித்திருக்கின்றனர். இவைகளே பருவங்களெனக் கூறப்படுகின்றன; இவற்றுள், ஒவ்வொரு

பருவமும் இரண்டிரண்டுமாதங்கள் கொண்டதாகும். இந்த ஆறுபருவங்களும் பெரும்பொழுதென்று சொல்லப்படும். இப்பருவங்களின்பெயர்கள்: கார், குளிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்பனவாம். இவற்றுள் ஆவணியும், புரட்டாசியும் கார்காலம்; ஐப்பசியும், கார்த்திகையும் குளிர்காலம்; மார்கழியும், தையும் முன்பனிக்காலம்; மாசியும், பங்குனியும் பின்பனிக்காலம்; சித்திரையும் வைகாசியும் இளவேனிற்காலம்; ஆனியும், ஆடியும் முதுவேனிற் காலம்.

இக்காலங்களில், சூரியன்நிலைக்கும், பூசஞ்சாரத்துக்கும் தக்கபடி சீதோஷ்ணநிலைகள் ஒன்றுக்கொன்று மாறுபடும்.

கார்காலத்தில், ஆகஸ்டு, செப்டம்பர்மாதங்கள்சம்மந்தப்பட்டிருக்கும்; இடைவிட்டும், தொடர்ச்சியாகவும் பெருமழை பெய்யும்; வெப்பம் குறைந்திருக்கும்; குளிர்காற்று வீசும்: நெல்முதலிய பயிர்கள் உண்டாகும்; எங்கும் புல், பூண்டு முதலியன தளிர்த்துச்செழிக்கும்.

குளிர்காலத்தில், அக்டோபர், நவம்பர் மாதங்கள் கலந்திருக்கும்; வாடைக்காற்றோடு தொடர்ந்தமழைபெய்யும்; எங்கும் வெள்ளம்பெருகியோடும்; பூமி குளிர்ந்துவிடும்; எவ்விடத்தும் குளிர் அதிகரிக்கும்; நெற்பயிர்முதலியன செழித்து வளர்ந்து அடர்ந்திருக்கும்; புன்செய்த்தானியங்களில் சில விளைவுக்குவரும்; பகற்பொழுதுகுறைந்து இரவு நீண்டிருக்கும்.

முன்பனிக்காலத்தில், டிசம்பர், ஜனவரி மாதங்கள் சம்பந்தப்பட்டிருக்கும்; பனிக்காற்றுவீசும்; மாலை முன்னிரவில்

பனியும் பெய்யும்; பயிர்களும், புல்பூண்டு முதலியவைகளும் விளைந்து அறுவடை தொடங்கும்.

பின்பனிக்காலத்தில் பிப்ரவரி, மார்ச்சு மாதங்கள் சேர்ந்திருக்கும்; பின்னிரவு—அதாவது காலைநேரத்தில் பனி அதிகமாகப்பெய்யும்; நெற்கதிர்முற்றி மிகுதியாக விளைந்திருக்கும்; எங்கும் கதிர்அறுப்பு அடிப்பு அதிகரித்திருக்கும்; பகலில் வெயில்வெப்பம் தோன்றும்; புல், பூண்டு முதலியன கருகும்; மரங்களில் இலை உதிரும்.

இளவேனிற்காலத்தில், ஏப்ரல், மே மாதங்கள் சம்பந்தப்பட்டிருக்கும்; குளிரும், பனியும்நீங்கி வெப்பமும், வியர்வையும் அதிகரித்திருக்கும்; ஆகாயத்தில் மேகபடலமின்றிப் பரிசுத்தமாயிருக்கும்; மரங்களும், செடிகளும் தளிர்த்துப் புஷ்பங்கள் மலர்ந்து சோலைகளில் நல்லவாசனை அதிகரித்திருக்கும்; நல்லகனிவர்க்கங்கள் உண்டாகியிருக்கும்; வண்டுகளும், பறவைகளும் பாடும்; மாலை நேரத்தில் தென்றல்காற்று வீசும்; சுகவாசிகள், சோலைகளிலும், நீர்நிலைகளிலும் சென்று குளிர்காற்றுவாங்கி ஆனந்தமடைவார்கள்; எங்கும் கலியாணம் முதலிய சுபகாரியங்கள் நடைபெறும்; திருவிழாக்கள் நடக்கும்; துரைமார்களும், இந்தியபிரபுக்களும் குளிர்ச்சிக்காகக் குற்றாலம், நீலகிரி, கோடைக்கானல் முதலிய இடங்களுக்குச்செல்வார்கள். இந்த இளவேனிற்பருவத்தில், சித்திரைமாதக்கடைசி ஏழுதினங்களும், வைகாசி மாதம் முன் ஏழுநாட்களும் வெயிலின் கொடுமை அளவுக்குமிஞ்சியிருக்கும்; இந்தப்பதினன்கு நாட்கள், கொண்டகாலத்தை நம் நாட்டிலுள்ளபலர் அக்கினிநக்ஷத்திரமென்றும், கத்திரியென்றும் சொல்வார்கள். இந்த இளவேனிற்பருவம் சற்று

வெம்மை அதிகரித்த காலமாயிருந்தாலும் எல்யலாரும் சௌக்கியமடைதற்குரிய காலமாயிருத்தலினாலே இதனைப் பலரும் சிறந்ததாகவேகொள்கின்றனர்.

முதுவேனிற்காலத்தில் ஜூன், ஜூலை மாதங்கள் சம்பந்தப்பட்டிருக்கும். வெப்பம் அதிகரித்து நெருப்புக்காற்று வீசும்; எங்கும் நீர்வறண்டுபோகும்; மனிதருக்கு நாவறட்சியுண்டாகும்; இரத்தம் சுண்டும், தாகமெடுக்கும்; எங்கும் புழுக்கமாயிருக்கும்; செடிகளும், புல்பூண்டுகளும் வறண்டுபோம்; காட்டுப்பிரதேசங்களில் ஜீவராசிகள் தண்ணீர் அகப்படாமல் வருந்தும்; மனிதருக்குக் கண்ணெரிச்சல் முதலியன உண்டாகும்.

இந்தியாவில், இம்முறைப்படி ஆறுபருவங்கள் ஏற்பட்டிருக்கின்றன; இந்தியாவின் வடபாகத்திலும், ஐரோப்பா, அமெரிக்காமுதலியநாடுகளிலும் உள்ளவர்கள் ஒருவருடத்தை நான்கு பருவங்களாகப் பிரித்திருக்கின்றனர்; அவை: வசந்தம், கோடை, வறளை, மாரி என்பனவாம். இவை ஒவ்வொன்றும் மும்மூன்று மாதங்களைக்கொண்டவை. வசந்தகாலம்—சித்திரை, வைகாசி, ஆனி ஆகிய மாதங்களைக்கொண்டது; கோடைகாலம்—ஆடி, ஆவணி, புரட்டாசி ஆகியவற்றைக்கொண்டது; வறளைக்காலம்—ஐப்பசி, கார்த்திகை, மார்கழி ஆகியவற்றைக்கொண்டது; மாரிக்காலம்—தை, மாசி, பங்குனி ஆகிய மூன்றுமாதங்களையும் கொண்டது.

மரங்கள் தளிர்க்குங்காலம் வசந்தகாலம்; இதற்கு ஆங்கிலத்தில், 'ஸ்பிரிங்' என்று பெயர். மரங்கள் காய்த்துப்பழுக்குங்காலம் கோடைக்காலம்; இதற்கு ஆங்கிலத்தில் 'ஸம்மர்' என்று பெயர்; மரங்கள் முதலியவற்றில், இலையுதிர்கின்ற காலமே வறளைக்காலம்; இதற்கு ஆங்கிலத்தில் 'ஆட்டம்ன்' என்று பெயர்; மரங்கள் முதலியவைகள் இருக்குமிடமே தெரி

யாமல் மழையாலும், பனிக்கட்டியாலும் மூடப்படுங்காலமே மாரிக்காலம்; இதற்கு ஆங்கிலத்தில் 'வின்ட்டர்' என்றுபெயர். பிப்பிரவரி மீ 15உ முதல், மே மீ 15உ வரை வசந்தகாலம்; மே மீ 15உ முதல், ஆகஸ்டு மீ 15உ வரை கோடைக் காலம்; ஆகஸ்டு மீ 15உ முதல், நவம்பர் மீ 15உ வரை இலையுதிர்காலம்; நவம்பர் மீ 15உ முதல், பிப்பிரவரி மீ 15உ வரை மாரிக்காலம்.

இவ்வாறு நம்முடையநாட்டிலும், வடநாட்டிலும், ஐரோப்பாமுதலிய நாடுகளிலும் ஏற்பட்டிருக்கும் பருவங்களுக்குத்தக்கபடி ஆகாரம்முதலியவைகளைக்கொள்ளவேண்டும்; வெப்பமான பருவங்களில் குளிர்ச்சியான ஆகாரங்களையும், பானங்களையும், உடைகளையும்கொள்ளவேண்டும்; குளிர்ச்சியான பருவங்களில் சூடானபானம் பருகவேண்டும்; சூடான ஆகாரம் உட்கொள்ளவேண்டும்; வெதுவெதுப்பானஉடைகளை அணியவேண்டும். சூடும், குளிர்ச்சியும் சமமான பருவங்களில் சமசூடும் குளிர்ச்சியுமுள்ள ஆகாரம் முதலியவற்றைக்கொள்ள வேண்டும். எக்காலத்திலும் சுகமானகாற்றையே உட்கொள்ள வேண்டும். பருவங்களுக்குத்தக்க பயிர் செய்யவேண்டும்; தொழிலுக்குரிய காலத்தில் வேலைசெய்யவேண்டும்; உணவுண்ணுங்காலத்தில் ஆகாரமுட்கொள்ளவேண்டும்; தேகாப்பியாசஞ்செய்யுங்காலத்தில் தேகப்பயிற்சி செய்யவேண்டும்; இளைப்பாறும்நேரத்தில் இளைப்பாறவேண்டும்; தூங்கும்நேரத்தில் தூங்கவேண்டும்; விழித்தற்குரியகாலத்தில் விழிக்கவேண்டும்; பிரயாணஞ் செய்யுங்காலத்தில் ஊர்ப்பிரயாணஞ் செய்தல் வேண்டும்.

காலமறிந்து எந்தக்காரியத்தையும் தக்க பருவத்தில் செய்துவருவோர் நல்ல வாழ்வைப்பெறுவர்.

---

# 11. பானகல் அரசர்



“பானகல் அரசர்” என்னும்பெரியார், ஆந்திரநாட்டைச் சேர்ந்த, ‘பானகல்’ என்னும் நகரத்திலே வெலமக்குலத்தில் ஜமீன்தார் வகுப்பைச் சார்ந்த, ‘வேங்கடராயநிங்கார்’ என்பவருக்கு 1866-ஆம் ஆண்டில் புத்திரராய்ப்பிறந்தார். இவருக்குத் தந்தையாரால் இடப்பட்ட பெயர், ‘இராமராய நிங்கார்’ என்பதாகும். பிற்பட்ட காலத்தில் இவரிடம் அரசர்க்குரியஉயர் குணங்களும், பெருஞ்செயல்களும் ஏற்பட்டிருந்தபடியால் அச்சிறப்புநோக்கி இவருக்கு ‘பானகல் அரசர்’ என்னும் பட்டப்பெயர் வழங்கலாயிற்று.

இம்மன்னர் இளம்பருவத்திலேயே மிகுந்த நுட்பமுடையவராய்த் தமது நாட்டில் ஆரம்பக் கல்விகற்கத்தொடங்கிப் பதினறுவயதிற்குள் வடமொழியிலும், தெலுங்கிலும் நல்ல பாண்டித்தியம்பெற்றார்.பின்னர்ப்பதினறும்வயதில் ஆங்கிலக்கல்வி கற்கவிரும்பித் தம் தந்தையாரின் அனுமதிபெற்று, 1882-ஆம்ஆண்டு சென்னைக்குவந்து, திருவல்லிக்கேணி இந்து பாடசாலையிற்சேர்ந்து ஆங்கிலம் கற்கத்தொடங்கினர். அக் கல்வியை ஊக்கத்துடன் கற்று ஒவ்வொருவகுப்பிலும் தேறி 1888-ஆம் ஆண்டில், மெட்ரிகுலேஷனில் (பிரவேசபரீக்ஷையில்) தேறினர். பின்னர் இராஜதானிக் கலாசாலையில் சேர்ந்து உயர்தரக்கல்வி கற்கத்தொடங்கி 1893-ஆம் ஆண்டில், பி. ஏ. பரீக்ஷையில், இரசாயணசாஸ்திரத்தைப் பாடமாகக்கொண்டு அதில்முதல்வகுப்பில் தேறினர். அதன்பிறகு, மொழி ஆராய்ச்சியையும், தெலுங்கு மொழியையும் பாடமாகக்கொண்டு, எம். ஏ. பரீக்ஷைக்குச்சென்று அதிலும் தேறினர். இப்பரீக்ஷைக்குப் படிக்குங்காலத்திலேயே சட்ட கலாசாலையை (லாகாலேஜை)ச்சார்ந்து சட்டங்களைப்படித்து அவற்றிலும் தேர்ச்சி அடைந்தார்.

அக்காலத்தில் சென்னைக்கவர்னராயிருந்த, 'வென்லாக்' என்னும் பிரபு, இவருடைய கல்வித்திறமையையும், அறிவின் மேம்பாட்டையும், நல்லொழுக்கத்தையும்தெரிந்து, அரசாங்க மாளிகைக்குச் செல்லும் சுதந்தரத்தை இவருக்களித்து இம் மன்னரை நன்குமதித்துக் கௌரவப்படுத்தினர்.

இங்ஙனம் நம், பானகல் அரசர், கல்வித்துறைகளில் தேர்ச்சிஅடைந்து கௌரவம்பெற்றபிறகு, பொதுநன்மைக்

காக உழைக்கத்தொடங்கி அதற்கான காரியங்களிற் பிரவேசித்தார்; தென்னாற்காடு ஜில்லாபோர்டில் ஆறு ஆண்டுகள்வரை அங்கத்தினராயிருந்து பொதுஜனங்களுக்குவேண்டிய நன்மைகளைச் செய்துவந்தார். இவர், இவ்வாறு பொதுஜன நன்மைக்காக உழைத்துவந்த பெருஞ்செயலை, அரசாங்கத்தார் கண்டு மகிழ்ந்து, விக்டோரியா மகாராணியாரின் 50-ஆம் ஆண்டுவிழாவன்று இவருக்கு நற்சாக்ஷி பத்திர மொன்று கொடுத்தனர். பின்னர் கவர்ன்மெண்டாரால் ஜார்ஜ்மன்னர்பிரான் மகுடாபிஷேகப்பதக்கமும் இவருக்கு அளிக்கப்பட்டது; அதன்பிறகு 1910-ஆம் ஆண்டில், யூனிவர்ஸிட்டியின் (பல்கலைக்கழகத்தின்) அங்கத்தினராயினர்.

இப்பதவியைப்பெற்றபின்னர் இவர், கல்வியே மனிதரின் அறியாமையைப்போக்கி அவர்களைப் பல நற்றுறைகளிலும் முன்னேறச்செய்வதென்பதையுணர்ந்து, நம் நாட்டுமக்களுக்குக் கல்வியைப்போதித்து நலத்தையுண்டாக்கப் பெருமுயற்சியெடுத்துக்கொண்டார். திருக்காளத்தியில் பாடசாலையொன்றையும், ஏழைமக்கள் தங்க விடுதியொன்றையும் அமைத்தார். நம்நாட்டில் பயிர்த்தொழிலை விருத்திசெய்யக்கருதி இருபதினாயிரம் ரூபாய் செலவுசெய்து, பயிர்த்தொழிற்பாடசாலையையும், மாணவர் விடுதியையும் கட்டிமுடித்தார். அவை எப்பொழுதும் தட்டின்றி நடைபெற்றுவருவதற்கு இரண்டு கிராமங்களின் வருமானத்தை ஒதுக்கிவைத்தார். இவற்றோடு நில்லாமல் மேலும் தம்நாட்டில் சிலகைத்தொழில்களை விருத்திசெய்து பரப்புதற்குத் தக்க மார்க்கங்களையும் செய்தார். இராஜப்பிரதிநிதி (கவர்னர்ஜெனரல்) ஆகிய, லார்ட்ஹார்டிஞ்சு, சென்னைக்குவந்ததின் ஞாபகார்த்தமாகத் தெலுங்குமொழியில்

பௌதீகநூலை (பூமிசாஸ்திரத்தை) வெளியிடுதற்காகச் சென்னைச் சர்வகலாசாலைக்குப் பதினாயிரம் ரூபாய் மூலதனமாக அளித்தார்.

பின்னர் 1912-ஆம் ஆண்டில், நம், 'பானகல் அரசர்' இந்திய அரசாங்க சபையில் ஜமீன்தார்களின் பிரதிநிதியானார். அக்காலத்தில், தாதாபாய்நௌரோஜி, சில வகுப்பாரால் ஒடுக்கப்பட்ட மக்களின் துன்பங்களைப்போக்க முன்வந்து அதற்கான முயற்சிகளைச்செய்தார். நம், 'பானகல் அரசர்' "இன்ப துன்பங்கள் எல்லோர்க்கும் சமமே" என்ற உண்மையை உணர்ந்தவராதலின், தாதாபாய்நௌரோஜியின் நன்முயற்சிக்குப் பெரிதும் உதவிசெய்தார். நம் மனிதர்கள் பலவகைகளிலும் குறைவுபட்டிருப்பதைக்கண்டு மனம்பொறாது அவர்களை முன்னேற்றக்கருதிச் சில பெரியாரால் சென்னையில் அமைக்கப்பட்ட, திராவிட சங்கத்திற்குத் தலைவராயிருந்து, அவ்வகையில் மிக்க உழைப்பெடுத்துவந்தார். முதலாவதாகக் கூடிய, நம்மக்கள் மகா நாட்டிலும் தலைமை வகித்து, அவர்கள் நலமடைவதற்குரிய மார்க்கங்களைத் தமது பேருரையில் விளக்கமாக எடுத்துக்கூறினார். இவர் இந்தமுயற்சியில் ஈடுபட்டிருந்தபோதிலும் மற்றெந்த வகுப்பாரையும்இகழ்ந்துரைத்ததில்லை; மற்றையர்க்குத் துன்பஞ்செய்ததுமில்லை. இவருடைய இப்பெருங்குணத்தைப்பற்றி நம் நாட்டின்பெரியார் பலர், இவர் இறந்தபோது மிகப்பாராட்டிப் பத்திரிகைகளில் எழுதினார்கள்.

இன்னும், இவர், திராவிட மக்களின் பிரதிநிதியாக இங்கிலாந்துக்குச் சென்று, அரசியலில் சில சீர்திருத்தங்கள் ஏற்

படும்படி செய்தார். டாக்டர். நாயர் இறந்தபிறகு அவருடைய ஜஸ்டிஸ்கக்ஷிக்குத் தாமே தலைவராகித் திராவிட மக்களைப் பலவகைகளிலும் முன்அணியில் நிற்கச்செய்தார்.

இன்னும்இவர், நம்நாட்டு அரசாங்கசபையில் பிரதம மந்திரி ஸ்தானத்தையும் வகித்தார். அம் மந்திரிபதவியிலிருந்த காலத்தில் நம் நாட்டுமக்களுக்குச்செய்த நன்மையான வேலைகள் பல; இவர், அரசியலில்கொண்டுவந்த சீர்திருத்தங்களும், செய்த அரும்பெருஞ் செயல்களும் எவராலும் புகழத் தக்கன. பெரிய உத்தியோகங்களில் இந்தியருக்கு இடங் கிடைக்காதிருந்ததைப்பற்றி இவர், அரசாங்கத்தாரோடு வாதாடி அவ்வுத்தியோகபதவிகளை இந்தியர் பெறும்படி செய்தார். பெண்களுக்கும் பேருரிமைகளைக் கொடுத்தால்மாத்திரந் தான் நம்நாடு முன்னேற்றமடையுமென்பதைக்கருதி முதன் முதலாக ஒருபெண்மணியைச் சென்னை நகர பரிபாலனசபையில் அங்கத்தினராக நியமித்தார். தர்மஸ்தாபனங்கள் — அற நிலையங்கள் — அழிந்துபோகாதிருக்கும்படி, "தர்மஸ்தாபன பாதுகாப்புச்சட்டத்தை" ஏற்படுத்தினர். இந்திய மருத்துவ முறை கெடாதிருக்கும்படி, 'இந்தியமருத்துவசாலை'யையும் சென்னையில் ஏற்படுத்தினர்.

இவர், இவ்வாறு செய்துவந்த சீர்திருத்தங்களைக்கொண்டும், வேலைகளைக்கொண்டும் அரசியல்முறைகளில் மிக வல்லமைபெற்றவர் என்பதும், தருமகுணசீலரென்பதும், பொது நலப்பிரியர் என்பதும், எதிலும் ஊக்கத்தைவிடாமல் உழைக்கும் அஞ்சாநெஞ்சம் படைத்தவரென்பதும் நன்குவிளங்கும். இவையின்றி இன்னும் எல்லோரும் கொண்டாடத்தக்க அரிய

குணமொன்று இவரிடத்தில் அமைந்திருந்தது. அதாவது இவர் ஆடம்பரமற்ற வாழ்க்கையைக் கொண்டிருந்ததாகும்; இவர், இவ்வளவு உன்னதநிலையிலிருந்தும் இடம்பமான உடைகளையோ, அணிகளையோ அணிந்ததில்லை; உயர்ந்த அனுபவங்களைக்கொண்டதில்லை; பிறர்மதிக்க அலங்கரித்துக் கொண்டு ஆடம்பரமாக வெளிவருவதில்லை. எல்லாவிதங்களி லும் சாதாரண ஜனங்களைப்போலவே விளங்கிவந்தார். ஏழை களையும், பணக்காரர்களையும்சமத்துவமாகவேபாவித்துவந்தார். தமக்குத்தெரிந்த ஏழைகள்வீடுகளுக்கும் சுப அசுப காரிய ங்கள் நடக்குங்காலங்களில் போய்வருவார்.

இன்னும் இவர், தொழிலாளர்மீது மிகவும் அன்பு செலுத்திவந்தார். சென்னை அரசாங்கத்தார், தொழிலாளர் தலைவர்களைத் தேசத்தைவிட்டு அப்புறப்படுத்த எண்ணிய ஒருகாலத்தில், இவர், அவ்வரசாங்கத்தாரிடம், அவ்வாறு அவர்களை அப்புறப்படுத்துதல் கூடாதென்றும், அப்புறப் படுத்தினல், உடனேதாம், முதல் மந்திரி பதவியை விட்டுவிடு வதாகவும் கூறினர். இவர்விரும்பியபடியே அரசாங்கத்தார் அவர்களுக்கு எவ்விததுன்பமும் செய்யாதிருந்தனர்.

இன்னும், பானகல் அரசருக்கு இந்துமதத்தில் மிகுதி யும் பற்றுண்டு. ஆனல் இவர் ஜாதிவேற்றுமையைப் பாராட்டு வதில்லை; இந்துமதத்தின் முக்கிய கொள்கையைமட்டும் பாராட்டிவந்தார். கடைசிக்காலம்வரைக்கும் வைதீக இந்து மதத்தினராகவே யிருந்துவந்தார்.

இவ்வாறு நம்நாட்டில் அன்பும், ஈகையும், பரோபகார மும் பொருந்திப் பொதுவாக் நாட்டிற்கும், சிறப்பாகத் தாழ்த்

தப்பட்ட மக்களுக்கும் பெரிதும் உழைத்துவந்த புண்ணிய சீலராகிய நம், 'பானகல் அரசர்' நம் நாடுசெய்த தவக்குறைவால் இவ்வுலகில் நெடுங்காலம் நிலைத்திராமல், அந்தோ! 1928-ஆம் ஆண்டு, டிசம்பர்மாதம்,17-ஆம் தேதி திங்கட்கிழமைப் பிற்பகல் 1 மணிக்கு இத்தேசமக்கள் துயர்க்கடலில் மூழ்கச் சுரநோயால் பீடிக்கப்பட்டு விண்ணுலகடைந்தார். இவர் பிரிவால், நம்நாடு ஒருபெரிய நன்மையை இழந்துவிட்டதென்றே சொல்லலாம்.

---

## 12. மார்ட்டின்லூதர்

'மார்டின்லூதர்' என்பவர்; மனிதரை நல்வழிப்படுத்த உலகத்தில்தோன்றிய பெரியார்களில் ஒருவர். இவர், ஜர்மனி தேசத்தின் தெற்குப்பகுதியில் உள்ள ஒருகிராமத்தில், சுரங்க வேலைசெய்துகொண்டிருந்த, 'ஹான்ஸ்' என்னும் ஒரு குடித்தனக்காரருக்கு, 1483-ஆம் ஆண்டில் புத்திரராகப்பிறந்தார்.

இவருடைய தகப்பனர், சோம்பலின்றி வேலை செய்து பொருள்தேடித் தம் குடும்பவாழ்க்கையைச் செட்டாக நடத்தக்கூடியவர்; கடவுள் பக்தி நிறைந்தவர். அவர் தம்முடைய புத்திரராகிய மார்ட்டின்லூதரை அன்புடன் வளர்த்துவந்தார். அப்படி வளர்த்துவருங்காலத்தில், தம் புத்திரர், பிற்காலத்தில் ஒரு வக்கீலாக வரவேண்டுமென்ற விருப்பத்தை மனதிற்கொண்டார். அவ்விருப்பத்தால் இவருக்கு நல்லகல்வித்தேர்ச்சியுண்டாகும்படி செய்யவேண்டுமென்று கருதி இவரை ஆரம்பத்தில் ஒரு கிராமப்பள்ளிக்கூடத்திற்கனுப்பினர்.

மார்ட்டின்லூதரும், தகப்பனுர் விருப்பப்படி அதிக அக்கரையுடன்கல்விகற்றுவந்தார். ஆரம்பத்திலேயே கல்வியில் நற்பெயரெடுத்தார். ஆரம்பக்கல்விகற்றபின், இவர் தகப்பனுர், இவரை, அந்தக்கிராமத்திற் கருகிலிருந்த பட்டணத்திலுள்ள பள்ளிக்கூடத்திற் கொண்டுபோய்ச்சேர்த்தார். இவர் ஏழைப் பையனுயிருந்தபடியால், அந்தப்பள்ளிக்கூடத்து அதிகாரிகள், சம்பளமின்றி இலவசக்கல்வி கற்றுக்கொள்ளுமாறு இவருக் குதவிபுரிந்தனர். மார்ட்டின்லூதர் அப்பள்ளிக்கூடத்திலும் சுறுசுறுப்புடன் கல்விகற்றுவந்தார். அதனேடு இவருக்குச் சங்கீதத்திலும் நல்ல ஞானமிருந்தது; சுகமான சாரீரமும் ஏற்பட்டிருந்தது; இவர்இனிமையாகப் பாடுவதில் நல்லதேர்ச்சி பெற்றிருந்தார்; இவருடைய பாட்டின் இனிமையைக் கேட்டுப் பள்ளிக்கூடத்து அதிகாரிகள் சந்தோஷித்து, வீடுகள்தோறும் சென்று சங்கீதம்பாடிப் பொருள்தேடிக் கொள்ளும்படி இவருக்கு அனுமதியளித்தார்கள். இவர், அவ்வாறே பள்ளிக்கூடத்துக்குச்செல்லும் நேரங்கள் தவிர மற்ற நேரங்களில் வீடுகள்தோறும் சென்று இனிமையான பாட்டுக்களைப்பாடி, அவற்றைக்கேட்டு மகிழ்ச்சியடையும் மனிதர் கொடுக்கும் பொருளைவாங்கிச் சேர்த்துவரும் வழக் கத்தை மேற்கொண்டிருந்தார்.

இப்படி மார்ட்டின்லூதர், கல்விகற்றுக்கொண்டு சங்கீதத் தால் பொருள்தேடிவருங்காலத்தில், ஒருநாள் தெருவில் பாடிக்கொண்டுவரும்போது, ஒரு வீட்டிலிருந்த, கௌரவ மும், கருணையும் நிறைந்த பெண்மணியொருத்தி, இவருடைய அழகிய வதனத்தையும், நல்லொழுக்கத்தையும்கண்டு இவர் மீதிரக்கங்கொண்டு, இவரைத் தன்வீட்டிலேயே இருக்கும்படி செய்து இவருக்கு வேண்டிய உதவிகளைப்புரிந்துவந்தாள்.

அவளுடைய ஆதரணையில் இவர் கல்வி கற்றுக்கொண்டிருந்தார். இந்தவிதமான வாழ்க்கையில் மூன்றுவருடங்கள் கழிந்தன. பிறகு, இவர், சர்வகலாசாலை மாணவரானார். 1505-ஆம் ஆண்டில் எம். ஏ. பட்டம்பெற்றார். அப்போது இவரைப் பலரும் கொண்டாடினர். அவ்வாறு தம்மைப் பலரும் கொண்டாடுவதைக்கண்டு மார்ட்டின்லூதர் பெரிதும் மகிழ்ச்சியடைந்தார்.

இவ்வாறு இவர், கல்வியில்தேறி மகிழ்ச்சியடைந்தாலும் இவருக்கு உலகசுகங்களில் விருப்பம் ஏற்படவில்லை. உலக வாழ்க்கை நிலையற்றதென்பதை இவர் உணர்ந்தார். அதனால், தம்மைப்பெற்றோரும், மற்றோரும் அதிசயிக்கும்படி, மடத்திலிருந்து மனிதர்க்கு நல்லுபதேசம்செய்யும் துறவியானார். அப்படிச் சன்னியாசி ஆசிரமத்தை அடைந்தபின்பு, கற்கள் பரப்பப்பட்ட ஒருசிறிய அறையிலிருந்து, முழந்தாள்நிலத்திற்படிய மண்டியிட்டுக் கடவுளைத் தொழுவதிலேயே நாட்களைக் கழித்துவந்தார்.

இப்படியிருக்குங்காலத்தில், இவர் தங்கிய நகரத்தில் 'பிளேக்' என்னும் தொற்றுவியாதி பரவி, மனிதரிற் பலரை வதைத்துக்கொண்டிருந்தது. அக்காலத்தில் இவர், பொது ஜனங்கள்மீது இரக்கங்கொண்டு தனியாக வெளியேறி அவ்வியாதியால் பீடிக்கப்பட்டு உதவியற்றுக்கிடந்து வருந்திய ஏழை மக்களுக்கு வைத்தியம் முதலிய பரிகாரங்களைச் செய்து, தக்க உதவிகளைப்புரிந்து வந்தார்.

பிறகு, 1508-ஆம் ஆண்டில், மார்ட்டின்லூதர் 'எல்ப்' நதிக்கரையிலுள்ள, 'விட்டன்பர்க்' என்ற நகரை அடைந்தார்.

அங்குபோய்ச்சேர்ந்தபின், அவ்விடத்திலுள்ளகோவிலில், மனிதர்க்கு நல்ல ஞானமுண்டாகும்படி அருமையான பிரசங்கங்களைச் செய்துவந்தார். இவருடைய பிரசங்கத்தைக்கேட்பதற்கு அங்குள்ளஜனங்கள் திரள்திரளாக வந்துகூடிக்கொண்டிருந்தார்கள். இவருடைய பிரசங்கத்தைக்கேட்டும், கொள்கைகளையுணர்ந்தும் இவரைப்பலவிதமாகக் கொண்டாடி வந்தார்கள்.

சிலநாட்கள் சென்றபின்னர், அங்குள்ள பெரியோர்களால் ஒருமுக்கியமான காரியத்தின்பொருட்டு இவர், 'ரோம்' என்ற தேசத்திற்கனுப்பப்பட்டார். அத்தேசத்தில், 'ரோமாபுரி' சிறந்தநகரம்; இது ஆதி கிறிஸ்துமதத்திற்கு முக்கிய ஸ்தானம். ஆதலால், கிறிஸ்தவர்கள் இதைத் தெய்வத்தன்மைபொருந்திய நகரமென அக்காலத்தில் கொண்டாடிவந்தனர். கிறிஸ்தவர்களுக்குத் தலைமைபெற்ற, 'போப்' என்பவர் இங்கேதான் இருந்தார். இப்பொழுதும் ரோமாபுரி, கிறிஸ்தவர்களால் முக்கிய ஸ்தலமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. இங்கே அக்காலத்தில் பரவியிருந்ததும், இப்போதும் விருத்தியாகி வருவதும், 'ரோமன் கத்தோலிக்' மதமாகும். மார்ட்டின் லூதரும் அந்த மதத்தை விரும்பியிருந்தார். ஆனல் இவருடையகொள்கைக்கும், அம்மதத்திலிருந்த மற்றவர்களுடைய கொள்கைக்கும் வித்தியாசங்கள் ஏற்பட்டிருந்தன. சுமார் 450 வருடங்களுக்கு முன், ஐரோப்பாகண்டம் அறியாமை என்னும் அந்தகாரக்கடலில் மூழ்கிக்கிடந்தது. அக்கண்டத்து மனிதரின் மனம் முரட்டுத்தனமான காரியங்களிலும், மூடப்பழக்கவழக்கங்களிலுமே சென்றுகொண்டிருந்தது. கிறிஸ்துமதமும் மிகக்கேவலமான நிலைமையிலிருந்துவந்தது. அதில்

பயனற்ற பலகொள்கைகளும், வீண்விவகாரங்களும், கர்நாடக பழக்கவழக்கங்களும் நிறைந்துகிடந்தன. 1450-ஆம் ஆண்டிற்குப்பிறகு ஐரோப்பாகண்டம் சிறிதுசிறிதாகச் சீர்திருத்தமடைந்து வரத்தலைப்பட்டது. அங்கே கல்வியும், நாகரீகமும் விருத்தியடையத் தொடங்கின; அக்கண்டத்து மனிதர் அறிவிலும், ஆராய்ச்சியிலும் மேம்பட்டுப் புதியபுதிய தத்துவங்களைக் கண்டுபிடிக்க ஆரம்பித்தனர்; கிரிஸ்துமதம் முதலிய மதக்கொள்கைகளிலும் நூதன அபிப்பிராயங்கள் தோன்றின; மனிதருக்குள் அபிப்பிராயபேதங்களுண்டாய்ப் பல புதிய கிளர்ச்சிகளுமுண்டாயின. புதிய கிளர்ச்சிக்காரர்கள், பழைய கொள்கைகளில் பயனற்ற கொள்கைகளைத் தள்ளிப் பயனுடைய புதுக்கொள்கைகளை ஸ்தாபிக்கமுயன்றனர். அவர்களில் முதன்மை பெற்றவர், மார்ட்டின் லூதர். ஆதலின், இவர் ரோமாபுரிக்குச் சென்றதும், அங்குள்ள மதக்கொள்கைகளை ஆராய்ந்து பார்த்தார். அங்கே பழைய கொள்கைகள் பரவிக்கிடந்தன. அவற்றில் பாவச்செயல்கள் பல காணப்பட்டன. மார்ட்டின் லூதர் அவற்றைக்கண்டு மனம்பொறுது தம்முடைய ஊருக்குத்திரும்பி வந்துவிட்டனர்.

அவ்வாறு திரும்பிவந்தபின், லூதர், ஒரு கலாசாலை ஆசிரியரானார். அங்ஙனம் ஆசிரியரானபின்பு இவருடைய போதனையைக் கேட்டுக்கொள்வதற்கு அநேகம் மாணவர்கள் அக்கலாசாலையில் வந்து நிறைந்துகொண்டிருந்தார்கள்.

இப்படியிருக்கும்போது, ரோமாபுரியிலிருக்கும், 'செயின்பீட்டர்ஸ்' கோவிலைப் புதிப்பிப்பதற்குச் சில கிரிஸ்து மதஅபிமானிகளால் பொதுஜனங்களிடத்தில் பணம் வசூலிக்கப்பட்டது. அப்படிப்பணம் வசூலிப்பதற்கு, 'பணம்

கொடுப்பவர்களுக்குப் பாவவிமோசனமாகும்' என்றபோதனை யும் பேதைமக்களிடத்தில் சொல்லப்பட்டுவந்தது. மார்ட்டின் லூதர், இச்செயல்களையுணர்ந்து, மனவருத்தமுற்று இவற்றிற்குக் கண்டனப் பத்திரமொன்றெழுதி அதைக் கோவிலின் கதவில் பதிப்பித்துவைத்தார். பொதுஜனங்கள் எல்லோரும் அக்கண்டனத்தை வாசித்துணர்ந்தனர். பின்னர், லூதரால் அக்கண்டனம் அச்சிடப்பட்டு எங்கும் பிரசுரம் செய்யப்பட்டது.

லூதர், இவ்வாறு கண்டனமெழுதினபோதிலும், ரோமான்கத்தோலிக் மதத்தை வெறுத்து விட்டுவிடவில்லை. அதில்இருக்கவே விருப்பங்கொண்டிருந்தார். அம்மதத்தி லிருந்த மேற்கூறியவைபோன்ற ஒழுங்கீனமானகொள்கைகள் மாத்திரம் இவருக்குப்பிடிக்காமலிருந்தன. அதனால், இவரு ருடைய கொள்கைக்கும், ரோமான்கத்தோலிக் மதத்திலிருந்த மற்றவர்களுடைய கொள்கைக்கும் வித்தியாசமேற்பட்டிருந் தது. ஆதலின், இவருக்கும், அவர்களுக்கும், தங்கள்தங்கள் கொள்கைகளைப்பற்றி வாக்குவாதங்கள் நடந்துகொண் டிருந்தன. கட்சிபேதங்கள் அதிகரித்துக்கொண்டேவந்தன. சிலர், இவருடைய கொள்கைகளைக் கண்டித்துப்பேசி அவற்றை விட்டுவிடவேண்டுமென்று இவரிடம் கூறினர்கள். அப்பொழுது இவர், மிகவும் ஆத்திரங்கொண்டு, "என் னுடைய கொள்கைகள் குற்றமுடையவையல்ல; நீங்கள் சரி யான காரணங்களோடு இவை குற்றமுள்ளவையென்று காட்டினல்மாத்திரமே நான் அவற்றைவிடுவேன்" என்று உறுதியாகக்கூறிவிட்டார்.

கடைசியாக மார்ட்டின்லூதருடைய பிடிவாதத்தை, ரோமாபுரியிலிருந்த, 'போப்' உணர்ந்து இவருடைய கொள்கைகளைக்கண்டித்து, "நீர் உம்முடைய புதுக்கொள்கைகளை விட்டுவிடவேண்டும்" என்று இவருக்குக்கண்டிப்பான உத்தரவனுப்பியிருந்தார். அவ்வுத்தரவை, லூதர், சிறிதும் சட்டைபண்ணவேயில்லை.

பிறகு, 1521-ஆம் வருடத்தில், கிரிஸ்தவ ராஜ்ஜியங்களுக்குச் சக்கரவர்த்தியாயிருந்த 'ஐந்தாம் சார்ல்ஸ்' என்பவனுக்கு இந்தச் சமாச்சாரம் எட்டிற்று. அவன், 'ரையின்' நதிக்கரையிலுள்ள, 'வொர்ம்ஸ்' என்னுமிடத்தில் ஒரு சபை கூட்டி அதன்மூலம் லூதருடைய குற்றத்தை விசாரிப்பதற்காக இவரை வரவழைத்தான்.

இவர், அங்குச்சென்றவுடன், அச்சக்கரவர்த்தி இவரை விசாரித்து இவருடைய கொள்கைகளை விட்டுவிடும்படி வற்புறுத்தினன். இவர், அம்மன்னனுக்குச் சிறிதும் அஞ்சாமல், "நான் கொண்டகொள்கைகளை என் மனச்சாட்சிக்கு விரோதமாக எக்காலத்திலும் விடமாட்டேன்" என்று வெகு தைரியமாகப்பதிலுரைத்தார்.

இவருடைய பிடிவாதத்தைக்கண்டு சக்கரவர்த்தி மிகுந்த கோபங்கொண்டான்; அச்சக்கரவர்த்தியால் மார்ட்டின்லூதர், குற்றவாளியெனத் தீர்மானிக்கப்பட்டார். அவ்வாறு சக்கரவர்த்தி தீர்மானித்தாலும், தான் அந்த, 'வொர்ம்ஸ்' சபையிலிருந்து புறப்பட்டு, 'விட்டன்பர்க்' செல்லும்வரையில் இவருக்கு எவ்வித தீங்கும் செய்யலாகாது என்று அங்கிருந்த அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டுவிட்டுப் போய்விட்டான்.

அதனால் அங்கிருந்தவர்கள், சக்கரவர்த்தி, குறிப்பிட்டவிடம் போய்ச்சேரும்வரையில் இவருக்கு எவ்வித இடையூறுமியற்ற முடியவில்லை.

அத்தருணத்தில், ஜர்மனியிலிருந்த ஒரு சிற்றரசன், மார்ட்டின்லூதருக்கு உதவிபுரிந்து, இடையூறுநேராமல் இவரை அழைத்துக்கொண்டு போய்விட்டான். பின்னர், இவர், 'விட்பர்க்' என்ற கோட்டையில் கொஞ்சக்காலம் தங்கியிருந்து, லத்தீன்பாஷையிலிருந்த, 'பைபிளை' ஜெர்மன் பாஷையில் மொழி பெயர்த்தார்.

இவர், ஐந்தாம் சார்ல்ஸ் சக்கரவர்த்தியால் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டபிறகு 25 வருடங்கள் உலகத்திலிருந்து தம்முடைய கொள்கைகளை விடாமல் பரப்பிவந்தார். இவருடைய கொள்கைகளிலும் பலர் சேர்ந்தனர். இவர் கொள்கைகளைப்பற்றிய கிளர்ச்சிகள் பலகிளம்பின. இவருடைய கட்சிக்கு விரோதமானவர்கள் முதலில், இவரைச் சார்ந்த கட்சியாருக்குப் பல கொடுமைகளை இயற்றிவந்தார்கள். எனினும், இவருடைய கட்சிக்காரர்கள் தங்கள் கொள்கைகளை விடாமலே பரப்பிவந்தார்கள். அதனால் ஆதி கிரிஸ்தவ மதத்திலிருந்து பிரிவுஏற்பட அடிப்படை தொடங்கிவிட்டது. அதிலிருந்து, 'புராடஸ்டெண்ட்' என்னும் சீர்திருத்தமுள்ள புதிய கிரிஸ்தவமதமொன்று ஏற்பட்டு எங்கும் பரவலாயிற்று.

அங்ஙனம் பரவ ஆரம்பிக்கவே, ஜர்மனியில் பெரும்பாகமும், டென்மார்க், ஸ்வீடன் ஆகியதேசங்களும் அக்காலத்திலேயே ரோமன்கத்தோலிக் மதத்தைவிட்டுப் புதிய

W49795

மதமாகிய, புராடஸ்டென்ட் மதத்தைத் தழுவிவிட்டன. பிறகு,
பிரான்ஸ்தேசத்திலும், இங்கிலாந்திலும் புதுமதம்புகுந்துபரவி
விட்டது. இப்பொழுது உலகமெங்கும் அப்புதிய சீர்திருத்த
மதம் பரவியிருக்கின்றது. 'புராடஸ்டென்ட்' என்ற புதிய சீர்
திருத்தக் கிறிஸ்தவமதம் ஏற்பட்டு உலகிற் பரவ மூலபுருஷரா
யிருந்தவர், மகாபுத்திமானாகிய மார்ட்டின்லூதரே.

---

## 13. தாயுமானவர்

தமிழ்நாட்டில் ஞானத்திற்சிறந்த பற்பலமகான்கள்
தோன்றியிருக்கின்றார்கள். அவர்களுள் தாயுமானவரும் ஒரு
வர். ஆதலின், இவருடையசரித்திரத்தை மாணவர் உணர்ந்து
கொள்வது நல்லதாகும்; பெரியார் சரித்திரங்களைத் தெரிந்து
கொள்வதால் அறிவு வளர்ச்சியடையும்.

மூன்றுதமிழ்நாடுகளில் நீர்வளத்தாலும், நிலவளத்தா
லும் மிகச்சிறப்புற்ற சோழநாட்டைச்சார்ந்த, 'திருமறைக்
காடு' என்னும் வேதாரணியத்தில் சுமார் முந்நூறு ஆண்டு
கட்குமுன்பு, அதாவது, பதினாறாவதுநூற்றாண்டில் சைவ
வேளாளர்குலத்தில், 'கேடிலியப்பபிள்ளை' என்னும் பெரி
யார் ஒருவர்இருந்தார். அவர், வேதாரணியத்திலுள்ள சிவன்
கோவிலில் மேல் விசாரணைஉத்தியோகம் பார்த்துவந்தார்.
அவருக்கு, 'சிவசிதம்பரம்பிள்ளை' என்னும் ஒருபுத்திரரிருந்
தார். அக்காலத்தில், கேடிலியப்பபிள்ளைக்கு 'வேதாரணியம்
பிள்ளை' என்ற தமையனார் ஒருவர் இருந்தார். அவருக்குப்
புத்திரபாக்கியம் இல்லாமலிருந்தது. அதனால் அவர் வருத்த

முற்றூர். அக்கவலையை நீக்கும்பொருட்டுக் கேடிலியப்ப பிள்ளை, அவருக்கு தம்புத்திரராகிய சிவசிதம்பரம்பிள்ளையைச் சுவீகாரமாகக்கொடுத்துவிட்டார்.

அக்காலத்தில், 'விஜயரகுநாதசொக்கலிங்கநாயக்கர்' என்பவர், திருச்சினப்பள்ளியை இராஜதானியாகக்கொண்டு அரசுசெலுத்திவந்தார். அவர், கேடிலியப்பபிள்ளையின் நற்குணநற்செயல்களைக் கேள்வியுற்று, அவரைவரவழைத்துத்தம்மிடம் பெரியகணக்குப்பிள்ளையாக வைத்துக்கொண்டார். கேடிலியப்பபிள்ளை அங்கிருந்துவருங்காலத்தில், அவர்மனைவி ஓர் ஆண்மகவை ஈன்றாள். அக்குழந்தைக்கு, கேடிலியப்ப பிள்ளை 'தாயுமானவர்' என்று பெயரிட்டார். இவரே நாம் முதலிற்கூறிய பெரியாராவர்.

இவரை கேடிலியப்பபிள்ளையும், அவர் மனைவியாரும் அன்புடன் வளர்த்துவந்தார்கள். இவர் செல்வத்துடன் வளர்ந்து இளம்பருவத்திலேயே கல்விகற்கத்தொடங்கி, தமிழ் வடமொழிமுதலியவற்றில் தேர்ச்சியடைந்து, பக்தி நூல்களையும், ஞானநூல்களையும் நன்றாகப்படித்துணர்ந்தார்.

இவ்வாறு தாயுமானவர் கல்வியிலும், ஞானத்திலும் தேர்ச்சியுற்றிருக்குங்காலத்தில், இவருடைய தந்தையாராகிய கேடிலியப்பபிள்ளை, இவ்வுலகவாழ்வைத்துறந்து விண்ணுலகடைந்தார். அச்சமயத்தில், தாயுமானவர், அவருக்குச் செய்ய வேண்டிய ஈமக்கடன்களை செய்துமுடித்தார்.

பிறகு, அரசராகிய விஜயரகுநாதசொக்கலிங்கநாயக்கர், தாயுமானவரின் கல்வித்தேர்ச்சியையும், அறிவு விசாலத்தையும்

உணர்ந்து, இவருடைய பிதாவாகிய கேடிலியப்பபிள்ளை பார்த்துவந்த உத்தியோகத்தை ஏற்றுக்கொள்ளுமாறு இவரை வேண்டினர். தாயுமானவர் நாயக்கரின் விருப்பத்திற்கிசைந்து அவ்வேலையை ஒப்புக்கொண்டு, தந்தையாரினும் சாமர்த்திய முடையவராய்ப் பார்த்துவந்தார்.

அக்காலத்தில் தருமபுரஆதீனத்தைச்சார்ந்த 'மௌன குருதேசிகர்' என்னும் யோகியொருவர் பல தலங்களுக்கும் சென்று, திருசிரபுரத்தை யடைந்து, அங்குள்ள, சாரமாமுனி மடத்தில் தங்கியிருந்தார். தாயுமானவர், அப்பெரியாரைக் கண்டு வணங்கி நின்றார்; அப்பெரியார் தாயுமானவருக்கு ஞானோபதேசம் செய்தருளினர். அவ்வாறு உபதேசம்பெற்ற பிறகு தாயுமானவர், ஆத்மா கடைத்தேறும்படியான உண்மை மார்க்கத்தினையுணர்ந்து யோகசாதனை முதலியவற்றைச் செய்துவந்தார். உலகம் நிலையாமை, செல்வம் நிலையாமை, யாக்கை நிலையாமை, சமரசஞானம், ஜீவாத்ம பரமாத்ம இயற்கைகள், நிஷ்டை, உலகமாயையின். இயற்கைமுதலியவைகளைப் பற்றித் தமிழில் பலபதிகங்களும், தனிப்பாடல்களும் இயற்றினர். உண்மை ஞானத்தை உலகத்தார்க்கு விளக்கிக்காட்டினர். இவர்பாடிய பாடல்களையெல்லாம், இவருடைய சிற்றன்னையின் குமாரரான, 'அருளையபிள்ளை' என்பவர் ஆங்காங்கே பாடிக்காட்டி எங்கும்பரவச்செய்தார்.

தாயுமானவர் உத்தியோகத்திலிருந்தபடியே மேற்கூறிய யோகசாதனைமுதலியவற்றைச் செய்துவந்தார். இவருடைய மகிமைத்திருச்செயல்கள், விஜயரகுநாதசொக்கலிங்கநாயக்கருக்குத் தெரிந்தன. அங்ஙனம் நாயக்கர் அவற்றையுணர்ந்தவுடன் அஞ்சித் தாயுமானவர்மீது மிக்க பக்தியுடையவராய்

வணங்கி "சுவாமி! இதுவரை நான் தங்களுடைய பெருமையை உணராமல் தங்களிடம் வேலைவாங்கிப் பெருங்குற்றம் செய்தவனானேன். இக்குற்றத்தைப் பொறுக்தருளவேண்டும்; இனித் தாங்கள் உத்தியோகஞ்செய்வதை ஒழித்து யோகநிஷ்டையிலிருத்தல் வேண்டும்; தங்கட்குரியதிருப்பணிகளை அடியேன் செய்துவருவேன்; இவ்வாறுசெய்யத் திருவருள்புரிய வேண்டும்" என்று கெஞ்சிக்கேட்டுக்கொண்டார். தாயுமானவர், அரசர் விருப்பப்படியே, அரண்மனை வேலையைவிடுத்துப் பரமாத்மதிருப்பணியாகிய யோகசாதனையைச்செய்துவந்தார். விஜயரகுநாதசொக்கலிங்கநாயக்கர், தாயுமானவருடைய நிஷ்டைக்குவேண்டிய உதவிகளைச்செய்துகொண்டிருந்தார்.

இப்படியிருக்குங்காலத்தில், விஜயரகுநாதசொக்கலிங்க நாயக்கருக்கு ஆயுள்முடிந்துவிட்டபடியால், அவர் மரணமானர். அவருடைய அரசுரிமை அவர்மனைவியாரைச்சார்ந்தது. அவ்வாறாகவே அரசியல் காரியங்களை ஒழுங்குசெய்து நடத்தும்பொருட்டு அரசி, தாயுமானவரை மீண்டும் உத்தியோகத்தினைஏற்றுக்கொள்ளும்படி வேண்டினர். தாயுமானவர் அதை ஏற்றுக்கொள்ளத் தமக்குவிருப்பமில்லாமையால் அன்றிரவே ஸ்தலயாத்திரை செய்யத்துணிந்து, தம்வீட்டிலிருந்த அருளையபிள்ளையுடன் தென்றிசைநோக்கிப் புறப்பட்டுப் பத்துமைல்தூரத்துக்கப்பால் உள்ள நல்லூர்என்னும் கிராமத்தையடைந்து, தம்நிஷ்டைக்குரிய பொருளொன்றை மறந்து வீட்டில்வைத்து வந்துவிட்டபடியால் அதனை எடுத்துவருமாறு அருளையபிள்ளையைத் திருப்பியனுப்பிவிட்டு அங்கோரிடத்தில் தங்கியிருந்தார். அவ்வூரார் தாயுமானவருடைய உருவத்தைப்பார்த்து, 'இவர் ஒரு மகான்', என்று நினைத்து அவருக்குவேண்டிய உபசாரங்களைச்செய்தார்கள்.

அப்போது திருச்சியிலிருந்த மந்திரிமுதலானவர்கள் தாயுமானவரைக் காணாமையால், அவர்செய்தியை அரசியிடம் தெரிவித்தார்கள். அவ்வரசி, தாயுமானவரைத் தேடியழைத்துக் கொண்டுவரும்படி சிலரை அனுப்பினார். அவர்களில் ஒருவன், நல்லூரையடைந்து தாயுமானவரைக்கண்டு, அழைக்கச் சில தந்திரங்களைச்செய்து, தன்எண்ணம் பலிக்காமையால் அவரிடம்வணங்கித் தான்செய்தகுற்றத்திற்கு மன்னிப்புக் கேட்டுக்கொண்டு திரும்பிப்போய்விட்டான். பின்னர் திருச்சிக்குச்சென்ற அருளையபிள்ளை தேடிப்போன பொருளை எடுத்துக்கொண்டு தாயுமானவரிடம் திரும்பி வந்து சேர்ந்தார். அதன்மேல்தாயுமானவர், அவருடன்புறப்பட்டு, விராலிமலை திருக்கோகர்ணம்முதலிய ஸ்தலங்களைத்தரிசித்து முடிவில் இராமேசுவரத்தையடைந்து அங்கேதங்கியிருந்து சிலதெய்வ வணக்கச் செய்யுட்களைப்பாடினார்.

சிலதினங்கள் அங்கேதங்கியிருந்து மீண்டும் வடதிசை நோக்கிச்சென்று வேதாரணியத்தை அடைந்தார். அங்கு போய்ச்சேர்ந்தபின்னர், இவருடைய தாயாரும், தமையனாகிய சிவசிதம்பரம்பிள்ளையும் இவருக்கு மணம்செய்விக்க விரும்பி, அவ்விருப்பத்தை இவரிடம்தெரிவித்தார்கள். இவருக்கதுசம்மதியில்லாததால், இவர், அதனைமறுத்தார். மறுத்தும் அவர்கள், "சந்ததி விருத்தியாகும்பொருட்டு மணஞ்செய்துகொள்ளத்தான்வேண்டும்" என்று இவரை வற்புறுத்தினார்கள். அதன்மேல் இவர் திருமணம்செய்துகொள்ள ஒருவாறு இசைந்தார். அவ்வாறு இசைந்தவுடன், இவருடைய அன்னையாரும், தமையனும் அழகினிலும், அறிவிலும், கற்பினிலும் சிறந்த, 'மட்டுவார்குழலம்மை' என்னும் ஓர் நற்

குலக்கன்னிகையை இவருக்குத் திருமணஞ்செய்து வைத்தார்கள். தாயுமானவர், அந்தமாதுசிரோமணியுடன் இல்லறம் நடத்திவந்தார்.

இப்படி வாழ்ந்துவருங்காலத்தில், தாயுமானவரின் தாயார் விண்ணுலகடைந்தனர். தாயுமானவர் அவருக்குச்செய்ய வேண்டிய ஈமக்கிரிகைகளைச் செய்துமுடித்தார். பின்னர்த் தாயுமானவருக்கு ஓர்ஆண்மகவுபிறந்தது. அதற்குத்தாயுமானவர், 'கனகசபாபதி' என்னும்பெயரிட்டு அக்குழந்தையை அன்புடன்வளர்த்துவந்தார். அப்படி வளர்த்துவருங்காலத்தில் தாயுமானவரின் மனைவியாருமிறந்தனர். பின்னர்த்தாயுமானவர், தம்புத்திரரைக் கல்வியில்தேர்ச்சியடையச்செய்து தம்தமையனாராகிய சிவசிதம்பரம்பிள்ளையிடம் ஒப்புவித்துவிட்டு, உலகவாழ்க்கையில்வெறுப்புற்றுத் துறவுபூண்டு, தம் சிற்றன்னையின் புத்திரராகிய அருளையபிள்ளையுடன் வெளியேறித் தேசசஞ்சாரம்செய்து திரும்பிவந்து திரிசிரபுரத்தையடைந்து, தம்குருவைக்கண்டு வணங்கிச் சிலபாடல்களைப் பாடி அவரைத்துதித்துக்கொண்டு அங்கே சிலதினங்கள் இருந்தார். அப்போது இவருடையகுருவாகிய மௌனகுரு சுவாமி இவ்வுலகைவிட்டுநீங்கினார். பின்னர்த் தாயுமானவரே அவருடையமடத்துக்குத் தலைவராயிருந்தார். அப்படிக் கொஞ்சக்காலமிருந்துவிட்டுப் பிறகு தென்றிசை நோக்கிப் புறப்பட்டு காசி, காஞ்சிபுரம், சிதம்பரம், திருவாரூர், மதுரை முதலிய இடங்களுக்குச்சென்று, முடிவில் இராமேசுவரத்தையடைந்து அங்கேதங்கியிருந்தார். இவருடைய மகிமையை உணர்ந்து அங்குள்ளபலர் இவருக்குத் தொண்டுபுரிந்து வந்தார்கள்.

பிறகு, தாயுமானவர், இராமநாதபுரத்தை அடைந்து அதைச்சார்ந்த இலட்சுமிபுரமென்னும் ஊரில் ஒருநந்தவனத்தில் ஓர் மரத்தடியிலமர்ந்து பசிவந்தபோது அங்கிருந்த ஒரு வீட்டில் சோறுவாங்கி யுண்டுகொண்டு நிஷ்டையிலிருந்துவந்தார். அப்படியிருந்துவரும்போது ஒருசமயத்தில் பலதினங்களவரை நிஷ்டைகலையாமல் ஸ்தம்பித்து இருந்துவிட்டார். அங்கேயிருந்தசிலர், 'நிஷ்டை இப்படித்தான் இருக்கும்' என்பதை யுணராதவர்களாதலின், 'தாயுமானவர் இறந்துவிட்டார்' என்று அக்காலத்திலிருந்த இராமநாதபுரம் மன்னருக்குக்கூறினர்கள். அவ்வரசர், தாயுமானவருடைய இயற்கையை நன்கு விசாரித்துணராமல், உடனே இவரைத் தூக்கி நெருப்பிலிட்டு எரித்துவிடும்படி ஏவலாளருக்குக் கட்டளையிட்டார். அப்பொழுதே அவர்கள்சென்று இடுகாட்டில்சிதை(ஈமவிறகு)அடுக்கி அதில்தாயுமானவரைத்தூக்கி வைத்து நெருப்பிட்டுவிட்டார்கள். அச்சமயம் இவர் கூடச்சென்றிருந்த அருளையபிள்ளை அங்கில்லாமல் வேறெங்கோ சென்றிருந்தார். அதனாலேயே இத்தீச்செயல் நடந்துவிட்டது. நெருப்புமூண்டெரியவே தாயுமானவரின் உடம்பில் சிற்சிலபாகங்கள் வெந்துவிட்டன. உடம்பில்சூடுதாக்கவே, தாயுமானவர் நிஷ்டைகலைந்து விழித்தெழுந்தனர். அத்தருணத்தில் அருளையபிள்ளை நடந்ததையுணர்ந்து விரைந்தோடிவந்து புலம்பிக்கொண்டு தாயுமானவரைத்தூக்கப்போயினர்.

அப்போதுதாயுமானவர், நெருப்பினல் தமதுஉடம்பில் முக்கியமானபாகங்கள் வெந்துவிட்டபடியால் உயிர் நிலைக்காதென்பதையுணர்ந்து அருளையபிள்ளையைநோக்கி, "என் சரீரத்தில் பலமுக்கியபாகங்கள் நெருப்பால் சுடப்பட்டு

வெந்துபோயின; "ஆதலின் இனி இவ்வுடம்பில் உயிர் நில்லாது, என்பொருட்டு நீர் கவலைகொள்ளுதல் வேண்டாம்" என்று சொல்லி மீண்டும் நிஷ்டைகூடிவிட்டார்; இவருடைய உடம்பு எரிந்துபோயிற்று; இவருடைய ஆன்மா உயர்கதியிற்சேர்ந்தது. இவர் நிஷ்டைகூடியிருந்தவிடம் இப்பொழுதும் இராமநாதபுரத்தைச்சார்ந்த இலட்சுமிபுரத்தில் கோவிலாக விளங்கிக் கொண்டிருக்கின்றது.

இவர், சுமார் ஆயிரத்துக்குமேற்பட்ட பாடல்களைப் பாடியிருக்கின்றார்; அவை இன்னும் தமிழ்நாடெங்கும் நிலைபெற்றிருக்கின்றன. எல்லாமதக்காரர்களாலும் விருப்பத்தோடு பாடப்பட்டுவருகின்றன.

---

## 14. எறும்புகள்

இவ்வுலகத்தில் எண்ணிறந்த பலபிராணிகள் உற்பத்தியாகி எங்கும்நிறைந்திருக்கின்றன. அவற்றில் அதிசயிக்கக் கூடிய குணங்களையும், செயல்களையும்உடைய அநேகப்பிராணிகள்உண்டு. அந்த அற்புதஜந்துக்களில் எறும்பு மிகவும் சிறந்தது.

எறும்பு, உருவத்தில்மிகச்சிறியது; எனினும் அறிவிற் பெரியது. மனிதரிடத்திலும்இல்லாத உயர்ந்தஅறிவு இதனிடத்தில் இருக்கின்றது; அற்புதமானசெய்கைகளும்உண்டு. மனிதரும் நூதனமாகக் கற்றுக்கொள்ளத்தக்க அரியசெயல்கள் இதனிடத்தில்காணப்படுகின்றன. பிராணிவர்க்கங்களில் இதுதான் மிகச்சிறியதென்பது மனிதருடைய தீர்மானம்.

அதுபற்றியே "யானைமுதல் எறும்பீறாக" என்ற பழமொழி மனிதர் கூட்டத்தில் வழங்கிவருகின்றது. இவ்வாறு எறும்பை மிகச் சிறியபிராணியென்று மனிதர் தீர்மானித்திருப்பதனால் அவர்களுள் அநேகர் எறும்பின் உயர்ந்தசெய்கைகளை ஆராய்ந்து தெரிந்துகொள்ளாமலிருக்கிறார்கள். எறும்பின் இயற்கைகளை ஒவ்வொருவரும் அறிந்துகொள்வது நலம்.



எறுப்பில், ஆயிரக்கணக்கான வகைகள்உண்டு. இதைப் பற்றி ஆராய்ச்சிசெய்த அறிஞர், உலகமுழுவதிலும் ஆயிரத்துக்குமேற்பட்ட எறும்புவகைகள் உண்டென்றும், நம் இந்தியாவில்மட்டும் நூற்றுக்கணக்கான எறும்பினங்கள் இருக்கின்றனவென்றும் கூறுகின்றனர். சிலர் அறுநூறு வகை எறும்புகள் உண்டென்று சொல்கின்றனர்.

இந்தியாவிலுள்ள எறும்புக்கூட்டங்களில் முக்கியமானவைகள்: கட்டெறும்பு, சிற்றெறும்பு, செல் (கறையான்) எறும்பு, முயிற்றெறும்பு, சூகையெறும்பு, பேய்க்காலெறும்பு முதலியவைகளாம். இவற்றுள் ஆண் எறும்பு, பெண் எறும்பு, இராஜாஎறும்பு, இராணிஎறும்பு, பசுஎறும்பு, பயிரிடும்எறும்பு, காவலெறும்பு, குடைபிடித்துச்செல்லும் எறும்பு, அடிமைஎறும்பு, சண்டைஎறும்பு, துப்பறியும் எறும்பு, எனப்பல உட்பிரிவுகளுமிருக்கின்றன.

இன்னும் பற்பலதேசங்களில் பற்பலவகையான எறும்புகளிருக்கின்றன. ஆப்பிரிக்காவில் வெருட்டெறும்பு என ஒருவகை எறும்புண்டு.

கட்டெறும்புகள் சற்றுப்பெரியனவாய்க் கருமைநிறமுள்ளவைகளாயிருக்கும். இந்தக்கட்டெறும்புகளில் சிலவற்றிற்கு இறக்கைகளிருக்கும்.

சிற்றெறும்புகள் மிகச் சிறுவடிவமுள்ளவைகளாய்ச் சிவப்புநிறம் பெற்றிருக்கும்; சில பொன்னிறமாயுமிருக்கும். இவற்றுள் சற்றுப் பெரியஎறும்புகளுமுண்டு. அவை கரிய நிறமுள்ளவைகளாயிருக்கும்.

கறையான் எறும்புகள், வெள்ளையாயிருக்கும்; இவற்றில் பெரியனவும், சிறியனவும்உண்டு. பெரிய எறும்புக்குத் தலை பெரிதாயிருக்கும். அது பெருந்தலைக்கறையான் என்று சொல்லப்படும். இவற்றில் ஈசலெறும்பென ஒருவகையுண்டு. அதற்கு இறகுண்டு; அது அவ்வினத்தில் தாயெறும்பு.

முயிற்றெறும்பு பொன்னிறமுள்ளதாய்க் கட்டெறும்பினும் சற்றுச் சிறியதாயிருக்கும்.

சூகையெறும்பு, கட்டெறும்புபோல் நீண்ட உடல் பெற்றிருக்கும்; ஆனால் கட்டெறும்பைக்காட்டினும் சற்றுச் சிறிதாயிருக்கும். இதில் சிற்றெறும்பினும் சற்றுப்பெரிதாய்ச் சிவப்புநிறமுள்ள ஒருவகைச் சூகையெறும்புமுண்டு.

பேய்க்கால்எறும்பு முழுவதும் கறுப்புநிறமுள்ளதாய்ச் சிற்றெறும்பினும் மெல்லியஉடம்புள்ளதாயிருக்கும்; ஆனால் சற்றுநீண்டிருக்கும்; மெல்லியகால்களுடையன; வாய் உயர்ந்திருக்கும்; இதன் கால்கள் கண்ணுக்கு நன்றாகப் புலப்படாமல் தெரிந்தும், தெரியாமலுமிருக்கும்; அதனாலேயே இதற்குப் பேய்க்கால்எறும்புஎனப் பெயர் ஏற்பட்டது. இது மற்ற எறும்புகளைக்காட்டினும் வேகமாக ஓடும்.

ஆணெறும்புகள் சிறுத்திருக்கும்; பெண்ணெறும்புகள் பருத்திருக்கும்; இராஜா இராணிஎறும்புகள் மற்றவைகளைக் காட்டினும் பெரியவைகளாயிருக்கும்; மற்ற ஒவ்வொரு எறும்பும் ஒவ்வொருஇறகையுடையதாயிருக்கும்.

பொதுவாக எறும்புகளின்உடல் தலை, மார்பு, அடிவயிறு என மூன்றுபிரிவுகளையுடையது. தலையின் முன்பக்கத்தில் இரண்டுதும்பிகள் (அதாவது, மீசைகள்) உண்டு. அவற்றிற்குப் பின்னால் வட்டமாய்க் குவிந்தகண்கள் இருக்கும். சில எறும்புகளுக்கு இரண்டுகண்களும், சிலவற்றிற்கு மூன்று கண்களும், சிலவற்றிற்கு ஒரே கண்ணும் இருக்கும்; சில வகுப்பு எறும்புகளுக்குக் கண்ணேயிராது. எறும்பின்கண்கள் மிகவிசித்திரமானவை.

தலையில்உள்ள மீசைகளுக்கு ஸ்பரிசஞானம் உண்டு. எறும்புகளுக்கு இந்த மீசைகளே உணர்ச்சிக்கருவிகளாயிருக்

கின்றன. இவைகளே இரண்டுகைகளைப்போல உதவுகின்றன. எறும்புகள் அவற்றைக்கொண்டே எல்லாக்காரியங்களையும் உணர்ந்துகொள்ளுகின்றன. இரண்டெறும்புகள் சந்தித்த வுடனே தங்கள்மீசைகளை ஒன்றோடொன்றுபடியும்படி பொருத்திக்கொள்ளும்; அவை செய்யவேண்டியகாரியங் களையும், போகவேண்டியஇடங்களையும் அந்த மீசைகளின் அசைவினால் ஒன்றுக்கொன்று தெரிவித்துக்கொள்ளும்.

எறும்பின்தலை பெரிதாய் முக்கோணமாகப் பின்புறத்தில் அகன்றும், கீழ்புறத்தில் தட்டையாகவும் இருக்கும்; இத்தலை யின் கீழ்பக்கத்தில் வாய்இருக்கின்றது; வாயில், சுவை அறியும் நாவொன்றிருக்கின்றது; வாயின்கீழ் கெட்டியான தாடையிருக்கின்றது; வாயில் பற்களும்உண்டு; அவைமிகக் கெட்டியானவை. இந்தப்பற்களைக்கொண்டு எறும்புகள் அதிகக்கடினமான பொருள்களையும் தூளாக்கிவிடும்.

எறும்பின்சரீரம் இலேசாயிருக்கும்; இதன்நடுப்பாகம் கயிறுபோன்றிருக்கும்; இந்தக்கயிறுபோன்றபாகத்தில் சில எறும்புகளுக்கு ஒருமுடிச்சும், சிலவற்றிற்கு இரண்டுமுடிச்சு களும் இருக்கும்; இன்னும், எறும்பினது உடலின்நடுப்பாகம் ஒரு பெட்டகத்தைப்போலவுமிருக்கின்றது; அதற்குள் குடல் முதலிய ஜீரணக்கருவிகளும் அடங்கியிருக்கின்றன. மேற் கூறியபடி நடுப்பாகத்தில் இரண்டுமுடிச்சுகளுள்ள எறும்பு களுக்குவாயில்விஷமுள்ள கொடுக்குஉண்டு; அந்தக்கொடுக்கில் மிகவும்கூர்மையான ஈட்டிபோன்ற இரண்டுமுட்களும், நடுவில் ஒருசிறிய குழாயுமிருக்கும்; இந்தக்குழாயின் வழியாகத் தான் விஷம்இறங்கும். கொடுக்குள்ள எறும்புகள், தங் களுக்கு உபத்திரவஞ்செய்யும் மனிதரின் உடம்பிலோ, மற்ற பிராணிகளின் உடம்பிலோ, அந்தக்கொடுக்கில்உள்ள முட்

களால்குத்தும்; அவ்வாறுகுத்தியவிடத்தில், அம்முட்களுக்கு நடுவிலுள்ள குழாயின் வழியாக விஷம்இறங்கும்; அவ்விஷத்தினுல் எறும்புகள்கடித்தவிடத்தில் நோவுண்டாகும்; நடுப்பாகத்தில்.ஒருமுடிச்சுள்ள எறும்புகளுக்குக் கொடுக்குஇல்லை. எனினும், மீசைகளுக்குமத்தியில் முள்ளும், விஷக்குழாயும் உண்டு. அவை, மனிதர்உடம்பிலோ, மற்றபிராணிகளின் உடம்பிலோ கடிக்கும்போது மீசைகளினுல் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு முள்ளினுல் குத்தும்; அப்போது விஷக்குழாய்களிலிருந்து, குத்தியவிடத்தில் விஷம் பாய்ந்து வேதனையை உண்டாக்கும்.

இன்னும் எறும்பின்மார்பின் பின்பாகம் மூன்றுபிரிவுகளையுடையதாயிருக்கும்; ஒவ்வொரு பிரிவிலும் இரண்டு கால்கள்இருக்கும்; இவ்வாறு மூன்றுபிரிவிற்கும் இரண்டிரண்டாக ஆறுகால்களிருக்கும்; இந்தக்கால்கள்சிலவகுப்பு எறும்புகளுக்குக் குட்டையாயும், சிலவற்றிற்கு நீளமாயுமிருக்கும்; கால்களில் நகங்களும் உண்டு.

எறும்புகளுக்கு உடலின்பின்பாகம் முட்டைபோல் சற்று பெரிதாகவேயிருக்கும்.

இந்த எறும்பினங்கள் பெரும்பாலும் வெப்பமான தேசங்களில் எங்கும் கூட்டம் கூட்டமாக வசிக்கும். மேட்டுப்பாங்கான நிலங்களிலும், கற்பாறைகளின் அடிப்பாகங்களிலும், பட்ட மரங்களிலும், வேறு மரக்கிளைகளிலும், புற்றுக்களையும், கூடுகளையும் ஏற்படுத்திக்கொண்டு, அவற்றில் வாசம் பண்ணும். கட்டெறும்புகளில் சிலவகைகளும், சிற்றெறும்புகளும், பேயெறும்புகளில் சிலவகை எறும்புகளும், செல்

(கறையான்)' எறும்புகளும், ஈசல் எறும்புகளும் பூமியில் புற்றுக்களை உண்டாக்கியும், துவாரங்களைஏற்படுத்தியும் வாசஞ் செய்யும்; கட்டெறும்புகளிலும், பேயெறும்புகளிலும் பெரும் பான்மையான எறும்புகளும், மற்றவகைகளில் சிறுபான்மை யான எறும்புகளும், பட்டமரங்களிலும், பொந்துகளிலும் இருப்பிடங்களை ஏற்படுத்திக்கொண்டு வசிக்கும். முயிற் றெறும்புகள் இலுப்பை, மா முதலிய மரங்களில் இலைகளை வளைத்துச்சேர்த்துக் கூடுகட்டிக்கொண்டு அதில் வசிக்கும்.

பூமியில்உள்ள எறும்புப்புற்றுகள் சிறுசிறு குன்றுகளைப் போலவும், கோபுரங்களைப்போலவும் விளங்கும்; ஒரு நகரத் தில் அநேகம் வீதிகள் காணப்படுவதுபோல அந்தப்புற்றுக் களுக்குள் அநேக வீதிகள் அமைக்கப்பட்டிருக்கும்; எல்லா எறும்புகளும் ஒன்றாகச் சேர்ந்து உலவவும், பெண் எறும்புகள் முட்டையிட்டுக் குஞ்சுபொரிக்கவும், அவற்றைப்பாதுகாக்க கவும், விருந்தெறும்புகள் வந்தால் தங்கவும், தானியம்முதலிய உணவுப்பொருள்களைச் சேர்த்துவைப்பதற்கும் வெளியிடங் களும், தனித்தனி அறைகளும், பண்டசாலைகளும் இருக்கும்.

இப்பேர்ப்பட்ட புற்றுக்களிலும், மற்ற வாசஸ்தானங் களிலும் வசிக்கும்எறும்புகள் சந்ததிகளை உற்பத்திசெய்யும் விதம் மிக்கஆச்சரியமாயிருக்கும். இவைகள்முட்டையிட்டு அடைகாத்துக் குஞ்சுபொரிக்கும் இயற்கையுடையன.

ஒவ்வொருபுற்றிலும் சில இராஜா, இராணி எறும்புகள் உண்டு; இவற்றிற்குத்தலை முன்புறத்தில் குறுகியிருக்கும். இவற்றிற்கு முன்னிரண்டும் பின்னிரண்டுமாக நான்கு சிறகுகள் உண்டு. இவற்றிற்குத்தான் கண்களுமுண்டு.

இவை, ஒன்றின்மீதொன்று மிக்கஅன்புடையனவாயிருக்கும்; புற்றைவிட்டு வெளியேறமாட்டா. இராணிஎறும்புகளிடத்தில் மற்ற எல்லாஎறும்புகளுக்குமே அதிகஅன்புண்டு. முட்டையிடுவதுதான் இராணிஎறும்புகளுக்குரியவேலை.

இவற்றிற்குவேலைசெய்யும் அடிமைஎறும்புகள் அநேகம் உண்டு. இந்தஎறும்புகளுக்குத் தலை அகன்றிருக்கும்; இவற்றில் பெண்எறும்புகளுக்கு மாத்திரம் வாயில் மேற்கூறியபடி கொடுக்கும், முட்களும், விஷக்குழாயும் உண்டு. இந்த வேலைக்கார எறும்புகளுக்குக் கண்கள் இல்லை; கண்களுக்குப்பதிலாகத் தும்பி, அதாவது மீசைஒன்றிருக்கும்; அதுவே, இவற்றிற்கு வழிகாட்டுகின்றது; இந்தமீசைபோய்விட்டால் இவைஇறந்து போம். இந்தவேலைக்காரஎறும்புகள் இராஜா இராணி எறும்புகளுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்யும்.

இராணிஎறும்புகள் முட்டையிட்டவுடனே, வேலைக்கார எறும்புகள் அவைகளைத் தூக்கிக்கொண்டுபோய் அறைகளில் சேர்க்கும். இந்த முட்டைகள் மிகச்சிறியவைகளாயும், வெண்மைநிறமுள்ளவைகளாயுமிருக்கும். இவைகளின்மேல் அதிகக்குளிராவது, அதிகவெப்பமாவதுபட்டால் இவைகளுக்குச் சேதமுண்டாகும்; ஆதலால், வேலைக்கார எறும்புகள், வெப்பமும், குளிர்ச்சியும் சமமாயிருக்குமிடங்களிலேயே வைத்துக்காக்கும்.

இராணிஎறும்புகளிலிருந்து இந்த முட்டைகள் வெளிப்பட்ட சிலதினங்களுக்குப் பிறகு புழுக்களாகும்; அதன்மேல் அவைகள் ஒருமெல்லியசட்டையால் மூடப்பட்டுக் கூட்டுப் புழுக்களாகும். மேற்கூறியபுழுக்கள் சட்டையோடு கூடியிருப்

பதனாலேயே இவைகளுக்குக் கூட்டுப்புழுக்கள்என்றபெயர் ஏற்பட்டிருக்கிறது; இந்தப்போர்வை அடிக்கடி உரிந்து கொண்டேயிருக்கும்; இதுமுழுதும் நீங்கியபின் அப்புழுக்கள் பருத்து எறும்பின்உருவத்தைப்பெறும். எறும்புக்குஞ்சாகிய புழு,முட்டையிலிருந்துவெளிவர இரண்டுவாரங்கள்செல்லும்; அதுசரியான எறும்பின் உருவத்தைஅடைய இரண்டுமாதங் கள் செல்லும். எறும்புக்குஞ்சுகள் முட்டையிலிருந்து புழுக் களைப்போல் வெளிப்பட்டபின் சிலதினங்கள்வரை அசையவும் சக்தியில்லாமல் கிடக்கும்; வாயைத்திறப்பதைத்தவிர இவை களால் வேறுஎந்தத்தொழிலும் செய்தல்முடியாது. அடிமைஎறும்புகள் எப்பொழுதும்இவற்றின்பக்கத்திலிருந்து இவற்றிற்கு இரைகொடுத்துத் தங்கள்மீசைகளினால் இவற் றைத் துடைத்துக்கொண்டிருக்கும். அப்படியிருக்கும்போது அந்தப்புழுக்கள் சிலதினங்கள்சென்றபின் மேலே சட்டை உண்டானபிறகு ஆகாரத்தைநீக்கிச் சுழுத்தியில் (அதாவது மயக்கமான ஒருவித நித்திரையில்) இருக்கும். இந்நிலையிலும் அடிமையெறும்புகள் அவற்றைப் பாதுகாத்துவரும்; அவைக ளிருக்குமிடத்தில் குளிர்ச்சி அதிகரித்தாலும், தண்ணீர் பிரவேசிப்பதாயிருந்தாலும் அடிமையெறும்புகள் அவற்றைத் தூக்கிக்கொண்டுபோய்த் தண்ணீர்பிரவேசிக்காத இடத்திலும், சற்றுவெப்பமான இடத்திலும்சேர்க்கும்; இருக்குமிடங்களில் வெப்பம் அதிகரித்தால் அந்த அடிமைபெறும்புகள் அவற்றைக் குளிர்ச்சியானஇடங்களில் கொண்டுபோய்ச் சேர்க்கின்றன; சிலசமயங்களில் குளிர்ந்தகாற்றில் அவற்றைக்காட்டி இருக்கு மிடங்களில் கொண்டுபோய்ச் சேர்க்கின்றன. மழையினால் எறும்புக்குஞ்சுகளுக்கு அபாயம் நேருமென்பதுதெரிந்தால் அடிமையெறும்புகள் அவற்றைத்தூக்கிக்கொண்டு மேட்டுப்

பாங்கான இடங்களுக்குச்செல்லும்; இக்குறிப்பினல் மனிதர் மழைவருமென்பதை உணர்ந்துகொள்கிறார்கள்; இதனாலேயே "எறும்புகள் முட்டையைத்தூக்கிக்கொண்டு திட்டிலேறினல் மழைபெய்யும்" என்ற பழமொழி ஏற்பட்டிருக்கிறது.

மேற்கூறியபடி எறும்புக்குஞ்சுகளாகிய புழுக்கள் போர்வையால்மூடப்பட்டு உணவின்றி மயக்கநித்திரையிலிருந்து, அப்போர்வை நீங்கியபின்பு எறும்புருவத்தையடையும்; அப்பொழுது அவை பலமில்லாதவைகளாயிருக்கும்; அவற்றிற்கு அடிமையெறும்புகளே உணவளிக்கும்; சிலதினங்கள் சென்ற பிறகு அவ்வெறும்புக்குஞ்சுகள் தாமேமேலூர்ந்துசென்று இரை தேடிக்கொள்ளும்.

மேற்கூறியபடி முட்டையிடும் இராணிஎறும்புகளுக்கும், இராஜாஎறும்புகளுக்கும் சிறகுகள்எப்பொழுதுமிருப்பதில்லை. மழைகாலத்தில் இவை புற்றைவிட்டு வெளிப்படும்; அப்பொழுது இவற்றில் சிலவற்றை இதரபிராணிகள் பிடித்துத் தின்றுவிடும்; தப்பிப்பிழைத்த சில எறும்புகள் சிறகுகளை இழந்து மீண்டும் புற்றுக்குள்ளே நுழைந்து அடிமை எறும்புகளின் உதவியைக்கொண்டு சௌக்கியமடைந்து சந்ததி விருத்திசெய்யும்; கறையான்எறும்புகளில்உள்ள இராஜாராணி எறும்புகள்தாம் மழைகாலத்தில் மிகுதியாகவெளிப்படும்; இவைதான் ஈசல்என்று சொல்லப்படுகின்றன; இவற்றைச்சில மனிதரும் பிடித்துப் பச்சையாகவும், வறுத்தும், வறுத்த அவலரிசியோடுகலந்தும் தின்கிறார்கள். இவற்றை நசுக்கினல் உடம்பிலிருந்து பால்போன்ற வெண்மையான திரவம் வெளிப்படும்.

இவ்வாறு உற்பத்தியாகும் எறும்புகளின் முயற்சியும், தொழிலும், வாழ்க்கையும் மிக அதிசயிக்கக்கூடியவைகளா யிருக்கின்றன.

தூரத்திலுள்ளபொருளையும் எளிதில் அறிந்துகொள்ளும் சக்தி எறும்புக்கு அதிகமாகஉண்டு. எறும்பானது, தனக்கு விருப்பமானபொருள் எவ்வளவு தூரத்திலிருந்தாலும் அதை மோப்பத்தினலறிந்து, பல எறும்புக்கூட்டங்களை அங்கே அழைத்துக்கொண்டுபோய்விடும். எறும்புகளுக்குத்தொழில் சுறுசுறுப்பும், ஊக்கமும் அதிகமாக உண்டு. இரைதேடும் சமயங்களில் சிறிதும் சோம்பியிராமல் சுறுசுறுப்போடு அலைந்துதிரியும். ஓர்எறும்பு ஓரிடத்தில் உணவுப்பொருள் ஒன்றைக்கண்டால், அதுதன்னல் இழுக்கமுடியாததாயிருந்த போதிலும் ஊக்கத்தைவிடாமல் அதைஇழுத்துக்கொண்டு போகத்தொடங்கிவிடும். அப்பொருள் இருந்தஇடத்தைவிட்டு நகராவிட்டாலும் அதைச்சுற்றிச்சுற்றி இழுத்து அசைத்துக் கொண்டிருக்கும். பின்னர் மற்ற எறும்புகளுக்கு ஆச்சமாச் சாரம் எட்டி அவைகள்வந்து அதனேடுகூடி அப்பொருளை இழுத்துக்கொண்டுபோய்விடும். எறும்புகளுக்கு இனவொற் றுமை அதிகமாகஉண்டு. ஒன்றுசெய்யத்தொடங்கும் காரியத் திற்கு மற்ற எல்லாம் இசைந்திருக்கும். இதனலேயே இவ் வெறும்புகள் எந்தக்காரியத்திலும் வெற்றியடைகின்றன.

கோடைகாலத்தில் எறும்புகள் சுறுசுறுப்போடு வேலை செய்து உணவைச்சேர்த்துக்கொள்ளும்; மழைகாலத்தில் வெளியேறுமல் புற்றுக்குள்ளிருந்து உணவருந்திச் சௌக்கியமாக நித்திரைசெய்துகொண்டிருக்கும். இந்த

எறும்புகள் பிரயாசைப்பட்டுப் புற்றில் சேர்த்துவைத்த தானியங்களைச் சில வேடர்கள் தோண்டியெடுத்துக்கொள்வார்கள்.

எறும்புகள் தம் பகைவரைக்கண்டித்து அகற்றுவதில் மிகவும் ஊக்கமுடையன; மனிதராவது, வேறுபிராணிகளாவது தாங்கள் வசிக்குமிடத்தில்வந்து தங்களுக்கு இடையூறுசெய்யத்தொடங்கினால் அம்மனிதரையும், பிராணிகளையுங்கடித்துத் துரத்தும்; கட்டெறும்பு, சிற்றெறும்பு, முயிற்றெறும்பு, சூகையெறும்பு முதலியவைகளே கடிப்பதில் சிறந்தவை; முயிற்றெறும்பும், சூகையெறும்பும் கடித்தால் மிகுந்தகடுப்புண்டாகும்; பேய்க்கால் எறும்புமுதலிய சில இனங்கள்கடிக்கமாட்டா.

எறும்புகளில் இராஜா இராணிஎறும்புகள், மற்ற ஆண், பெண்களாகிய அடிமையெறும்புகளுக்குத் தலைமையாயிருந்து அவை தம் கட்டளைப்படி நடக்குமாறு அவற்றை அடக்கியாண்டு அரசுபுரிகின்றன; புற்றுண்டாக்கல், இரைதேடல், இராஜாஇராணிகளையும், முட்டைகுஞ்சுகளையும் காப்பாற்றல் முதலிய வேலைகளையெல்லாம் அடிமையெறும்புகள் செய்யும். தலைமையெறும்புகள் பல ஒன்றுசேர்ந்துசென்று சிறிய எறும்புகளை அடக்கி அடிமையாக்கிக்கொண்டுவந்து தமக்குக் குற்றேவல்புரியும்படி செய்கின்றன. இவ்விவரங்களை உயிர்நூற்புலவர்கள் தங்கள் ஆராய்ச்சியால் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

அடிமையெறும்புகளில் சண்டையெறும்புகள் எதிரி எறும்புகளைக்கண்டால் யுத்தமுறைப்படி சண்டையிடும்;

சண்டையிடும் இரண்டெறும்புகளில் ஒன்றிறந்தால்மாத் திரந்தான் சண்டைநிற்கும்; இறந்த எறும்பைப் பலசிற்றெ றும்புகள் இழுத்துக்கொண்டுபோய் அடக்கஞ்செய்யும்.

காவல்எறும்புகள் எதிரிகளால் தீங்குநேராதபடி புற்றைக் காத்துக்கொண்டிருக்கும். துப்பறியும் எறும்புகள் வெளியிற் சென்று ஆகாரமிருக்குமிடங்களையும் எதிரிகளின் இரகசியங்க ளையும் அறிந்துவந்து தம்தலைமையெறும்புகளுக்குத் தெரிவிக் கும்.

பயிரிடும்எறும்புகள், காலமறிந்து நிலத்தைக்கிண்டிப் பண்படுத்தி, அதில், சீக்கிரத்தில் பலன்தரத்தக்க ஒருவகை தானியத்தை விதைத்துப்பயிராக்கிக் களையெடுத்து, அப் பயிரில் கதிர்உண்டாகி விளைந்தவுடன், அதிலுள்ள தானி யங்களைத் தம்முடைய புற்றில் கொண்டுபோய்ச் சேர்த்து வைக்கும்.

பசுஎறும்புகள், பெரும்பான்மையும் புல், பூண்டுகளின் இலைகளிலும், மலர்களிலும், செடிகளின்தண்டுகளிலும், வேர் களிலும் பசுமைநிறமுடையனவாய்ச் சிறுவண்டுகளைப்போன்ற உருவம் பெற்றுத் தங்கியிருக்கும்; இவற்றைப் பச்சை ஈ என்றும், செடிப்பேன் என்றும் மனிதர் சொல்வார்கள்; தேன் எறும்பென்று சொல்வதுமுண்டு. இந்தத் தேனெறும்புகள், மெக்ஸிகோ தேசத்தில் அதிகமாக இருக்கின்றன. இவ் வெறும்புகளை அத்தேசத்தினர்சேர்த்து விற்று வியாபாரம் செய்வதுமுண்டு. அவர்கள் இந்தஎறும்புகளினால் இனிய ஒரு வகைப் பானத்தைஉண்டாக்கிப் பருகுகின்றார்கள். இந்த

எறும்புகள் மரம், செடி, கொடி, மலர் முதலியவற்றைக் கடித்து அவற்றின்சாரத்தைஉறிஞ்சும்; அந்தச்சாரம் தேனாக மாறி இவ்வெறும்புகளின் உடலில்உள்ள பைகளில்தங்கிப் பின்புறத்தில்இருக்கும்; இரண்டுகுழாய்களின்வழியாக வடிந்து கொண்டிருக்கும். அந்தத்தேனைப் பேயெறும்புகள்—இராஜா ராணிகளாகிய தலைமையெறும்புகள்—தமக்குவேண்டும்போது பருகுகின்றன. அதற்காக அவைகள், இப்பசுவெறும்புகளைப் பாதுகாத்துத் தேனைச்சேகரிக்கும்படி ஏவிக்கொண்டிருக்கின்றன.

குடைபிடித்துச்செல்லும் எறும்புகள் எங்காவது பிரயாணஞ்செய்யும்போது தம்மீது வெயில் படாமலிருக்கும்பொருட்டு ஒருவிதமான இலையை வாயினால்பறித்துப் பிடித்துக்கொண்டு செல்கின்றன. அந்தஇலை குடையைப் போன்று அவற்றிற்குநிழலைத்தருகின்றது.

பொதுவாக எறும்புகள் எங்குச்சென்றாலும் ஒரே கூட்டமாக ஒரேவழியில் ஒன்றன்பின் ஒன்றாகவே ஒழுங்கு தவறாமல் செல்லும்; அதனால் இவைசெல்லும்பாதையில் உள்ள கருங்கல்லும் தேய்ந்து ரோட்டைப்போல் அதில் வழியேற்பட்டுவிடுகின்றது. இதுபற்றியே, 'எறும்பூரக்கல்லுந் தேயும்' என்ற பழமொழி ஏற்பட்டிருக்கின்றது.

இன்னும் இவ்வெறும்புகள், தங்களுக்கு அபாயம்வருங் காலத்தில் முன்ஜாக்கிரதையாக அந்த ஆபத்தினின்றும்நீங்கித் தப்பிக்கொள்கின்றன: எறும்புப்புற்றின்மேல் வெள்ளம்ஏறிப் பரவத்தொடங்கிவிட்டால் உடனேஎறும்புகளெல்லாம் . புற்றின்மேல் ஒன்றுசேரும்; சிறியஎறும்புகள் ஒன்றையொன்று

பற்றித் திரளும்; பிறகு பெரியஎறும்புகள் அவற்றைச்சூழ்ந்து பற்றிக்கவிந்துகொள்ளும். எல்லாக்கூட்டமும்சேர்ந்து ஒரு பந்தைப்போலாகிவிடும்; வெள்ளம் புற்றைமூடிச் செல்லும் போது அந்த எறும்புக்கூட்டப்பந்து தண்ணீரில் மிதந்து சென்று எங்கேனும் மேட்டுநிலம் அகப்பட்டபோது அதில் தங்கிவிடும். பின்னர் அப்பந்திலிருந்து எறும்புகள் தனித் தனியாகப்பிரிந்துசென்று பிழைத்துக்கொள்ளும். புற்றைச் சுற்றித் தண்ணீர்நிலையாக நின்றுவிடுமானல் பந்துபோல் திரண்ட அவ்வெறும்புகள் அவ்விடத்திலேயே மிதந்துகொண் டிருந்து தண்ணீர் வற்றியபின் மீண்டும் புற்றிற்புகுந்து வாசஞ்செய்யும்.

இந்த எறும்புக்கூட்டங்களில் சிலவகைகளால் மனி தர்க்குத் தீங்கொன்றுமில்லை; சிலஎறும்புகள் கடிப்பதால் மாத்திரம் உபத்திரவத்தைச்செய்கின்றன. சில எறும்புகளால் பெருந்தீங்குண்டாகிவிடுகின்றது: வெள்ளெறும்பினமாகிய செல்—கறையான்—எறும்புகளில் சிறியஎறும்புகள், மனிதர் வாசஞ்செய்யும் கூரைவீடுகளையும், மரத்தாற் செய்யப்பட்ட பொருள்களையும், ஓலை, புல் முதலியவற்றால் செய்யப்பட்ட பொருள்களையும், புத்தகங்களையும் நாசஞ்செய்துவிடுகின்றன; பெருந்தலைக்கறையான் என்னும் பேயெறும்பு பயிர்களை நாசஞ்செய்துவிடுகின்றன. இவ்வகைக் கெடுதிகளைச்செய்யும் எறும்புகளைஒழிக்க நம்நாட்டிலுள்ளவர்கள் எத்தனையோ முயற்சிகளைச் செய்துபார்க்கின்றனர். இவர்கள் எதிலும் வெற்றிபெறல்முடியவில்லை.

ஆப்பிரிக்காவிலுள்ள வெருட்டெறும்புகள் மிகக்கொடுஞ் செய்கையுடையன; மனிதர்க்குப் பெருந்தீங்கைவிளைவிக்கச்

கூடியன. ஆதலின் அந்நாட்டிலுள்ளவர்கள் அந்த எறும்புக் கூட்டங்களைத் தம் ஊருக்கருகில் கண்டால் அப்பொழுதே ஒழிக்கமுயன்று அவற்றின் புற்றின்மேல் சருகுகளைக்குவித்து நெருப்பைமூட்டிவிடுவார்கள். அவ்வாறு தீயைக்கொளுத்தி னாலும், அந்நெருப்பால் அவற்றில் சிலஎறும்புகள்தான் அழியும்; பெரும்பான்மையான எறும்புகள், அந்நெருப்பி னின்றுந் தப்பிப்பிழைத்து மரங்களில் ஏறிக்கொள்ளும். அப்படிஏறியதைப்பார்த்த மனிதர் சிலசமயங்களில் அம் மரங்களின் அடிப்பாகங்களைச்சுற்றிலும் நெருப்பைக் கொளுத்தி எரிப்பார்கள்; அப்போது அவ்வெறும்புகளெல்லாம் ஒன்றுகத்திரண்டு அம்மரங்களில்உள்ள ஒருபக்கத்துநுனிக் கிளையைஅடையும்; பிறகு சிலபெரிய ஆண் எறும்புகள் அங் கிருந்து ஒன்றையொன்று பற்றித் தரைமட்டம்வரையில் சங்கிலியைப்போன்று தொங்கும். மற்ற எறும்புகளெல்லாம் அச்சங்கிலியின்வழியாகக் கீழே இறங்கிச்செல்லும்; எல்லாம் இறங்கியபின்பு சங்கிலித்தொடராக தொங்கிய எறும்புகள் அடிப்பக்கத்திலிருந்து ஒவ்வொன்றுகக் கீழே குதித்துச் சென்றுவிடும்.

இன்னும் இவ்வெறும்புகள் மரத்திலிருக்கும்போது அம்மரத்தைத்தண்ணீர் சுற்றிக்கொண்டு நிலையாக நின்று விட்டால், மேற்கூறியபடியே சிலஎறும்புகள் மரத்திலிருந்து நீர்மட்டம்வரையில் சங்கிலித்தொடர்போல் தொங்கி நீர் மட்டத்தையடைந்தவுடன் தண்ணீரின்மேலும் ஒன்றை யொன்றுபற்றிக் கயிற்றைப்போல் கரைவரையில் மிதந்து கொண்டிருக்கும்; மற்ற எறும்புகள் அத்தொடரின் வழியாக

இறங்கித் தண்ணீரையும்கடந்து கரையைஅடைந்துவிடும். பின்னர், சங்கிலித்தொடராகியிருந்த எறும்புகள் ஒவ்வொன்றாகப் பிரிந்து நீரில் மிதந்துசென்று கரையிற்சேர்ந்துவிடும்.

இவ்வெறும்பினங்களில் சிலவகைகளால் மனிதர்க்குத் தீங்குண்டானாலும் இவற்றின் அறிவையும், சுறுசுறுப்பையும், தொழிலையும், தந்திரங்களையும், தங்கள் வாழ்க்கையைநடத்தும் ஒழுங்குகளையும்பார்த்து அறிவுடையோர் இவற்றை மிகவுங் கொண்டாடுகின்றனர்; சிலவகைஎறும்புகளுக்கு இரைகளையும் தூவுகின்றனர். இவற்றிற்கு ஆகாரமாகும்பொருட்டே அரிசி மாவைக் கொண்டு தெருக்களில் கோலமிடும்வழக்கத்தை நம் நாட்டிலுள்ள பெரியோர்கள் ஏற்படுத்தியிருக்கின்றார்கள்.

கறையான்—செல்—வகைகளும் எறும்பினத்தைச் சேர்ந்தவைகளெனினும், சிலர் கறையான்இனத்தை வேறாகவும், மற்ற எறும்பினங்களை வேறாகவும் மதிக்கின்றனர்.

இந்த எறும்புகளின் வாழ்க்கையை மனிதர் நன்றாகக் கவனித்தால், இவற்றினிடமிருந்து சில நல்ல அறிவுகளைக் கற்றுக்கொள்ளலாம். எறும்புகளுக்குள்ள அறிவு சில மனிதர்களுக்கில்லை.

---

## 15. தமிழர் பெருமை

தமிழர் மிகப்பழமையும், பலவகைச்சிறப்புக்களுமுடையவர்கள். இவர்களுடைய பழமையையும், சிறப்புக்களையும் விளக்குதற்குப் பலவகை ஆதாரங்களிருக்கின்றன.

பாண்டிநாட்டுப் பழைய இராஜதானியாகிய 'கொற்கை' என்னும் நகரம் வாணிகத்துக்கு முக்கியதலமாக கிரீக், உரோம் முதலியதேசங்களின் மிகப்பழைமையான குறிப்புப் புத்தகங்களில் குறிக்கப்பட்டிருக்கிறதென்றும், தமிழர்கள் கி. மு. 3000 ஆண்டுகளுக்கு முன்னிருந்து 1500 ஆண்டுகளுக்குமுன்வரை கிரேக்கர், உரோமர், சீனர், பீனிசியர், அரேபியர் முதலியவர்களோடு வாணிகம்முதலியன நடத்திவந்திருக்கிறார்களென்றும், சில ஆராய்ச்சிக்காரர்கள் கூறுகின்றார்கள். நெடுங்காலத்துக்குமுன்னிருந்த 'இசுபீயன்' என்பவர் எழுதிய சரித்திரத்தில் பாண்டியன், உரோம் தேசத்துச்சக்கரவர்த்தியாகிய, 'அகசுடசு' என்பவருக்குச் சிலபொருள்களை அனுப்பினனென்பது கூறப்பட்டிருக்கிறது. கி.மு. 27முதல் கி. பி. 441 வரையில் உள்ள ஆண்டுகள் குறிக்கப்பட்ட உரோம்தேசத்து நாணயங்கள் மதுரையிலும், மலையாளத்திலும் மண்ணிற்குள்ளிருந்து கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. பண்டைத்தமிழ்நூல்களும் தமிழ்நாடு நெடுங்காலத்துக்கு முற்பட்டதென்பதை விளக்குகின்றன. இவற்றால் தமிழர் மிகப்பழமையானவர்களென்பது தெளிவாகின்றது.

தமிழர் அரசுசெலுத்துவதில் திறமைவாய்ந்தவர்கள். சேரர், சோழர், பாண்டியர் என்னும் மூவேந்தர்களும், பற்பல சிற்றரசர்களும் நீதியுடன் அரசுசெலுத்தி வந்திருக்கின்றார்கள். பெண்மணிகளுள்ளும் மணலூர்ச் சித்திராங்கதன் குமாரியாகிய சித்திராங்கதை (அல்லியரசி), மதுரைக்கரசிமங்கம்மாள், சிவகெங்கைக் காத்தமஇராணி முதலியவர்கள் அரசு

புரிந்திருக்கிறார்கள். வீரத்திலும் தமிழர் சிறந்தவர்கள்; பெண்மக்களும் மிகுந்தவீரச்செயல்களைக்காட்டி வந்திருக்கின்றனர்.

பாண்டியர்கள் மதுரையில் முதல், இடை, கடை என்னும் மூன்று தமிழ்ச்சங்கங்களை ஏற்படுத்தித் தமிழையும், தமிழ்ப்புலவர்களையும் ஆதரித்துவந்திருக்கிறார்கள். தமிழ்நாட்டில் பல்லாயிரக்கணக்கான புலவர்கள் வாழ்ந்துவந்திருக்கின்றனர்; தமிழ்நாட்டுப் பெண்மணிகளுள்ளும் பலர்தமிழ்ப் புலமை பெற்றுச் சிறப்படைந்திருக்கின்றார்கள். காவியங்களும் நீதிநூல்களும், இசைநூல்களும், நாடகநூல்களும், சிற்ப நூல்களும் ஆகிய எண்ணிறந்த நூல்கள் வெளிவந்திருக்கின்றன. இந்த நூல்களால் தமிழர் கல்வியிற் சிறந்தவர்களென்பதையுணரலாம்.

இன்னும் தமிழ் நாட்டில் கற்பிற்சிறந்த பல பெண்மணிகள் தோன்றியிருக்கின்றார்கள். கண்ணகி, தன்நாயகன் கோவலனைக் கொல்வித்த பாண்டியன் நெடுஞ்செழியன்மீது கோபங்கொண்டு கற்பின்மகிமையால் மதுரையை எரித்தாள்; நெடுஞ்செழியன் இறந்ததையுணர்ந்து அவன்மனைவி கோப்பெருந்தேவி உயிர்விட்டாள்; பூதப்பாண்டியன் இறந்தபோது அவன் மனைவி தீயிற்பாய்ந்திறந்தாள். இவர்கள் கதைகளால் இங்குபல பதிவிரதைகள் இருந்தார்களென்பது விளங்கும்.

நீதியிலும் தமிழர் உயர்ந்தவர்களாவார்கள். சிவலிங்க சோழன் என்பவன் தன்மகனுடைய தேர்க்காலில் பசுவின் கன்று நசுங்குண்டிறந்ததற்காக அவனைத் தேர்க்காலில் இட்டு நசுக்கும்படி கட்டளையிட்டான். இவன் சரிதையால் தமிழர் நீதியுடையவரென்பதை உணரலாம்.

நட்பிலும் தமிழர் மேம்பட்டவர்கள். கண்ணகனார் என்னும் புலவர் தம்நண்பர் இறந்ததுகண்டு தாமும் உயிர்விட்டார்;

பொத்தியார் என்னும்புலவர் தம்நண்பனுகிய கோப்பெருஞ் சோழன் இறந்ததுபொருமல் தாமும் இறந்தார்; சீனக்கமுதலி யார் இறந்தபோது அவருடன் நண்பராயிருந்த பொய்யா மொழிப்புலவர் ஈமத்தில் அவருடன் படுத்து உயிர்விட்டார்.

இன்னும் தமிழர் இரக்கச்சித்தமுடையவர்கள்: சோழன் குளமுற்றத்துஞ்சியகிள்ளிவளவன், மலையமான்மக்களை யானைக் காலால் இடறுவித்துக்கொள்ளத் தொடங்கிய காலத்தில் கோவூர்கிழார் அவர்களுக்கிரங்கி அச்சோழனைச் சமாதானப் படுத்தி அப்பிள்ளைகளைக் காப்பாற்றினர்.

தமிழர் பொறுமையிற் சிறந்தவர்கள்: சேரமாண்டார் என்னும் சேரதேசாதிபதி, தன்காவல் மரத்தைவெட்டித் தன்னை அவமதித்த சோழனுடைய ஏவலாளனைத்தண்டியாமல் விடுத்தனன். இன்னும் இவனைப்போல் பொறுமைகாட்டியவர் பலருண்டு.

தமிழ்ப்புலவரிடத்து 'அபிமானங்காட்டுவதிலும் தமிழர் மிகச்சிறந்தவர்கள்: சேரமான்தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும் பொறைஎன்பவன், தன்கட்டிலில் அறியாமல்படுத்து நித்திரை செய்த மோசிகீரனுர் என்னும் புலவரைக் கோபியாமல் கவரி கொண்டு அவருக்கு விசிறினன். தொண்டைநாட்டுப் பெரு நகரென்னும் ஊரிலிருந்த, 'பச்சையப்பமுதலியார்' என்பவர், தம்மைமக்காணவந்த ஒரு புலவரின் பல்லக்கை சுமந்து அவரை அழைத்துச்சென்று உபசரித்தனர்.

வியாபாரத்திலும் தமிழர்மேம்பட்டவர்கள்: பண்டைக் காலத்தில் வணிகத்திற்கனுகூலமாகிய கப்பல்களும், கலகங்கரை விளக்கங்களும் (கப்பலை அழைக்கும் விளக்குகள்) கப்பல் துறைமுகங்களும் தமிழ்நாட்டில் இருந்தனவென்பதும், தமிழர் கிரேக்கர், உரோமர், சீனர்முதலியவர்களோடு வியா

பாரம் நடத்திவந்தார்களென்பதும் தமிழ்நூல்களாலும், கிரேக்கர் நூல்களாலும் வெளியாகின்றன.

கைத்தொழிலிலும், சிற்பத்தொழிலிலும் தமிழர் சிறந்தவர்கள்: பாலாடைபோன்ற மெல்லிய நூலாடைகளும் பல வர்ணப்பட்டாடைகளும், பொன்னிழைஆடைகளும் தமிழ் நாட்டில் நெய்யப்பட்டனவென்பது தமிழ் நூல்களால் வெளியாகின்றது; இப்பொழுதும் தமிழர் நெசவுத்தொழிலில் கைதேர்ந்தவர்களாயிருக்கின்றார்கள்; தமிழர்களால் செய்யப்பட்ட பல அருமையான சிற்பவேலைகள் பழைய கற்கட்டிடங்களிற் காணப்படுகின்றன.

பயிர்த்தொழில் செய்வதிலும் தமிழர் சிறப்புற்றவர்கள்: தமிழ்க்காவியங்களில் கூறப்பட்டிருக்கும் நாட்டுச்சிறப்புக்களாலும், இப்பொழுதும் காணப்படும் நன்செய்நிலங்கள், புன்செய்நிலங்கள், தோட்டங்கள், ஏரிகள், கால்வாய்கள், ஆறுகள் முதலியவற்றின் அமைப்புகளாலும் தமிழர் விவசாயத்தில் சிறந்திருந்தார்களென்பது விளங்கும்.

இசையிலும், நாடகத்திலும், தமிழர்சிறந்தவர்கள்: இசைநுணுக்கம், கூத்தநூல் முதலியஇசைநாடகநூல்கள் இருந்தனவென்பது தமிழ் நூல்களில் காணப்படுவது கொண்டு தமிழர் அவற்றிற் சிறந்திருந்தார்களென்பது துணியப்படும்.

இன்னும் தமிழர் மருத்துவத்திலும், யோகத்திலும், ஞானத்திலும், தெய்வபக்தியிலும், தானதருமங்களிலும், சிறந்தவர்கள். அங்ஙனம் இவற்றில் சிறந்திருந்தார்களென்பதை சித்தர்கள் இயற்றிய மருத்துவ யோக ஞானநூல்களாலும்,

தெய்வபக்தியுடையாரின் சரித்திரங்களாலும், அவர்களால் கட்டப்பட்டிருக்கும் கோவில்களாலும், தருமசிந்தனையுடையாரால் அமைக்கப்பட்டிருக்கும்சத்திரங்கள்முதலியவற்றாலும் உணரலாம்.

நாகரீகத்திலும் தமிழர்மேம்பட்டவர்: பண்டைக்காலச் சிற்பவேலைகளில் அக்காலத்தமிழரின் உயர்ந்தநடையுடை பாவனைகளெல்லாம் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றைக் கொண்டு தமிழர் மிக்க நாகரீகமுடையவர்களென்பதை உணர்ந்துகொள்ளலாம்.

தமிழர் பண்டைக்காலத்தில் செல்வத்திலும் சிறந்திருந்தார்கள். இதனை, இப்பொழுது பூமிக்குள் புதையுண்டிருந்து காணப்படும் பணப்புதையல்களாலும், இரத்தினுபரணங்களாலும், வேறுபலஉயர்ந்த பொருள்களாலும் உணர்ந்துகொள்ளலாம்.

இன்னும் வானசாஸ்திரம், பூமிசாஸ்திரம் முதலியவற்றிலும் தமிழர் சிறந்திருந்தார்கள். இதனையும் தமிழ்நூல்களால் உணரலாம்.

இன்னும் பண்டைக்காலத்திலிருந்த தமிழர்கள் நாட்டு ஆட்சி, கிராமஆட்சி முதலியவற்றைமிக்க ஒழுங்காக அமைத்திருக்கின்றார்கள். தமிழ்நாட்டைப்பல சிறுநாடுகளாகப்பிரித்து அவற்றிற்குத்தலைவரை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். கிராமங்களில் ஒன்பது தொழிலாளிகளையும், பஞ்சாயத்தார்களையும், பொதுமன்றங்களையும் ஏற்படுத்தியிருந்தார்கள். கிராமத் தொழிலாளிகளால் குடியானவர்களுக்குரிய வேலைகள் ஒழுங்காக நடைபெற்றுவந்தன; பஞ்சாயத்தார்களால் கிராமங்களில் உண்டாகும் வழக்குகள் பொதுமன்றங்களில் தீர்க்கப்பட்டுவந்தன; நாடுகளில் நடக்கவேண்டிய பெருங்காரியங்களை

நாட்டுத்தலைவர்கள் கவனித்துவந்தார்கள். அவர்களுக்குமேல் அரசர்களிருந்து நாடுகள் முழுவதிலும் ஆட்சியைச்செலுத்தி வந்தார்கள். இந்தவழக்கங்களில் சில இப்பொழுதும் கிராமங்களிலும், நாடுகளிலும் நடைபெற்றுவருகின்றன.

இன்னும் பல நற்குணங்களிலும், நற்செயல்களிலும் தமிழர் சிறந்தவர்கள். இவர்கள் பெருமைமுழுதும் அளவிட்டுச்சொல்லுதல் அரிதாம்.

---

## 16. அறம்

அறம் என்பது, தருமமாம். மனிதர், பிறருக்குத் தம் பொருளைக் கொடுப்பதே தருமமென்று சொல்லப்படும். பொருள்கொடுப்பதோடு வேறுவகை உபகாரங்களைச் செய்வதும் தருமமேயாம். பொதுவாகப் பொருளைக்கொடுப்பதும், வேறுவகை உபகாரங்களைச்செய்வதும் தருமமென்று சொல்லப்படினும் நம் பெரியார் இதில், தானம், தருமம் என்று இரண்டுபிரிவுகளை உண்டாக்கியிருக்கிறார்கள். குருடர், முடவர், சிறு குழந்தைகள், தரித்திரர், பிணியாளர், முதியவர் ஆகியவர்களுக்கும் அன்னமளித்தல் முதலியவற்றைச் செய்தல் தானமென்று பெரியோரால் கூறப்படுகின்றது; குளம் கிணறு வெட்டல், ஏழைகளுக்கு அன்னச்சத்திரம், கல்விச்சாலை,வைத்தியசாலை முதலியவற்றை அமைத்தல், மரங்களை வைத்தல் முதலிய செயல்களைக்கொண்டிருப்பது தருமமென்று சொல்லப்படுகின்றது. இப்புண்ணியச் செயல்கள், செய்கையால் இவ்வாறு இருவகைப்படினும், தன்மையால் ஒன்றுகி

எல்லாம் தருமம் என்ற ஒன்றிலேயே அடங்கும். இது குறித்தே உலகத்தில் பெரும்பான்மையோர் புண்ணியச் செயல்களெல்லாவற்றையும் தருமம் என்றே கூறுகின்றார்கள். இது ஸ்மிருதியும் உலகவழக்கில் இருக்கிறது.

மனிதர் முக்கியமாக அடையவேண்டிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகைப் பொருள்களில் இத் தருமமே சிறந்ததாகும்; அதனாலேயே மேற்கூறிய நான்கு பொருள்களிலும் இது முதலில் வைக்கப்பட்டிருக்கிறது.

ஆதலின், மனிதராய்ப்பிறந்தவர்கள், 'தீ வினை விட்டு ஈட்டல் பொருள்" என்றபடி நல்ல வழியில் பொருளைத்தேடி அதைக்கொண்டு தருமம் செய்ய வேண்டும். பொருள் பெற்றதால் மனிதர் அடையும் பயன் தருமம் செய்வதேயாம். தருமம் செய்வதற்காகவே கடவுள் மனிதர்க்குப் பொருளைக் கொடுத்திருக்கிறார்; அப்பேர்ப்பட்ட பொருளை மனிதர் தரும நெறியிற் செலவிடாமல் வேறு கெட்டவழிகளில் செலவு செய்வார்களேயானால் கடவுளால் தண்டிக்கப்படுவார்கள்.

பொருளைக்கொண்டு மனிதரால் செய்யப்படும் தருமச் செயல்கள் பலவகைகளாக அமைந்திருக்கின்றன.

தருமஞ்செய்யும் மனிதர் அதற்குக் கருத்தாக்களாயிருப்பதால் அது தட்டில்லாமல் நடைபெறுவதற்கு அவர் உடம்பும், அவர் குடும்பமும் நல்ல நிலையிலிருக்கவேண்டும். ஆதலின், அவர்கள், தங்கள் உடம்பின் பாதுகாப்புக்காகவும், குடும்பப் பாதுகாப்புக்காகவும் தங்களுக்குக் கிடைக்கும் பொருளில் முக்கால் பங்கை வைத்துக்கொண்டு, 'வருவாயில் கால் வழங்கி'

என்ற நியாயப்படி காற்பாகத்தைத் தருமத்திற்குச் செலவிட வேண்டும். தருமஞ்செய்வதாலும்,செய்வோரின் ஆத்மாவுக்கே நன்மையுண்டாகிறது. ஆதலின், பொருளால் இரண்டுவகைகளில் ஏற்படும் பயன்களும் தருமஞ்செய்யும் மனிதருக்குச் சாருகின்றன.

இங்குக்கூறியபடி தருமத்திற்கு ஒதுக்கப்படும் காற்பங்கு பொருளிலிருந்து, பலபிராணிகளுக்கு, உபயோகமாம்படி ஏரி, குளம் முதலிய நீர்நிலைகளை உண்டாக்கல்வேண்டும். பிரயாணிகள் சிரமமின்றிச்செல்வதற்கும், தங்கிஇளைப்பாறுவதற்கும் மரங்கள்நிறைந்தசாலைகளையும், சோலைகளையும் உண்டாக்கவேண்டும். வழிகளில் தண்ணீர்ப்பந்தல்களை ஏற்படுத்த வேண்டும்; வைத்தியசாலைகளை ஏற்படுத்தி ஏழைப்பிணியாளர்க்கு நல்லவைத்தியர்களைக்கொண்டு பிணிதீர்க்கும்படி செய்தல்வேண்டும்; ஆடு, மாடு, குதிரை, முதலிய பிராணிகளுக்குண்டாகும் நோய்களை அகற்றும்படி பிராணிவைத்திய சாலைகளை அமைத்தல்வேண்டும்; தொழில்செய்யச் சக்தியற்றிருக்கும் கூனர், குருடர், முடவர், பிணியாளர், முதியோர், முதலியவர்களுக்கும் அன்னம், ஆடை முதலியனகொடுத்து அவர்களை ஆதரிக்கவேண்டும்; நோய்கொண்டு வைத்திய சாலைக்கு வரமுடியாமல் வீட்டில்படுத்திருக்கும் ஏழைகள்மீது இரக்கங்கொண்டு அவர்கள் இருக்குமிடத்திற்கு வைத்தியரை அழைத்துக்கொண்டுபோய் அவர்களுக்கு வைத்தியம்பண்ணும்படி செய்தல்வேண்டும்; உணவு, ஆடை முதலியவைகளும்உதவவேண்டும்.பசித்துவந்துஅன்னம்கேட்டவர்களுக்கு இல்லையென்னமல் உணவளிக்கவேண்டும். வேலைசெய்யச் சக்தியிருந்தும் வேலைகிடைக்காமல் வருந்தும்ஏழைகளுக்கு

வேலைகொடுத்து அதன்மூலம் அவர்கள்பிழைக்கும்படி செய்தல்வேண்டும்; தம்மிடம் இருக்கும் வேலைக்காரருக்குப் பல உதவிகளைச்செய்து அவர்கள் குடும்பம் விருத்தியாகும்படி செய்தல்வேண்டும். தொழில்செய்யப் பணமில்லாத ஏழைகளுக்குப் பணஉதவிசெய்து அவர்கள் தொழில் நடத்தும்படி செய்தல்வேண்டும். வறுமையால் துன்பப்படும் கல்விமான்களுக்கு வேண்டுவனகொடுத்து அவர்களுடைய வறுமைத் துன்பத்தைப் போக்கவேண்டும்; திக்கற்றகுழந்தைகளையும், ஆதரவற்ற விதவைகளையும் காப்பாற்றவேண்டும்; அனாதைப் பிணங்களைஎடுத்து அடக்கம் செய்யவேண்டும்; பொதுவாக யாருக்கேனும் ஆபத்துநேர்ந்தால் அதைநீக்கவேண்டும். இன்னும் நியாயமாகச் செய்யத்தக்கதருமங்கள் எவைஎவையுண்டோ அவற்றையெல்லாம் சமயமறிந்துசெய்யவேண்டும். தருமஞ்செய்யப் போதியபொருளில்லாதசமயங்களில் மேற்குறித்தவர்க்கு வாக்கினாலாவது உடம்பினாலாவது சகாயம் செய்யவேண்டும். தருமஞ்செய்யநாடுவோர் பின்னால்செய்துகொள்வோமென்றிராமல் அதை விரைந்துசெய்தல்வேண்டும்.

மேற்கூறியவர்களுக்குப் பொருள் கொடுக்கும்போது முகமலர்ச்சியோடு இனிய வார்த்தைகள்கூறிக் கொடுத்தல் வேண்டும். கடினவார்த்தைகள் பேசலாகாது; பிரதி பலன் குறித்தாவது, தம்மைப்பலரும் கொண்டாடவேண்டுமென்றாவது தருமஞ்செய்யக்கூடாது. தம்பெயரை வெளிக்குக்காட்டிக்கொள்ளாமல் தருமஞ்செய்வதே சிறந்ததாம். சிலர் வேலை செய்யத் திறமையிருந்தும் அதைச்செய்துபிழைக்காமல் சோம்பேறிகளாய்ச் சாமியார்களைப்போலவும், பரதேசிகளைப் போலவும், பிச்சைக்காரர்களைப்போலவும் வேடந்தரித்து

யாசகஞ்செய்து பொருள்தேடி அதைக் கவலையின்றிச் சோறு தின்று தூங்குவதற்கும், கஞ்சா முதலிய லாகிரிவஸ்துக்களை உட்கொள்வதற்கும் உபயோகப்படுத்துவார்கள்; சிலர் தந்திரமாகப்பிறர் பொருளைக் கவர்ந்துசேர்க்கக்கருதிக் கோவில் கட்டப்போவதாகவும், குளங்கள் வெட்டப்போவதாகவும், தண்ணீர்ப்பந்தல் வைக்கப்போவதாகவும் சொல்லிக்கொண்டு அதற்காகப்பணம் வேண்டுமென்று யாசகத்திற்குவருவார்கள். இவர்களுக்கு ஒருகாசும் கொடுப்பது கூடாது. அவ்வாறு கொடுப்பதால் மிகுந்தபாவமே சேரும்.

பலர், தங்களிடம் பொருள்இருந்தும் தருமச் செயல்களைப் பகுத்துணர்ந்து, தருமமார்க்கத்தில் அப்பொருளைச் செலவிடாமல், அந்தப்பொருளால் அடையவேண்டிய பயனை இழந்துவிடுகிறார்கள். அவர்களிற் சிலர், தங்களிடம் பொருளிருந்தும் அதைக்கொண்டு தாங்கள் நல்ல உணவுண்ணாமலும், நல்ல ஆடை உடுத்தாமலும், அப்பொருளை ஏழைகளுக்குக் கொடாமலும், மற்ற தருமமார்க்கங்களிற் செலவிடாமலும், சுற்றத்தார்க் குதவாமலும் சேர்த்துப்புதைத்துவைத்துவிட்டு இறக்கிறார்கள். அப்பொருளை அவர்களுக்குக்கெட்டபிள்ளைகள் பிறந்து கெட்டமார்க்கத்தில் அழித்துவிடுகிறார்கள். பிள்ளைகள் இல்லாவிடின் வேறுபலர் அதனைக் கைப்பற்றித் தொலைத்து விடுகிறார்கள். சிலர் தருமமார்க்கத்தை இன்னதென்றுணராமல், தம்மைப்பிறர் மதிக்கவேண்டி இடம்பமான வழிகளில் பொருளைச்செலவழிக்கத்தொடங்கி, கலியாணங்களில் பாணவேடிக்கைகளிலும், வாத்தியங்களிலும் அளவுக்குமிஞ்சிப் பணத்தைச் செலவழிக்கிறார்கள்; பசியால் வருந்தும் ஏழைகளுக்கிரங்காமல்பணக்காரர்களுக்கும், இடம்பக்காரர்களுக்கும்

உயர்ந்த சாப்பாடு செய்துபோடுகிறார்கள்; அன்னச்சத்திரங்களைக்கட்டி அவற்றில், பசித்துவரும் ஏழைகளுக்கன்னமிடாமல் விலாப்புடைக்கத் தீனி தின்று ஏப்பமிட்டுவரும் சோம்பேறிகளுக்கும், பணக்காரர்களுக்கும் சாப்பாடு போடுகிறார்கள். வம்பு வழக்குகளில் பணத்தைவாரியிறைக்கிறார்கள். வேலைசெய்யத்திறமையிருந்தும் அதைச்செய்து பிழைக்காமல் இலவசச் சோறு சாப்பிட்டுத் திரியும் சோம்பேறிகளை வரவழைத்துக் கூட்டமாகச் சேர்த்து அவர்களுக்குச் சாப்பாடு போட்டுத் துட்டும்கொடுத்துப் பெருமைக்காகத் தாங்கள் பலருக்குத் தருமஞ்செய்ததாகப் பத்திரிகைகளில் எழுதி விடுகிறார்கள்; பெருமைக்காகச் சத்திரங்களைக்கட்டி அவற்றில் தங்கள் பெயர்களையும் எழுதிவைத்துவிட்டு அவற்றில் வந்து தங்குவோரிடம் குடிக்கூலி வாங்குகிறார்கள்; சிலர், தங்களிடமிருக்கும் வேலைக்காரரை வருத்தி அவர்களிடம் வேலை வாங்கிக்கொண்டு, அவர்களுக்குத் தக்க கூலி கொடாமலும், வேண்டிய உதவிகளைச் செய்யாமலும் அவர்களைத் தாழ்ந்த நிலைமையிலேயே வைத்து எப்பொழுதும் தங்களிடத்திலேயே இருந்து உழைக்கும்படி செய்கிறார்கள்; சிலர் நாடகம் முதலிய வேடிக்கைகளிற் பெரும்பொருளைச் செலவிடுகிறார்கள். இன்னும் எத்தனையோ கெட்டமார்க்கங்களில் சிலருடைய பொருள் செலவாகின்றது.

இவர்களுக்கு மிகுந்த பாவமேசேரும். இவர்கள் எவ்வுலகத்திலும் சுகம்பெற மாட்டார்கள். இவர்களுக்குக் கிடைப்பது நரகமே. மேற்கூறிய வகைகளை உணர்ந்து செய்யத்தக்க முறைப்படி தருமஞ்செய்வோரே எப்பொழுதும் நன்மையடைவார்கள்.

# செய்யுட்பாடங்கள்

# 17. நீதிநெறிவிளக்கம்

நீரிற் குமிழி யிளமை நிறைசெல்வ
நீரிற் சுருட்டு நெடுந்திரைக—ணீரி
லெழுத்தாகும் யாக்கை நமரங்கா ளென்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று. (1)

அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டு—முறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லைச்
சிற்றுயிர்க் குற்ற துணை. (2)

கல்வியே கற்புடைப் பெண்டிரப் பெண்டிர்க்குச்
செல்வப் புதல்வனே யீர்ங்கவியாச்—சொல்வள
மல்லல் வெறுக்கையா மாணவை மண்ணுறுத்துஞ்
செல்வமு முண்டு சிலர்க்கு. (3)

எத்துணைய வாயினுங் கல்வி யிடமறிந்
துய்த்துணர் வில்லெனி னில்லாகு—முய்த்துணர்ந்துஞ்
சொல்வன்மை யின்றெனி னென்னா மஃதுண்டேற்
பொன்மலர் நாற்ற முடைத்து. (4)

அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியுங் கல்லா
ரவையஞ்சா வாகுலச் சொல்லு—நவையஞ்சி
ஈத்துண்ணார் செல்வமு நல்கூர்ந்தா ரின்னலமும்
பூத்தலிற் பூவாமை நன்று. (5)

கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினு
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோன் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு. (6)

வருந்தித்தாங் கற்றன வோம்பாது மற்றும்
பரிந்துசில கற்பான் றொடங்கல்—கருந்தனங்
கைத்தலத்த வுய்த்துச் சொரிந்திட் டரிபரித்தாங்
கெய்த்துப் பொருள்செய் திடல். (7)

இன்சொல்லன் றாழ்நடைய னாயினுமொன் றில்லானேல்
வன்சொல்லி னல்லது வாய்திறவா—என்சொலினுங்
கைத்துடையான் காற்கீ ழொதுங்குங் கடன்ஞாலம்
பித்துடைய வல்ல பிற. (8)

இவறன்மை கண்டு முடையாரை யாருங்
குறையிரந்துங் குற்றேவல் செய்ப—பெரிதுந்தா
முற்பக லாேலாதார் கோற்றுரைப் பின்செல்லல்
கற்பன்றே கல்லாமை யன்று. (9)

கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லான்
மற்றோ ரணிகலம் வேண்டாவா—முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
அழகுக் கழகுசெய் வார். (10)

முற்று முணர்ந்தவ ரில்லை முழுவதூஉங்
கற்றன மென்று களியற்க—சிற்றுளியாற்
கல்லுந் தகருந் தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்தி னால். (11)

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகமகிழ்க—தம்மினுங்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லா
மெற்றே யிவர்க்குநா மென்று. (12)

கல்வி யுடைமை பொருளுடைமை யென்றிரண்டு
செல்வமுஞ் செல்வ மெனப்படு—மில்லார்
குறையிரந்து தம்முன்னர் நிற்போற் றாமுந்
தலைவணங்கித் தாழப் பெறின். (13)

ஆக்கம்பெரியார் சிறியா ரிடைப்பட்ட
மீச்செலவு காணி னனிதாழ்ப—தூக்கின்
மெலியது மேன்மே லெழச்செல்லச் செல்ல
வலிதன்றே தாழுந் துலைக்கு. (14)

தன்னை வியப்பிப்பான் றற்புகழ்த றீச்சுடர்
நன்னீர் சொரிந்து வளர்த்தற்றாற்—றன்னை
வியவாமை யன்றே வியப்பாவ தின்ப
நயவாமை யன்றே நலம். (15)

பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டு
மறவாமே நோற்பதொன் றுண்டு—பிறர்பிறர்
சீரெல்லாந் தூற்றி சிறுமை புறங்காத்தி
யார்யார்க்குந் தாழ்ச்சி சொலல். (16)

கற்றுப் பிறர்க்குரைத்துத் தாமில்லார் வாய்ப்படூஉம்
வெற்றுரைக் குண்டோர் வலியுடைமை—சொற்றநீர்
நில்லாததென்னென்று நாணுறைப்ப நேர்ந்தொருவன்
சொல்லாமே சூழ்ந்து சொலல். (17)

பிறர்க்குப் பயன்படத் தாங்கற்ற விற்பார்
தமக்குப் பயன்வே றுடையார்—திறப்படூஉந்
தீவினை யஞ்சா விறல்கொண்டு தென்புலத்தார்
கோவினை வேலை கொளல். (18)

கற்பன வூழற்றார் கல்விக் கழகத்தாங்
கொற்கமின் றாத்தைவா யங்காத்தன்—மற்றுத்தம்
வல்லுரு வஞ்சன்மி னென்பவே மாபறவை
புல்லுரு வஞ்சுவ போல். (19)

கற்றன கல்லார் செவிமாட்டிக் கையுறாஉங்
குற்றந் தமதே பிறிதன்று—முற்றுணர்ந்துந்
தாமவர் தன்மை யுணராதார் தம்முணரா
ஏதிலரை நோவ தெவன். (20)

குலமகட்குத் தெய்வங் கொழுநனே மன்ற
புதல்வர்க்குத் தந்தையுந் தாயு—மறவோர்க்
கடிகளே தெய்வ மனைவோர்க்குந் தெய்வ
மிலைமுகப் பைம்பூ ணிறை. (21)

கண்ணிற் சொலிச்செவியி னோக்கு மிறைமாட்சி
புண்ணியத்தின் பாலதே யாயினுந்—தண்ணளியான்
மன்பதை யோம்பாதார்க் கென்னும் வயப்படைமற்
றென்பயக்கு மாணல் லவர்க்கு. (22)

குடிகொன் றிறைகொள்ளுங் கோமகற்குக் கற்றா
மடிகொன்று பால்கொளலு மாண்பே—குடியோம்பிக்
கொள்ளுமா கொள்வோர்க்குக் காண்டுமே மாநிதியம்
வெள்ளத்தின் மேலும் பல. (23)

இன்று கொளற்பால நாளைக் கொளப்பொரு
ளின்று குறையிரப்ப நேர்படான்—சென்றொருவ
னுவன கூறி னெயிறலைப்பா னறலைக்கும்
வேடலன் வேந்து மலன். (24)

முடிப்ப முடித்துப்பின் பூசுவ பூசி
உடுப்ப வுடுத்துண்ப வுண்ணு—இடித்திடித்துக்
கட்டுரை கூறிற் செவிகொளா கண்விழியா
நெட்டுயிர்ப்போ டுற்ற பிணம். (25)

ஏதிலார் யாதும் புகல விறைமகன்
கோதொரீஇக் கொள்கை முதுக்குறைவு—நேர்நின்று
காக்கை வெளிதென்பா ரென்சொலார் தாய்க்கொலை
சால்புடைத் தென்பாரு முண்டு. (26)

கண்கூடாப் பட்டது கேடெனினுங் கீழ்மக்கட்
குண்டோ வுணர்ச்சிமற் றில்லாகு—மண்டெரி
தான்வாய் மடுப்பினு மாசுணங் கண்டுயில்வ
போரா பெருமூச்செறிந்து. (27)

நட்புப் பிரித்தல் பகைநட்ட லொற்றிகழ்தல்
பக்கத்தார் யாரையு மையுறுத—றக்கார்
நெடுமொழி கோறல் குணம்பிறி தாதல்
கெடுவது காட்டுங் குறி. (28)

வாங்குங் கவளத் தொருசிறிது வாய்தப்பிற்
றூங்குங் களிறோ துயருறா—ஆங்கதுகொண்
டூரு மெறும்பிங் கொருகோடி யுய்யுமா
லாருங் கிளையோ டயின்று. (29)

களைகணுத் தம்மடைந்தார்க் குற்றுழியு மற்றோர்
விளைவுன்னி வெற்றுடப்பு தாங்கார்—தளர்நடைய
னூனுடம் பென்று புகழுடம் போம்புதற்கே
தானுடம் பட்டார்க டாம். (30)

செவிசுடச் சென்றுங் கிடித்தறிவு மூட்டி
வெகுளினும் வாய்வெரீஇப் பேரா—கவிழ்மதத்த
கைம்மா வயத்ததே பாகுமற் றெத்திறத்து
மம்மாண் பினவே யமைச்சு. (31)

பழைமை கடைப்பிடியார் கேண்மையும் பாரார்
கிழமை பிறிதொன்றுங் கொள்ளார்—வெகுளின்மன்
காதன்மை யுண்டே யிறைமாண்டார்க் கேதிலரு
மார்வலரு மில்லையவர்க்கு (32)

உறுதி பயப்ப கடைபோகா வேனு
மிறுவரை காறு முயல்ப—இறுமுயிர்க்கு
மாயுண் மருந்தொழுக்க றீதன்று லல்லனபோ
லாவனவு முண்டு சில. (33)

கால மறிந்தாங் கிடமறிந்து செய்வினையின்
மூல மறிந்து விளைவறிந்து—மேலுந்தாஞ்
சூழ்வன சூழ்ந்து துணைமை வலிதெரிந்
தாள்வினை யாளப் படும். (34)

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சா
ரெவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார். (35)

சிறிய பகையெனினு மோம்புத றேற்றார்
பெரிதும் பிழைபாடுடையர்—நிறைகயத்
தாழ்நீர் மடுவிற் றவளை குதிப்பினும்
யானை நிழல்காண் பரிது. (36)

புறநட் டகம்வேர்ப்பார் நச்சுப் பகைமை
வெளியிட்டு வேறாதல் வேண்டுங்—கழிபெருங்
கண்ணோட்டஞ் செய்யேல் கருவியிட் டாற்றுவர்
புண்வைத்து மூடார் பொதிந்து. (37)

இனியவ ரென்சொலினு மின்சொல்லே யின்னார்
கனியு மொழியுங் கடுவே—அனல்கொளுந்தும்
வெங்காரம் வெய்தெனினு நோய்தீர்க்கு மெய்பொடிப்பச்
சிங்கி குளிர்ந்துங் கொலும். (38)

நல்லா ரொழுக்கின் றலைநின்றார் நல்கூர்ந்து
மல்லன செய்தற் கொருப்படார்—பல்பொறிய
செங்கட் புலியே றறப்பசித்துந் தின்னாவாம்
பைங்கட் புனத்தபைங் கூழ். (39)

ஈகை யரிதெனினு மின்சொலினு நல்கூர்த
லோகோ கொடிது கொடிதம்மா—நாகொன்று
தீவினைக் கம்மியனால் வாய்பூட் டிடப்படின்மற்
றாவா லிவரென்செய் வார். (40)

தெய்வ முளதென்பார் தீய செயப்புகிற்
றெய்வமே கண்ணின்று நின்றொறுக்குந்—தெய்வ
மிலதென்பார்க் கில்லைதம் மின்புதல்வர்க் கன்றே
பலகாலுஞ் சொல்வார் பயன். (41)

தீய செயற்செய்வா ராக்கம் பெருகினுந்
தீயன தீயனவே வேறல்ல—தீயன
நல்லன வாகாவா நாவின் புறநக்கிக்
கொல்லுங் கவயமா போல். (42)

கொலையஞ்சார் பொய்க்காணார் மானமு மோம்பார்
களவொன்றோ வேனையவுஞ் செய்வார்—பழியொடு
பாவமிஃ தென்னார் பிறிதுமற் றென்செய்யார்
காமங் கதுவப்பட் டார். (43)

கற்புடைத் தன்பு முடித்துநாண் மெய்ப்பூசி
நற்குண நற்செய்கை பூண்டாட்கு—மக்கட்பே
றென்பதோர் செல்வமு முண்டாயி னில்லன்றே
கொண்டார்க்குச் செய்தவம் வேறு. (44)

வஞ்சித் தொழுகு மதியிலிகாள் யாவரையும்
வஞ்சித்தோ மென்று மகிழன்மின்—வஞ்சித்த
எங்கு முளனொருவன் காணுங்கொ லென்றஞ்சி
அங்கங் குலைவ தறிவு. (45)

கற்றுங் கறிதடங்கித் தீதொரீஇ நன்றாற்றிப்
பெற்றது கொண்டு மனந்திருத்திப்—பற்றுவதே
பற்றுவதே பற்றிப் பணியறநின் றொன்றுணர்ந்து
நிற்பாரே நீணெறிச்சென் றார். (46)

முற்றிற்று.

ஆவணக்காப்பக ... சென்னை-600 008
149795
YB
031.4
N30

மதுரைஜில்லா, சேம்பூர் வித்வான்
வீ. ஆறுமுகஞ் சேர்வை அவர்கள் எழுதிய

# நவீன தமிழ் வாசகப் புத்தகங்கள்

---

இப்பாடப் புத்தகங்களில் கல்வியை எளிதிற் கற்றுக்கொள்ளும் முறைகளும் வேளாண்மை செய்யும்விதங்களும், பருத்தி, புகையிலை பயிரிடும் முறைகளும் உபயோகங்களும்,கைத்தொழில் முறைகளும் தொல்காப்பியர், பெண்களின் பெருமை, முதலியவைகளும், கொக்கிப்புழுவினால் உண்டாகும் கெடுதிகளும் அவற்றை அறவொழிக்கும் மார்க்கங்களும், வியாபாரம்செய்யும் வழிகளும், பருவக்காற்றுகள் பருவங்கள், எறும்புகள், முதலியவைகளும் உலகவர்த்தமானங்களை அறிவிக்கும், சமாச்சாரப்பத்திரிகைகளும்அவற்றைவாசிப்பதனால் நாம் அடையும் பயன்களும், சங்கங்களின் அமைப்பும், நடத்தும் விதமும், கண்யசீலரான டாக்டர் நாயர் பூர்வீகவாலாறும், குடியின் கெடுதிகளும், சாரணச்சிறுவர்கள் கடமைகளும், நீராவியின் சக்தியைக்கண்டு பிடித்தவர் வரலாறும், சோப்புச்செய்யும் விதங்களும், மின்சாரத்தின் நன்மைகளும்,கிரகணங்கள் உண்டாகும் விதங்களும்காலங்களும்,நமது தேகத்தில் வியர்வையுண்டாகும் காரணங்களும்.இந்தியபார்லிமென்ட் வரலாறும் நடத்தும் முறைகளும், சிசுக்களைக்காப்பாற்றும் வழிகளும், தருமத்தின்பயனும், பானகல்அரசர் பூர்வீக வரலாறும், தமிழர்பெருமையும், புத்தமதத்தைவளர்த்த அசோகன் வரலாறும், திலகர், லாலாலஜபதிராய், தியாகராயர் சரித்திரமும், செய்யுட்பாடங்களும் ஆகிய, பல அரியவிஷயங்கள் வகுப்பிற்கேற்றவாறு தெள்ளிய நடையில் மாணவர்கள் எளிதிலுணரும்படி நன்கு அமைத்து விளக்கிக்கூறப்பட்டிருக்கின்றன.

நவீன தமிழ் வாசகப் புத்தகம் (ஆறாம் வகுப்பிற்குரியது)
விலை அணா. 7

நவீன தமிழ் வாசகப் புத்தகம் (ஏழாம் வகுப்பிற்குரியது)
விலை அணா. 8

நவீன தமிழ் வாசகப் புத்தகம் (எட்டாம் வகுப்பிற்குரியது)
விலை அணா 8

பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ்,
பப்ளிஷர்ஸ், புக்ஸெல்லர்ஸ்,
மதராஸ் & மதுரை.